

கல்கி
KALKI
27.3.1966
35
காசு



உங்கள் குழந்தை பள்ளிக்கூடம் போகத் தயார்!
ஆனுல் நீங்கள் அவனை அனுப்பத் தயாரா?

வயது : 5

ஆரோக்கியம் : மிக நன்ருகவுள்ளது

புத்தி கூர்மை : சகஜமாக இருக்கிறது

அப்படியிருந்தும் அவனை ஏன் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவில்லை? செலவுக்குப் பணமில்லையா?

நீங்கள் சேமிக்கத் துவங்க எப்போதும் தாமதமாகாது. பையனும் நல்ல பள்ளிக்குச் சேரலாம். ஆண்டு அதிகரிக்கும் போதே உங்கள் குழந்தை வளர வளர, செலவும் அதிகரிக்கும்.

இது உங்களுக்கு நியாயமாகப் படவில்லையா?

கணக்கு ஆரம்பிக்கவும் பெரிய தொகை ஏதும் தேவையில்லை. ஐந்தே ரூபாய்கள் இருந்தால் எம்மிடம் ஒரு சேவிங்ஸ் பாங்க் கணக்கு ஆரம்பித்து விடலாம்.

பிற்பாடு நீங்கள் அவ்வப்பொழுது போடும் தொகைகள் சொற்பமாக இருப்பினும் கவலை வேண்டாம். தொகை சிறியதோ, பெரியதோ, எம்மிடம் கணக்குவைத்திருக்கும் எல்லோருக்கும் ஒரேவித மரியாதை, திறமையான சேவை வழங்குகிறோம்.

உங்கள் சேமிப்புடன் கூடவே ஆண்டு தோறும் 4% வட்டியும் சேருகின்றது.

மறவாதீர்கள், சேமிக்கத் துவங்க இதுவே தருணம்.

ஞாபகமிருக்கட்டும், நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ்தான்
உங்கள் குடும்ப பாங்க்!

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

அஸோஸியேடட் பாங்குகள் : லாயிட்ஸ் பாங்க் லிமிடெட். நேஷனல் புரொவின்ஷியல் பாங்க் லிமிடெட்

HAT 3858GN/TSHS

கிளைகள் : சென்னை : 3, நார்த் பீச் ரோடு; 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, (லாயிட்ஸ் கிளை); 6, அரமனைக்காரத் தெரு; 158, மவுன்ட் ரோடு; தூத்துக்குடி : 44, பீச் ரோடு; ஹைதராபாத் : அபித் ரோட்

கல்கி

பொருளடக்கம்





நம் உள்ளத்தில் அமுதம் பெரிய நதியாக ஓடுகிறது. ஆனால் அதைக் குடிக்கும் வழி தெரியாமல் நாம் வாழ்கிறோம். பரந்த ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு தண்ணீருக்காக அழுவதைப் போலிருக்கிறது இது.

— ரால்ப் வால்டோ எமர்சன்

விசுவாவசு பங்குனி 14 ● மார்ச் 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


இன்னும் ஐந்தாண்டுகள் ஆளுவோம்
காங்கிரஸ்
முடியாது! முடியாது!
தொழிலும் வர்த்தகமும்


ஆப்பிரிக்கா- ஆசியாவில்

[redacted]



மலர் 25 ❋ இதழ் 35

சிறிய நாட்டின் சீரிய உதாரணம்

ஐரோப்பா கண்டத்திலுள்ள ஆஸ்திரியா என்னும் சின்னஞ் சிறு நாட்டு மக்கள் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். அங்கு சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் கன்ஸர்வேடிவ் கட்சியினரைப் பெருவாரிக் கட்சியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்ததிலிருந்து அங்கு சோஷலிஸ்ட் கட்சியினரும் கன்ஸர்வேடிவ் கட்சியினரும் சேர்ந்து கூட்டு சர்க்கார் அமைத்து ஆட்சி நடத்தி வந்தனர். கம்யூனிஸ்டுகளை வளர விடாமல் ஒடுக்குவதற்காகவே, இந்த இரு கட்சியினரும் சேர்ந்து ஆட்சி நடத்தி வந்தனர். சமீபத்தில் இக் கட்சிகளிடையே மன வேறுபாடு ஏற்பட்டதால் மக்களின் தீர்ப்பை அறியத் தேர்தல் களத்தில் குதித்தனர். மக்கள் சோஷலிஸ்ட் கட்சியை உதறிவிட்டு, கன்ஸர்வேடிவ் கட்சிக்கே தங்கள் பேராதரவையும் அளித்து மெஜாரிட்டி கட்சியாக்கி யிருக்கின்றனர். சோஷலிஸம் உலக அரங்கில் பத்தாம் பசலிக் கொள்கையாகி விட்டது என்று நாம் இதுகாறும் கூறி வந்ததை ஆஸ்திரிய மக்களின் தீர்ப்பு மீண்டும் வலியுறுத்தி விட்டது.

சோஷலிஸத்தின் ஜன்ம பூமியான ஜெர்மனியில் சோஷலிஸம் அடியோடு கைவிடப்பட்டு, அங்குள்ள சோஷலிஸ்ட் கட்சி, சுதந்திரக் கட்சி சொல்லி வரும் கொள்கைகளைத் தன் கட்சிக் கொள்கையாக்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பல முறை சொல்லியிருக்கிறோம். அது மட்டுமின்றி லாப நோக்கத்தோடு நடைபெறும் வியாபாரத் தொழில் முறைதான் நாட்டுக்குகந்தது என்று சுதந்திரக் கட்சி சொல்லி வருவதைக் காரியத்திலேயே நிரூபித்துக் காட்டி வருகிறது ஜெர்மனி.

உலக மகா யுத்தத்தில் அடியோடு சிதைந்து போன ஜெர்மனியும், ஜப்பானும் மீண்டும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்திருக்கும் அதிசயத்தைப் பார்த்து நம் மக்களும் அவர்களைப் பின்பற்ற வேண்டும் எனச் சமீபத்தில் காங்கிரஸ் அக்கிராசனர் பேசியதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. 'மக்கள் அதிகம் உழைக்க வேண்டும்' என்பதற்கு மட்டுமே அவர் ஜெர்மனியையும், ஜப்பானையும் சுட்டிக் காட்டியதாகத் தோன்றுகிறது. அதே சமயத்தில் அங்குள்ள சர்க்காரின் கொள்கையையும் கவனிக்க வேண்டும். இன்று பொருளாதாரத்தில் சிறப்புற்று விளங்கும் மேற்கு ஜெர்மனி, ஜப்பான் இரண்டுமே சுதந்திரத் தொழில் உரிமைகளைப் பூரணமாக மதிப்பதால்தான் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதைக் காங்கிரஸ் அக்கிராசனர் கவனிக்க வேண்டும்.

பிரிட்டனிலுள்ள சோஷலிஸக் கட்சி என்று கருதப்பட்ட தொழில் கட்சி, தனது சோஷலிஸக் கொள்கைகளையெல்லாம் கைவிட்ட கட்சியாகத்தான் ஆட்சி நடத்துகிறது. தொழில்களையும் வியாபாரத்தையும் சர்க்கார் உடைமையாக்க வேண்டும் என்று பேசுவதே கிடையாது! இதையும் பன்முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். உண்மையில் முற்போக்குச் சிந்தனையுள்ள கட்சி சுதந்திரக் கட்சிதான் என்பதையும் தெளிவாக்கி யிருக்கிறோம்.

உண்மையான பயத்தைவிடக் கற்பனை பயத்துக்குத்தான் வேகம் அதிகம். காங்கிரஸ்காரர்கள், உண்மையில் பிற்போக்காளராக இருந்தாலும், அவர்கள் சுதந்திரக்கட்சியைப் பிற்போக்குக் கட்சி என்று அவதூறு கூறி வருகிறார்கள். சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு நல்குவதால், தம்மைப் பிற்போக்காளராக மதித்து விடுவார்களோ என்ற கற்பனை பயத்தில் மூழ்கி மக்களில் ஒரு பகுதியினர் தவிக்கின்றனர். அந்தப் பயத்துக்குப் பொருளே இல்லை என்பதை உலக நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சோஷலிஸ்ட் தேசமான ருஷ்யாவே தனக்குப் பிடித்தமான கூட்டுப் பண்ணை

போன்ற சோஷலிஸக் கருத்துக்களை வேகமாகக் கைவிடத் தொடங்கி விட்டது. சொந்த உடைமைக்கும், வியாபாரத்தில் லாபம் சம்பாதிப்பதற்கும் மக்களுக்கு அனுமதி கொடுக்கத் தொடங்கி விட்டது. இந்நிலையில் காங்கிரஸ் மட்டும்தான் சோஷலிஸத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறது. இப்படிப் பத்தாம் பசலிக் கொள்கையை விடாமல் பிடித்துக் கொண்டுள்ள காங்கிரஸைப் பதவியிலிருந்து நாம் அகற்றுவோமாயின் நம்மை முற்போக்குச் சிந்தனையுள்ள மக்கள் என்று உலகமே பாராட்டும். காங்கிரஸார் கூறும் 'முற்போக்கு' 'பிற்போக்கு' கோஷங்களுக்கு மக்கள் மயங்காதிருக்க வேண்டியதே இன்றையத் தேவை. அதற்கு ஆஸ்திரியா வழிகாட்டியிருக்கிறது!

என்ன சேதி?

குமரி மாவட்டத்தில் ராஜாஜி

பல ஆண்டுகளாகக் குமரி மாவட்ட மக்கள் ராஜாஜி விஜயம் செய்ய வேண்டும் என்று கேட்டு வந்த கோரிக்கையை ராஜாஜி சென்ற 10, 11, 12 தேதிகளில் நிறைவேற்றி வைத்தார். மார்த்தாண்டம், திங்கள் சந்தை, தக்கலை, நாகர்கோவில், கோட்டாரம் முதலிய பல ஊர்களில் ராஜாஜி சொற்பொழிவாற்றினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி ஆர்வத்துடன் ராஜாஜியின் பொன்மொழிகளைக் கேட்டனர். குமரி மாவட்டத்தில் 'சுதந்திரா' ஆர்வம் பொங்கித்தான் நிற்கிறது. அதைத் திறம்பட வாய்க்கால் வகுத்து, நாட்டுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டியது அம்மாவட்டப் பெரியவர்களின், அன்பர்களின் கடமையாகும். குமரி மாவட்டச் சுதந்திரக் கட்சி திரு முத்துக்குமாரசுவாமி அவர்கள் தலைமையில் தற்சமயம் இயங்கி வருகிறது. சென்னை டாக்டர் சந்தோஷம், ராஜபாளையம் துரைசாமி நாடார், விருதுநகர் சாது சுப்பிரமணிய நாடார் முதலியவர்கள் கூட்டங்களில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். மேலும், ராஜாஜி சென்ற ஊர்களில் எல்லாம் தி. மு. க. கிளைக் கழகங்களின் பொறுப்பினர் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் ராஜாஜிக்கு அணிவித்து, தம் அன்பையும், பண்பையும், ஆர்வத்தையும், ஊக்கத்தையும் காட்டினர். இந்த ஒற்றுமையும் நட்பும் நீடு வாழ்க!

காமராஜும் ராணுவ ஆட்சியும்

திரு காமராஜ் அவர்கள், நாட்டில் ராணுவ ஆட்சி ஏற்பட்டு விடும் என்று அச்சுறுத்தியிருக்கிறார். அதாவது, மக்கள் அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை மீண்டும் பதவிக்கு அனுப்பவில்லையானால், ராணுவ ஆட்சி ஏற்பட்டு விடும் என்று பயமுறுத்தியிருக்கிறார். தேர்தல் பிரசாரத்துக்கும் ஒரு வரம்பு வகை இருக்க வேண்டும். இப்படிப்பட்ட தவறான கருத்துக்களையும் பயமுறுத்தல்களையும் செல்வாக்கான ஸ்தானத்திலிருந்து பேசுவது சரியல்ல. அமைதியான சூழ்நிலை நிலவும் தென்னாட்டில் வேண்டுமானால் திரு காமராஜ் இப்படிப் பேசிக் கொண்டு போகலாம். வடநாட்டில் இப்படிப் பேசினாரானால், மக்கள் காங்கிரஸ் ஆட்சியைவிட ராணுவ ஆட்சியே மேல் என்று சொல்லிவிடக் கூடும்.

சிவனருட் செல்வர்

'கந்தன் கருணை' நிறைவுற்றபோது திரு முருக கிருபானந்த வாரியார் அவர்களைக் கல்கி வாசகர்கள் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு விரைவிலேயே கிட்டப்போகிறது எனக் கூறியிருந்தோமல்லவா? அந்த நன்னாளுக்காக ஆவல் மீதூறக் காத்திருக்கும் நம் வாசகர்களுக்கு வாரியார் அவர்களின் அடுத்த தொடர் வருகிற புத்தாண்டு கல்கி (17–4–'66) இதழில் தொடங்குகிறது என்ற அறிவிப்பு பெரு மகிழ்ச்சியூட்டும். சிவத்துக்காக உருகிய அறுபத்திமூன்று நாயன்மார்களின் அற்புத சரிதங்களைக் கூறும் பெரிய புராணத்தை அத்திருத்தொண்டரின் வழியடி வந்துள்ள வாரியார் அவர்கள் ''சிவனருட் செல்வர்'' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளாக அளிக்கவிருக்கிறார்கள். அறுபத்திமூவரில் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புடையது. அருமையான சம்பவங்களுடன் உள்ளத்தை உருக்கும் பெரிய புராணத்தின் கதை அம்சத்தோடு பக்தி ரசமும், ஆன்மிக அநுபவமும், இலக்கிய நயமும் அவற்றின் பூரண உருவத்துடன் வாரியார் அவர்களின் சுவாநுபூதியில் கரைந்து வெளியாகவிருப்பது நாம் அனைவரும் செய்த பாக்கியம்.



★

நில உடைமைகளுக்கு உச்சவரம்பு விதித்ததால், தங்கள் தேவைக்கு உபரியாக உற்பத்தி செய்யக்கூடிய பெரிய நிலச் சொந்தக்காரர்கள் அழிபட்டு, அது காரணமாக நகர்ப்புறங்களுக்குத் தானிய ஸப்ளை தடைப்பட்டிருப்பது ஒருபக்கமிருக்க; உச்ச வரம்புச் சட்டத்தால் உழவர்களும் பாதிக்கப் பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். கிராம மக்களுக்குப் புரியாத பாங்குகளின் விதிமுறைகளின்றியே இந்த நிலச்சுவான் தார்கள்தான் விவசாய சமூகத்துக்குத் தலைமை தாங்கி அவர்களுக்குக் கடனுதவி அளித்து வந்தார்கள். இவை தவிர இன்னோர் அம்சத்தை ஸ்ரீ எம். ஆர். ஜயகர் எழுதியுள்ள ''என் வாழ்க்கைக் கதை'' (Story of My Life)யில் காண்கிறோம். சமீப காலத்தில் வெளியான நலெசிறந்த நூல்களில் ஒன்று இப்புத்தகம். ஸ்ரீ ஜயகர் கூறுகிறார்:

என்னுடைய ஆங்கிலேய நண்பர்களின் கிராம இல்லங்களில் நான் தங்குவதுண்டு. அவர்களில் பலருக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் கொண்ட மிகப் பெரிய நில உடைமைகள் இருந்தன. பிரிட்டனில் சோஷலிஸக் கட்சி ஆட்சியிலிருந்த போது நான் அதன் முக்கியஸ்தர் ஒருவரிடம், 'சோஷலிஸக் கொள்கையைப் பின்பற்றும் நீங்கள் ஏன் இவ்வளவு பெரிய நிலச் சொத்துக்களை அநுமதித்திருக்கிறீர்கள்? இவற்றைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்து, விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடாதா?' என்று கேட்டேன்.



அவரது பதில் குறிப்பிடத்தக்கது. அவர் கூறினார்: ''இந்த நிலச் சீமான் களின் வர்க்கத்தை அழிப்பதில் நாங்கள் ஈடுபாடு காட்டவில்லை. ஏனெனில், இந்த வர்க்கம் பல நூற்றாண்டுகளில் உருவான சக்தியாலும், ஓய்வாலும், செல்வத்தாலும் வளர்ச்சி பெற்றுள்ளது. செல்வச் செழிப்பு அளிக்கக் கூடிய ஓய்வு, சுதந்திரம், உன்னத சிந்தனை இவற்றின் மூலம் இந்த வர்க்கம் பிரிட்டனை மிகச் சிறந்த ஸ்தானத்துக்கு உயர்த்தியுள்ளது. இதற்குச் சமமான இன்னொரு முறையைக் கண்டுபிடிக்கும் வரை எங்கள் கட்சியானது இந்த நிலச் சீமான்களை வாழ விடும்; தக்க முறையில் அரசாங்கத்தின் தேவைகளுக்கு அவர்களையும் பயன்படுத்திக் கொள்ளும்.'' நிலப் பிரபுக்கள் எவ்வாறு தேசத்துக்கு உத்தமப் பணிகள் புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு அவர் பல உதாரணங்கள் காட்டிவிட்டு, ''இவர்களுக்குச் சமமாக ஒரு வகுப்பை எங்களது சோஷலிஸ முறையில் உருவாக்குவதற்குக் காலம் பிடிக்கும். அதற்குள் சோஷலிஸக் கொள்கையைச் சித்தாந்த ரீதியில் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரே காரணத்துக்காக இந்த வர்க்கத்தை அழிப்பது இயலாத காரியம்'' என்றார்.

பிரிட்டனின் சோஷலிஸப் பிரமுகர் வெளியிட்ட இக்கருத்தை நமது தில்லி சர்க்கார் பரிசீலிக்க வேண்டியது அவசியமென எண்ணுகிறேன்.

★

தேர்தல்கள் நெருங்கி வருகின்றன; அதாவது மக்களில் பல்வேறு பிரிவினர் கேட்கும் பல்வேறு உதவிகளையும் பூர்த்தி செய்து வைப்பதாகக் காங்கிரஸ் கட்சி வாக்குறுதியளிக்கும் பருவம் தொடங்கி விட்டது. வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பதற்குச் சர்க்கார் கஜானாக்களில் எவ்வளவு வேண்டுமாயினும் நிதி இருக்கிறதே! கஜானாவை நிரப்பும் வரிகள் பொதுமக்களிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றன. காங்கிரஸுக்கு வோட்டுப் போடுபவர்கள் மட்டும் தரும் பணம் அல்ல அது. எனினும் அதைக் காங்கிரஸின் தேர்தல் நிதி போல் பாவித்துப் பேசுகிறார்கள். 'உங்களுக்குத் தேவை என்ன? இதோ நாங்கள் செய்து தருகிறோம். எனவே காங்கிரஸுக்கே வோட் செய்யுங்கள்' என்பது பிரசார மந்திரமாகி விட்டது. காங்கிரஸ் தனது பணத்திலிருந்து உதவி அளிக்கப் போவதில்லை, மக்கள் அளித்ததும் சர்க்காருக்கு உரியதுமான கஜானாவிலிருந்தே எடுத்துச் செலவழிக்கப் போகிறது என்பதை எழுத்தறிவற்றவர்களால் காண முடிவதில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது அமைக்கும் அரசாங்கம் மக்களின்தேவைகளை நிறைவேற்றத்தான் வேண்டும். அவை அவ்வாறு நிறைவேற்றவும் செய்யும். காங்கிரஸுக்கு அதிகமாகவே இந்தப் பணியை மற்றக் கட்சிகள் செய்யக் கூடும்.

★

பிரிட்டிஷ் ஆட்சியில் நாம் அநுபவித்து வந்த சுதந்திரங்களில் பலவற்றைக்கூட இப்போது இழந்து விட்டோம். அந்நியராயினும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் நமது தொழில் சுதந்திரங்களிலும் சொந்த விவகாரங்களிலும் தலையிடவில்லை. இன்று நாம் இந்த உரிமைகளை இழந்து வருகிறோம். அதோடு மட்டுமின்றி உரிமைகளை இழக்கிறோம் என்ற உணர்வைக் கூடச் சிறுகச் சிறுக இழந்து வருகிறோம். சுதந்திரமும் தொழிற் போட்டியும் போனது போதாதென்று, அவை போய் விட்டன என்ற இழப்புணர்ச்சியும் போய் விடும் அளவுக்குப் பெர்மிட் – லைசென்ஸ் ஆட்சி நீடித்து விட்டது. தீய சூழ்நிலைகளுக்கும் மனிதன் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, முடியுமாயின் அவற்றிலும் சுயலாபம்

சம்பாதிக்கப் பார்க்கிறான் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

★

வியாபாரிகளிடையே உள்ள போட்டியே பண்டம் வாங்குவோருக்குப் பாதுகாப்பளிக்கும் போலீஸ்காரன். வியாபாரிகள் மக்களை ஏய்த்துப் பிழைப்பவர்கள் என்று வாதிப்பவர்கள் இந்தப் போலீஸ்காரனை மறந்து விடுகிறார்கள். ஆனால் கட்சியின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே ஏகபோக்கியம் தரும் பெர்மிட் — லைசென்ஸ் முறையில் தான் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் வாய்ப்பு நிலவுகிறது. கிராமங்களில் தயிரும் நெய்யும் விற்கும் பெண்கள் லைசென்ஸ் பெற்று வியாபாரம் செய்யவில்லை. எனினும் தாங்கள் விற்க வேண்டிய விலைக்கு அதிகமாக ஒரு பைசாகூட அவர்கள் விலை வைப்பதில்லை. காரணம் மற்றவர்களின் போட்டிதான். இதுவே சுதந்திரத் தொழில் முறையில் பண்டம் வாங்குவோரை ரட்சிக்கும்தேவதை.

★

காலனி ஆட்சி முடிந்தவுடன் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமுள்ள நாடுகளில் நிலவிய நிலைமையை மனத்தில் கொண்டு பார்த்தோமாயின், தற்போது ஏற்பட்டு வரும் ராணுவப் புரட்சிகள் ஜனநாயகத்தை நசுக்கி விடுவதாக நினைக்க வேண்டியதில்லை. ராணுவ ஆட்சி என்பது ஒரு தாற்காலிக அமைப்பாகவே இருக்கும். அரசியல் தலைவர்களால் ஒற்றுமையும் ஒழுங்கும் ஏற்படுத்த முடியாத போது ராணுவப் புரட்சியே வழியாகிறது. ஆனால் அது நிரந்தர நிவாரணமாகாது. காலக் கிரமத்தில் ராணுவ ஆட்சியின் இடத்தில் ஸிவிலியன் ஆட்சி ஏற்பட வேண்டும். பாகிஸ்தானில் ஜெனரல் அயூப் ஏதோ ஒரு விதத்தில் இத்தகைய மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறார். ராணுவ ஆட்சி நீடித்தால், இப்போது அரசியல்வாதிகளிடையே ஏற்பட்டு வரும் நாசகரப் போட்டிக்குப் பதில் ராணுவ அதிகாரிகளிடையே போட்டி ஏற்படும். எனவே ராணுவம் சிறிது காலத்தில் தன் ஆட்சியை விட்டுக் கொடுத்து, அவசியமான போது ஒழுங்கை ஏற்படுத்த முன்வரும் நிலையில் இருக்க வேண்டும். எந்தச் சர்வாதிகாரியும் நிரந்தரமாக ஆட்சி உரிமையைத் தம்மிடம் வைத்துக் கொள்ள முடியாது.

★

இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவு பற்றி எழுதும் ஆக்ஸ்ஃபோர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர் ஜான் ஜூக்ஸ், ''இந்தியாவில் மத்தியத் திட்டத்தை அலங்கோலமாகக் கையாண்டிருப்பதால் அந்நாட்டுப் பொருளாதாரம் பாரிச வாயு கண்டாற்போல் சோகமயமான முறையில் ஸ்தம்பித்திருக்கிறது. நம் நாட்டில் (இங்கிலாந்தில்) இன்னும் அத்தகைய நிலை ஏற்படவில்லை'' என்கிறார். இருந்தபோதிலும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பிரிட்டனில் சோஷலிஸத் தொழிற்கட்சியின் ஆட்சியில் பொருளாதாரம் சீர்கெட்டிருப்பதையும், அந்நியக் கடன்கள் பெருகி விருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார். அதிகாரத்துக்கு வந்த பின்னும் சோஷலிஸ்டுகள் தங்கள் சோஷலிஸக் கொள்கைகளையே அமுல் செய்வதுதான் பெரிய உற்பாதமாகிறது என்கிறார். 'சர்க்காரின் சொத்துக்கள் பெருகித் தனியார் சொத்துக்கள் குறைய வேண்டும்; தனியார் செய்யும் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டுச் சர்க்கார் செலவு அதிகரிக்க வேண்டும்; சர்க்காரின் பிரவேசம் எல்லாத் துறைகளிலும் ஏற்பட வேண்டும்; லாப நோக்கத்தையும் தொழிற் போட்டியையும் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு மறுக்க வேண்டும்; சிறிய தொழில் நிறுவனங்களுக்குப் பதில் பெரியவற்றை அமைக்க வேண்டும்; மத்தியப் பொருளாதாரத் திட்டம் என்கிற மாயக் குறுக்கு வழியால் சுபிட்சத்தை அடைய வேண்டும்'—இந்த ஆறு சோஷலிஸ இலட்சியங்களால் பிரிட்டனின் எதிர்காலம் பாழாகிறது என்கிறார் பேராசிரியர் ஜூக்ஸ்.


''உலகத்து உழைப்பில் ஐந்தில் நான்கு பங்கு லாபநோக்கம் என்ற தூண்டுகோலால் தான் உருவாகிறது'' என்று கூறும் அவர், அந்தோனி ஈடன் கூறியது போல் 'சொத்துரிமையை மதிக்கும் ஜனநாயக'த்தை உருவாக்கினால்தான் மக்களுக்கு நாட்டின் பொருளாதார வாழ்வில் ஒரு சுயமான பிடிப்பும் ஈடுபாடும் ஏற்படும் என்கிறார். இந்த ஜீவாதாரக் கொள்கையைச் சர்க்காரின் மத்தியத் திட்டம் மறந்து விடுகிறது. 'முதலீட்டை விருத்தி செய்தால் நல்ல லாபம் பெற முடியும்; நன்றாக உழைத்தால் அதற்கேற்ப நிறைய ஊதியம் பெறலாம்' என்ற இரு ஊக்க சக்திகளை அளித்தாலே உற்பத்தி பெருகும்; தொழில் துறையில் நல்ல போட்டியிருந்து சுதந்திர வியாபாரம் நடந்தால் மட்டுமே இந்த உற்பத்தி சீரான முறையில் மக்களனைவருக்கும் விநியோகமாகும் என்பது ஜூக்ஸின் முடிவு. 'மத்திய திட்டக்காரர்கள் நாட்டின் எதிர்காலம் பற்றிப் பெரிதாகப் பேசுவதெல்லாம் வெறும் செப்படி வித்தைப் பேச்சே என்பதை மக்கள் சிறுகச் சிறுக உணரத் தொடங்கி விடுவார்கள். இந்த முதற்படியில் மக்கள் அடிஎடுத்து வைத்தபின், சர்க்காரின் பொறுப்பு தேசத்தைப் பாதுகாப்பதும், சட்டம் செய்வதும், நிலையான நாணயம் ஏற்பட உதவுவதுமே என்பதையும் காண்பார்கள். தொடர்ந்து, அவசியமான அளவுக்கு மட்டுமே தொழிலில் பிரவேசித்து மீதமுள்ள துறைகளில் தனியார் ஈடுபடுவதற்குரிய ஊக்கத்தை அளிப்பதுதான் அரசினர் கடமை என்பதையும் மக்கள் உணருவார்கள்.' இவ்வாறு ஜூக்ஸ் நம்புகிறார்.

★

பிற்போக்காளர் யார்? 'சுதந்திரமான மக்கள் தமது விவகாரங்களைத் தாமே கவனித்துக்கொள்ள முடியாது; சர்க்கார்தான் அவர்களுக்கு வியாபார — சமூகக் காப்பாளராக நிற்க வேண்டும்' என்று நினைப்பவர்தான் பிற்போக்காளர். சர்க்கார் சர்வாதீனம் ஏற்பட வேண்டும் என்ற இந்தப் பிற்போக்கு இலட்சியமே காங்கிரஸ் அரசாங்கத்துடையது. எனவேதான் நான் பிற்போக்காளர்களை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்கிறேன்.


திருமுருக
கிருபானந்தவாரியார்
எழுதும்
சிவனருட் செல்வர்
கல்கி
புத்தாண்டு
மலரில்
ஆரம்பமாகிறது

ஓடிக்கொண்டே வருமானத்தை அளிக்கும் டிரக்குகள்






முதன் முதலில் ஒரு டிரக்குக்காக கொடுக்கும் தொகையே அந்த வண்டியின் விலையாகாது. உண்மையிலே ஒரு டிரக் சொந்தக்காரர் கருதும் விலை என்னவெனில், வண்டி ஓடுவதினால் ஏற்படும் செலவும், அதிலிருந்து கிடைக்கும் வருமானமும்தான்.

உறுதியான சேஸிஸ் பிரேம், அதிக பளு தாங்கும் அச்சுகள் குறைவான எண்ணெய்ச் செலவில் கூடுதலான மைல்கள் ஓடும் சக்தி, பராமரிப்பு செலவில் சிக்கனம், நம்பிக்கையுடன் கட்டப்படுவது பெட்போர்ட்.

நம்பகம், திறமையான சேவை மற்றும் நாடு பூராவிலும் கிடைக்கக்கூடிய தேர்ச்சி மிகுந்த டீலர் சேவை இவைகளே பெட்போர்ட் டிரக்குகள் தொடர்ந்து நன்றாக இயங்கும் என்றும் பராமரிப்பில் சிக்கனமும் ஏற்படும் என்பதற்கு உங்களுக்கு ஒரு சிறந்த உத்தரவாதம்.



பெட்போர்ட் நம்பிக்கை • பெட்போர்ட் சிக்கனம் • பெட்போர்ட் திறமை

உலகெங்கும் பெட்போர்ட் உரிமையாளர்கள் அறிந்த உண்மைகள்

வாங்கச் சிறந்தது

ஹிந்துஸ்தான்

பெட்போர்ட்

டீஸல் பெட்ரோல்


HM HINDUSTAN MOTORS

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா

இந்தியா முழுவதும் டீலர்கள் உள்ளனர்

★ செய்திப் படங்கள்

அம்பத்தூரில் லார்ஜவான் ஸ்டேடிபோர்டு ஆஸ்பத்திரியை டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் பிப்ரவரி 25ந் தேதி தொடங்கி வைத்தார். சென்னை சுகாதார மந்திரி ஸ்ரீமதி ஜோதி வேங்கடாசலம், ஸ்ரீ ஏ. எம். எம். அருணாசலம், லேடி ஸ்டேடிபோர்டு, ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் ஆகியவர்களைப் படத்தில் காணலாம்.





இச்சோஹில் கணவாயிலிருந்து தாஷ்கெண்ட் உடன்படிக்கைப்படி இந்திய அதிகாரிகள் வாபஸாகு முன் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் அளவளாவினர்.




இந்திய வர்த்தக சம்மேளனத்தின் புதிய தலைவர் ஸ்ரீ ரமண்பாய் பி. அமின்.

டென்மார்க் மாதாகோயில்கள் உதவும் 11 மிலியன் 'மல்டி வைட்டமின்' மாத்திரைகளின் ஒரு சிறு பகுதியை மிஸ்டர் மாரலப் இந்திய சுகாதார மந்திரி டாக்டர் சுசீலா நையாரிடம் வழங்கினர்.



தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் 112ம் பிறந்தநாள் விழாவைத் திருவல்லிக்கேணியில் சுப்பிரமணிய சிவா செந்தமிழ் மன்றத்தினர் சிறப்பாகக் கொண்டாடினர்.





சுதந்திர திபெத்தை ஆதரிப்போம்

ஆசார்ய கிருபளானி

" சரியான பரிகாரம் காணும்வரையில் திபெத் பிரச்னையைத் தீராத பிரச்னையாகவே வைத்திருக்க வேண்டும். உலகம் அதனை மறந்து போகும்படி விடக்கூடாது."





திபெத்தின் பிரச்னையை உள்ளது உள்ளபடியே புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனுடைய சரித்திர உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். திபெத் எப்போதுமே ஒரு தனிப்பட்ட சுதந்திர நாடாக விளங்கி வந்திருக்கிறது. சீன சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக, திபெத் ஒரு போதும் இருந்ததில்லை. வரலாற்றுப்படி சீனாவே அந்நியப் படையெடுப்புக்களால் ஆக்கிரமிக்கப் பட்டுச் சுதந்திரம் இழந்திருந்தபோது திபெத்தின் சில பகுதிகளையும் வெற்றி வீரர்கள் தங்களுடைய ஆதிக்கத்துக்குள் வைத்துக் கொண்டிருந்தனர். இதர சமயங்களில் சீன நாட்டின் சில பகுதிகள்கூட திபெத்தின் ஆளுகையின் கீழேயே இருந்தன. திபெத்தின் மீது சீனாவுக்கிருந்த — அதுவும் பேச்சளவிலிருந்த — பிரபுத்துவ உரிமை அர்த்தமற்ற விஷயம். நமது நாட்டிலே மொகலாய சாம்ராஜ்யம் க்ஷீணித்துக் கொண்டிருந்த காலத்தில் மராத்திய பேஷ்வாக்களும், கிழக்கிந்தியக் கம்பெனியும் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கையில் அவர்கள் மீது மொகலாய சக்கரவர்த்திக்கு இருந்த பிரபுத்துவ உரிமையை இதற்கு ஒப்பாகச் சொல்லலாம். இது ஒருபுறமிருக்க, திபெத்தின் மீது சீனாவுக்கிருந்த பிரபுத்துவ உரிமை, தாற்காலிகமானதே. அதுவும்கூட 1912ம் ஆண்டில் திபெத் சுதந்திர நாடு என்று பிரகடனம் செய்த போது முடிவு பெற்றது.

பிரபுத்துவமும், ஆட்சி உரிமையும்

ஆனாலும் இந்திய அரசாங்கம் மட்டும் திபெத்தின் அந்தஸ்தை அங்கீகரிக்கத் தவறி விட்டது. 1950க்குப் பிறகு சில ஆண்டுகள் சீன — இந்தியப் பேச்சு வார்த்தைகள் நடந்த போது திபெத்தின் மீது தனக்குப் பிரபுத்துவ உரிமை உண்டு என்று சீனா கூறியதை நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டது. (ஒப்பந்தத்தின் சீனப் பிரதியில் 'பிரபுத்வம்' என்ற வார்த்தைக்குப் பதில் 'ஆட்சி உரிமை' என்ற பதம் மாற்றிப் போடப் பட்டிருந்ததாகக் கூடச் சொல்லப்பட்டது. இந்தியப் பிரதிநிதிகள் இந்த மாற்றத்தைக் கவனிக்கத் தவறி விட்டதாகவே தெரிகிறது) இந்தியா அங்கீகரித்த இந்தப் பிரபுத்துவ உரிமையும் திபெத்தின் பூரண சுதந்திர அந்தஸ்தின் ஆதாரத்துடனேதான் இயங்க வேண்டும் என்பது உடன்படிக்கை. எனினும் உடன்படிக்கையின் இந்த அர்த்தமுள்ள முக்கியமான ஷரத்தைச் சீனா தனது செயலால் நிராகரித்து விட்டது. இந்த உடன்படிக்கையில் பஞ்சசீலம் என்ற அடக்கியொடுக்கியதையடைந்துவிட்ட ஐந்து கருத்துக்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. உடன்படிக்கையில் இது ஒரு பகுதி. அப்போதே நான் இதைப் பற்றி நமது அரசாங்கத்தை எச்சரித்தேன். நம் நாட்டுக்குப் பாதுகாப்பாக உள்ள ஒரு சுதந்திர இடை நாட்டை இதன் மூலம் அழித்து விட்டு நம் நாட்டுக்கு அபாயத்தை விளைவித்துக் கொள்கிறோம் என்று சொன்னேன்.

லடாக்கில் நமது எல்லைக் காவல் நிலையங்களை 1959ல் சீனா தாக்கிய பிறகும், சீன அக்கிரமங்களால் தலாய் லாமா திபெத்தை விட்டு வெளியேறிய பிறகும்தான் நம் அரசாங்கத்துக்குக் காலம் கடந்த ஞானோதயம் ஏற்பட்டது. தங்களிடமே இருந்த தஸ்தாவேஜிகளிலிருந்து கூட திபெத் எப்போதுமே சுதந்திர நாடாகத்தான் இருந்தது

என்ற உண்மையையும் தெரிந்து கொண்டனர். இதன் பிறகுதான் நமது அரசாங்கப் பிரதிநிதிகள் சீன அதிகாரிகளிடம் பேசும் போதெல்லாம் ''திபெத்துக்குச் சுதந்திரம் இருந்ததில்லை, திபெத் சீனாவின் ஒரு பகுதியே; சுதந்திரமாக உடன்படிக்கைகளில் கையெழுத்திடவோ, அண்டை நாடுகளுடன் நேரடியாக உடன்படிக்கை செய்து கொள்ளவோ உரிமை இல்லை'' என்று திரும்பத் திரும்பச் சீனர்கள் வற்புறுத்திச் சொன்னதை வன்மையாக ஆட்சேபித்தனர். தங்கள் ஆட்சேபத்துக்கு ஆதாரமாகத் திபெத் கையெழுத்திட்டு முந்திய பல ஆண்டுகளில் செய்து கொண்ட பல ஒப்பந்த, உடன்படிக்கைகளைச் சுட்டிக்காட்டி இவையனைத்தையும் சம்பந்தப்பட்ட அயல்நாடுகளும் பூரணமாக ஏற்றுக் கொண்டு அதன்படி நடந்து வந்தன என்றும் வலியுறுத்தினர். 1912ம் ஆண்டிலேயே சீனர் திபெத்தின் மீது தங்களுக்கு இருந்ததாகச் சொல்லிக் கொண்ட உரிமையை உறுதிப்பாட்டுடன் நிராகரித்து விட்டது திபெத். அப்போதிருந்த சீன அரசாங்கம்கூடத் திபெத்தின் பூரண சுதந்திர அந்தஸ்தை அங்கீகரித்தது.

திபெத் மக்களின் இழிநிலை

சீனர் படையெடுத்து வந்து திபெத்தை ஆக்கிரமித்த சமயத்தில் தலாய் லாமா தமது நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு சமூகப் பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களில் உழுபவனுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று. இச் சீர்திருத்தங்கள் திபெத்தில் நிலவிய சமூக, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையில் மிகவும் முக்கியம் என்று தலாய் லாமா கருதினார். சீர்திருத்தங்களை அவர் ஒருபோதும் எதிர்த்ததில்லை. அவர்களுடைய சமூகம் மிகப் பண்டைக் காலத்திய சமூகம் என்பதையும், மக்களுடைய நன்மையை உத்தேசித்துச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதையும் அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். எவ்வளவு நல்ல ஆட்சியானாலும் எவ்வளவு திறமையுள்ள ஆட்சியானாலும், காலனி ஆட்சி ஒருபோதும் சுதந்திர ஆட்சிக்குச் சமானமாகாது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். எது எப்படியாயினும் பூரண சுதந்திர அந்தஸ்துள்ள அண்டை நாடான திபெத்தின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கும், சீர்திருத்தங்கள் என்ற பெயரில் நாட்டு மக்களுக்குத் தீராத வறுமையையும் சொல்லொணாத் துயரங்களையும் விளைவிக்கவும் சீன கம்யூனிஸ்டுகளுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை. அவர்களுக்கு அங்கே வேலையும் இல்லை. தலாய் லாமாவுக்குப் பதில் பஞ்சன் லாமாவை உபயோகப்படுத்தி அவர் பெயரால் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தது கூட இப்போது மறைந்து விட்டது. பஞ்சன் லாமாவையே சீனர்கள் தாஷிக்கத் தலைப்பட்டு விட்டனர். பீகிங் சிறையில் கைதியாகவே பஞ்சன் லாமா இருக்கிறார் என்றுகூடச் சொல்லப்படுகிறது.

திபெத்தில் சீனர்கள் என்ன சாதனைகள் புரிந்திருக்கின்றனர் என்பதைப் பார்ப்போம். மதத்தையே தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டுள்ள மக்கள் தங்கள் மதப் பற்றுக்காகப் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கில் பௌத்த விஹாரங்கள் இடித்துத் தள்ளப்பட்டன. புனித வஸ்துக்கள் எல்லாம் சின்னாபின்னமாக்கப் பட்டுள்ளன. வெள்ளியினாலும் தங்கத்தினாலும் செய்யப்பட்ட விலைமதிப்பில்லாத் தேசிய பொக்கிஷங்கள் என்று கருதப்பட்ட புத்த விக்கிரஹங்களும், சிலைகளும் பூஜா பாத்திரங்களும், ஆபரணங்களும் சூறையாடப்பட்டுச் சீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாகச் சேகரிக்கப்பட்டு மிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வந்த கணக்கற்ற புராதன ஓவியங்கள் விஹாரங்களிலிருந்து சீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. புனித விக்கிரகங்கள் பல உருக்கப்பட்டு விட்டுச் சாமான்களாக மாற்றப்பட்டு விட்டன. பல சிலைகள் தெருச் சாக்கடைகளில் வீசி எறியப்பட்டன. பல புராதனச் சுவடிகள்



பகிரங்கமாகவே கொளுத்தப்பட்டன. பல பௌத்த லாமாக்கள் சீனச் சிறைச்சாலைகளில் மிருகத் தனமான கடும் வேலைகளில் ஈடுபடுத்தப் பட்டு வருகின்றனர். இக் கொடுமை தாங்காது பலர் வாடி வதங்கி இறந்து விட்டனர். பொதுமக்களை அச்சுறுத்துவதற்காக மற்றும் சில லாமாக்கள் மக்கள் முன்னிலையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். மதச் சடங்குகளும் பிரார்த்தனைகளும் தடை செய்யப் பட்டிருக்கின்றன. உணவுப் பஞ்சமே எந்தக் காலத்திலும் கண்டிராத நாட்டில் இப்போது பட்டினியும் வறுமையும் தாண்டவமாடுகின்றன. பல திபெத்தியச் சிறுவர்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டுச்

சீனாவுக்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர். அங்கே சீனக் கம்யூனிஸ்ட் முறைகளில் அவர்களுக்குக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றன. புதுக் கல்வி பெற்றுச் சீனக் "கலோனிய" ஆட்சியின் ஊன்றுகோல்களாக அவர்கள் பிற்காலத்தில் திபெத்துக்குத் திரும்பி வருவார்கள். இத்துடன் இணைந்த வகையில் திபெத்தில் திட்டமான முறையில் சீனக் குடியேற்றம் நடந்து வருகிறது.

இந்தியா வழிகாட்டலாம்

பேராசையாலும் நாடு விஸ்தரிக்கும் கொள்கையாலும் உந்தப்பட்டுத் திபெத்தைத் தனது குடியேற்ற நாடாகவே ஆக்கிவிடச் சீனா முனைந்துள்ளது என்பது தெளிவு. இறுதிக் கட்டத்தில் எவ்வளவு மக்கள் மடிந்தாலும், வாடினாலும், வருந்தினாலும் திபெத்தைச் சீன நாட்டுடன் இணைத்துக் கொள்வதுதான் உறுதியான நோக்கம் என்பது வெளிப்படை. இப்படிப்பட்ட ஒரு விசனகரமான, அபாயகரமான போக்கைத் தடுத்து நிறுத்தி, திபெத்திய மக்கள் தங்களது பூரண சுதந்திர அந்தஸ்தைப் பெறச் செய்வது உலகமனைத்திலும் உள்ள சுதந்திரத்தைப் போற்றிச் சுதந்திரத்துடன் வாழும் மக்களின் கடமை. இத்துறையில் இந்தியா ஆற்ற வேண்டிய பங்கு தனி முக்கியத்வம் பெற்றது. உலக நாடுகளெல்லாம் இந்தியாவைத் தங்களது அண்டை நாடாகவே கருதுகின்றன. இந்தியா மிகப் பெரிய ஜனநாயக நாடு என்றும், உலகத்துக்குத் திபெத்து விஷயத்தில் அது வழிகாட்ட வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும்.

1959ம் ஆண்டில் ஐ. நா. பொதுச் சபை தனது பதினான்காவது கூட்டத் தொடரில் ஒரு தீர்மானத்தின் மூலம் திபெத்தில் சீன நடவடிக்கைகளை மனித உரிமைகளுக்கு முரணானவை என்று கண்டித்துத் திபெத்தியர்களின் உரிமைகள் பூரணமாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. 1961ம் ஆண்டில் ஐ. நா. சபை தனது பதினாறாவது கூட்டத்தில் மற்றொரு தீர்மானத்தில் முந்திய தீர்மான விஷயங்களை மறுபடியும் ஊர்ஜிதம் செய்ததுடன் திபெத்தியர்களுக்கு அரசியல் நிர்ணய வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று மேலும் ஒரு படி முன் சென்றது.

திபெத் விஷயங்கள் குறித்த ஐ. நா. விவாதங்களில் இந்திய அரசாங்கத்தின் போக்கும் மனப்பான்மையும் "பகிரங்கமாக எதையும் கூறாமல் சும்மா இருப்பது நல்லது" என்ற முறையில்தான் இருந்தன. தலாய் லாமாவுக்கும் அவருடன் வந்த அகதிகளுக்கும் புகலும் உதவியும் அளித்து இந்தியா காட்டிய அனுதாப உணர்ச்சிக்கும் ஐ. நா. சபையில் "ஒதுங்கி நின்ற" மனப்பான்மைக்கும் எவ்வளவு வித்தியாசம் என்பது தெளிவு. என்னுடைய அபிப்பிராயத்தில் நமது இந்த முரண்பாடான மனப்பான்மையும் நடவடிக்கைகளும்தான் அயல் நாட்டினர் நம்மைச் சரிவரப் புரிந்துகொள்ளாததற்கும், திபெத்தில் சீனா தொடர்ந்து நடத்தி வரும் குடியேற்ற நடவடிக்கைகளைத் தடுக்க யாரும் தீவிர நடவடிக்கை எடுக்காததற்கும் காரணம் என்று சொல்வேன்.

இப்போது ஐ. நா. அரங்கிலேயே இந்திய அரசாங்கத்தின் போக்கில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருப்பது போலத் தெரிகிறது. அங்கே செயலாற்றும் நமது பிரதிநிதிகள் திபெத்தைப் பூரணமாக ஆதரிக்க வேண்டும். மனித உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்பதை மட்டும் ஒப்புக்கொண்டால் போதாது. திபெத்து மக்களின் அரசியல் சுதந்திரமும் ஆட்சி உரிமையும் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை முழுமூச்சுடன் ஆதரிக்க வேண்டும். இப்படிச் செய்தால் சீனாவுடன் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு முரணாகப் போய்விடுமோ என்ற மனச் சஞ்சலமே வேண்டியதில்லை. தனது நடவடிக்கைகளின் மூலமே உடன்படிக்கையின் மிக முக்கியமான ஷரத்தாகிய "திபெத்தின் உள்நாட்டுப் பூரண சுதந்திர உரிமையைப் பாதுகாத்தல்" என்ற அம்சத்தைச் சீனா அடியோடு புறக்கணித்து விட்டது. ஒப்பந்தப் பொறுப்புகளைச் சீனா நிறைவேற்றத் தவறின பிறகு பஞ்சசீலக் கொள்கை, அயல் நாட்டுடன் சமாதான சக வாழ்வு, பிற நாட்டு விவகாரங்களில் தலையிடாமை என்றெல்லாம் பேசிக் கொண்டு நாம் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

பிரச்னை தீரவில்லை

திபெத்தை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதற்காக இந்தியா சீனாவுடன் போருக்குச் செல்ல முடியாது என்பது உண்மையே. ஆனால் இந்த நவீன யுகத்தில் அடிமை மக்களை விடுவிக்கப் போர் ஒன்றுதான் உகந்த முறை என்பதில்லை. இன்றைய உலகில் எதற்கும் முதலில் உலக அபிப்பிராயம் உருவாக்கப்பட வேண்டும். திபெத் விஷயமும் அப்படித்தான். சரியான பரிகாரம் காணும் வரையிலும் திபெத் பிரச்னையைத் தீராத பிரச்னையாகவே வைத்திருக்க வேண்டும். உலகம் மறந்து போகும்படி விடக் கூடாது.

அகதி அரசாங்கத்தை அங்கீகரிப்பதில் உள்ள சர்வ தேச சட்ட நுணுக்கங்கள் பற்றி எனக்கு முழுமையாகத் தெரியாது. சமீப காலத்தில் தலாய் லாமாவின் தலைமையில் அமைக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த ஓர் அகதி அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்று நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பலமான கோரிக்கைகள் எழும்பியுள்ளன. முன்பெல்லாம் அகதி அரசாங்கங்களை அனுமதிக்க முடியாது என்று நாம் நிராகரித்து வந்தோம். சமீப காலத்தில் லோக சபையிலேயே, ரொடீஷியா நாட்டின் அகதி அரசாங்கத்தை அங்கீகரிப்பது பற்றி இந்திய சர்க்கார் அனுதாபத்துடனேயே பரிசீலனை செய்யும் என்று வெளி விவகார அமைச்சர் கூறினார். இது உண்மையானால் சுதந்திர திபெத்தின் அகதி அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்க ஏன் அனுதாபத்துடன் முன்வரக் கூடாது என்று கேட்கத் தோன்றுகிறது.

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்...உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.

காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல, குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!



காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்



காம்கேட்டின் தரமான தயாரிப்பு

1. குமாரி வி. லலிதா, திருவல்லிக்கேணி

''சமீப காலமாக வானொலியில் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பும் நேரங்களை வெகுவாக மாற்றியிருக்கிறீர்களே! இந்த நேரங்கள் உங்களுக்கு வசதியான நேரங்களாக அமைந்திருக்கின்றனவா?''

''என்னைப் பொறுத்தவரை இந்த மாறுதல்கள் வசதியானதில்லை என்றுதான் சொல்வேன். இதைப் பலரும் ஆமோதிப்பார்கள் என்றும் நம்புகிறேன். நல்ல கச்சேரி புரோகிராம்களையெல்லாம் இப்போது காலை எட்டேகால் மணியிலிருந்து ஒன்பதரை மணி வரை ஒலிபரப்புகிறீர்கள். இந்த நேரத்தில் யாரால் முழு கவனத்துடனும் ஆர்வத்துடனும் கச்சேரிகளைக் கேட்டு அநுபவிக்க முடியும்? காரியாலயங்கள், பள்ளிக்கூடங்கள் முதலியவற்றுக்குப் பெரியவர்களும் குழந்தைகளும் புறப்பட அவசரம் அவசரமாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் நேரம். வீட்டுப் பெண்மணிகள் அடுப்படியில் அமர்ந்து ஆகாரங்கள் தயாரிப்பதில் ஈடுபடுவார்களா? அல்லது ஆபோகி ராக ஆலாபனையையோ அமிர்த வருஷிணி நிரவலையோ கேட்க வருவார்களா? முன்பெல்லாம் போல் இந்த மாதிரி கச்சேரி நிகழ்ச்சிகள் இரவு ஏழரையிலிருந்து ஒன்பது வரை இருந்தால்தான் கேட்பவர்களுக்கும் சௌகரியம், பாடுபவர்களுக்கும் சௌகரியம். குளிர்ந்த வேளையாக இருந்தால் தானே இந்த இசை சோபிக்கும்!''

வானொலி நிகழ்ச்சிகளும் வாய்க்காத நேரங்களும்





''சில நாட்களில் இரவு ஒன்பதேகாலிலிருந்து பத்தரை மணி வரையிலும் நல்ல கச்சேரிகளை ஒலி பரப்புகிறீர்களே! அது சரியான நேரம்தானே?''

''வெளியூர்களிலும் கிராமங்களிலும் சாவகாசமான வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வேண்டுமானால் இது கேட்கக்கூடிய நேரமாக இருக்கலாம். ஆனால், பட்டணவாசிகளான பல மத்தியதரக் குடும்பத்தினரின் சிரமங்களை நீங்கள் ஊகித்துப் பார்க்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். இரவு மணி ஒன்பது மணி அடிக்கும்போதே குடித்தனக்காரர்களின் மின்சார உபயோகத்தைப் பாதுகாப்பில் இருக்கும் ஸ்விட்ச் மூலம் நிறுத்தி விடும் தர்மவான்களான வீட்டுச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். 'கல்கத்தாவில்.....' என்று செய்தித் தலைப்பு ஆரம்பிக்கும்போதே 'பட்' என்று கரண்ட் போய் விடும். கல்கத்தாவில் கலவரமா? கல்கத்தாவில் பிரதம மந்திரி எதற்காவது திறப்புவிழா நடத்தினாரா என்றெல்லாம் நம் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டும்.

''நல்லவர்களான சில வீட்டுச் சொந்தக்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் நமக்கு மறுநாட் காலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டுக் காரியங்களைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும் போது பத்தரை மணி வரை கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்க முடியுமா?''

''நள்ளிரவுவரை ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் நடப்பது பற்றி உங்கள் அபிப்பிராயம்?''

''நமக்குப் பத்தரை மணி வரையிலான ஒலிபரப்பே போதும். மாணவ மாணவிகள் பரீட்சைக்குப் படிக்கும் நேரத்தை சினிமாப் பாட்டுக்கள் கேட்க உபயோகப்படுத்திவிடுவார்கள். அது மாத்திரமில்லை; மேலைநாடுகளைப் போல நாம் நள்ளிரவுக்குப்பின் தூங்கிக் காலையில் நேரம் கழித்து எழுந்திருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையே!''

2. திரு அழ. வள்ளியப்பா, ஆழ்வார்பேட்டை


''கல்வி ஒலிபரப்பு பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?''

''நோக்கம் நல்லதுதான். ஆனால் பலன் போதுமானதாக இல்லை என்று நினைக்கிறேன். காரணம் பெரும்பாலான பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் கிடையாது. அப்படி வானொலிப் பெட்டிகள் இருக்கும் பள்ளிகளில் அவற்றை இந்த மாதிரி குறிப்பிட்ட நேரங்களில் உபயோகப்படுத்துவதும் கிடையாது. ஆரம்பப் பள்ளிகளுக்கு என்று பகல் பன்னிரண்டரை மணி சுமாருக்கும் உயர்தரப் பள்ளிகளுக்குப் பிற்பகல் இரண்டேகால் மணி சுமாருக்கும் கல்வி ஒலிபரப்பு நடக்கிறது. தங்கள் 'சிலபஸ்ஸை' ஒட்டிய பாடங்களை நடத்தி முடிப்பதில் ஆசிரியர்கள் வேகம் காட்ட வேண்டியிருப்பதால் அவர்கள் தங்கள் மாணவர்களுக்கு இந்த ஒலிபரப்புக்களைக் கேட்க நேரம் அநுமதிக்க முடியாத

படி இருக்கிறது. பொதுப்படையான கல்வி ஒலிபரப்புக்களை ஞாயிறு தவிர மற்ற நாட்களில் தினசரி முன்னிரவு வேளைகளில் அரை மணி நேரம் வைத்துக் கொள்ளலாம்.''

''எல்லோருக்குமே முன்னிரவு ஆறரை மணியிலிருந்து ஒன்பதரை மணிவரையில்தான் கொஞ்சம் சௌகர்யமாக இருப்பிடங்களில் உட்காரும்படியான நேரம். நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் இந்த மூன்று மணி அவகாசத்தில் அடக்க முடியாது. தமிழ் ஆங்கிலச் செய்திகளுக்கு அரைமணி நேரத்தை ஒதுக்கிவிட்டால் மிச்சம் மூன்றுமணி நேரம்தானே?''


'' உண்மை ! இந்த நேரத்திலேதான் சென்னை நிலையம் தன் மூன்று அலைவரிசைகளையும் சாமர்த்தியமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். முக்கிய அலை வரிசையிலே ஏழரையிலிருந்து எட்டு வரை விவசாயிகளுக்கான ஒலிபரப்பை வைத்துக் கொள்கிறார்கள். இது முன்னாலே ஆறரை மணிக்கு இருந்த போது சௌகரியமாக இருந்தது. இப்போ அது கிராமவாசிகளுக்கும் சரியான நேரமில்லாமல் பட்டணவாசிகளுக்கும் பொருத்தமில்லாமல் அமைந்து போயிருக்கிறது. இந்த 211, 193 மீட்டர் மத்திம அலை ஒலிபரப்புகளின் சக்தி இன்னும் அதிகமாக வேண்டும்.''



3. திரு எம். ரகுபதி, எழும்பூர்

''நீங்கள் விவித பாரதி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளின் அபிமானியா?''

''ஆம். அதில் பல அம்சங்களை நான் ரசிக்கிறேன். ஆனால் ஒரு விஷயம். அறிவிப்பாளர்கள்தான் ஏதோ பள்ளிக்கூடப் பாடம் வாசிக்கும் முறையில் பேசுகிறார்கள் !



''மாலை நாலரை மணியிலிருந்து ஐந்தரை வரை மதுர கீதம் என்ற தலைப்பில் தமிழ், தெலுங்கு மலையாளப் பாட்டுக்களைக் கேட்க முடிகிறது. ஆனால் இந்த நிகழ்ச்சியை ஒரு மொழிக்குக் கால்மணி நேரம் வீதம் திட்டமிட்டு முன்கூட்டியே அறிவித்து விட்டுச் செய்யலாம்.''

''அறிவிப்பு முறையில் மாறுதல்கள் வேண்டும் என்று நினைக்கிறீர்களா?''

''ஆமாம். இது ஓர் அவசியமான விஷயம். இதையே 'கமர்ஷியல்' ஒலிபரப்பாக மாற்றி அமைத்தால் அறிவிப்புகளும் கவர்ச்சியாக இருக்கும். அரசாங்கத்தின் நிதி நிலைமையும் அபிவிருத்தி அடையும்.''



4. திரு ராஜு, புரசைவாக்கம்

''ரேடியோப் பேச்சுக்கள், நாடகங்கள் முதலியவை இப்போதெல்லாம் எல்லோரும் சௌகர்யமாகக் கேட்கக்கூடிய நேரங்களில் அமைகின்றனவா?''

''பரவாயில்லை. ஆனால் பூரண திருப்தியுமில்லை. இப்போதெல்லாம் காலை ஒன்பதரை மணிக்கெல்லாம் பேச்சுக்கள், விவாதங்களை ஒலிபரப்புகிறார்கள். ஆண்களுக்கு ஆபீஸ் அவசரம். கேட்க முடியாது. பெண்


களுக்குச் சுவாரசியமில்லாத விஷயங்கள். இந்த நேரத்தை வழக்கம் போல் ஏதாவது வாத்திய இசைக்காவது மெல்லிசை ஒலிபரப்புக்காவது செலவிட்டுப் பார்க்கலாம். முன் பெல்லாம் நாடகங்களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரங்கள் என்று ஒதுக்கி விருந்தார்கள். இப்போது அது மாறிவிட்டது.''

''பேச்சுக்கள், விவாதங்கள் முதலியவற்றுக்கு உகந்த நேரம் எது?''

''மாலை ஏழரை அல்லது ஒன்பதே கால்! பல சந்தர்ப்பங்களில் இந்தப் பேச்சுக்கள் கவர்ச்சியற்றுச் செயற்கையாகப் போகின்ற போது அதுவும் ரசிக்க மாட்டேன் என்கிறது. பாடகர்கள் எப்படித் தங்கள் அபிமானிகள் கவனம் மேலும் தங்களிடம் திரும்ப வேண்டும் என்று அக்கறை எடுத்துக் கொண்டு உழைத்துப் பாடுகிறார்களோ, அப்படி அக்கறையை இந்தப் பேச்சாளர்களில் பெரும்பாலோர் எடுத்துக் கொள்வதில்லை. பிராந்தியச் செய்திகள் வாசிப்பவர்கள் எப்படி உணர்ச்சியற்றுப் பேசுகிறார்களோ, அப்படித்தான் பல பேச்சாளர்கள், கல்வெட்டு ஆராய்ச்சியிலிருந்து, கார் ஓட்டும் அநுபவம் வரையில் ஒரே ரீதியில் பேசி விடுகிறார்கள்.''

—மேஜு

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



இந்தக் காலத்தில் சின்ன அசௌகர்யம் ஏற்பட்டாலும் உடனே யாருக்கும் முணுக்கென்று கோபம் வந்து விடுகிறது. உடனே கொடி பிடித்துக் கோஷம் போட்டு அமர்க்களப்படுத்தி விடுவார்கள். அன்று தமக்குச் சௌகர்யம் கிட்டியும் அதைப் பிறத்தியாருக்கு ஈந்துவிட்டுத் தொல்லைப் பட்ட அந்த மகானை மறக்க இயலாது.

தாய் நாட்டுக்காக உழைத்த உத்தமர் அவர். யார் எது கேட்டாலும் சொந்த நலனுக்கு அதனால் குந்தகம் விளையும் என்று தெரிந்தாலும் — மறுக்க மாட்டார். அதற்குச் சான்று பின் வரும் நிகழ்ச்சியாகும்.

1912ல் பங்கிம்பூர் காங்கிரஸ் மகா சபையின் மகாநாட்டில் பங்கு கொண்ட பின் ரயிலில் தமக்கென ஒதுக்கிவிடப் பட்டிருந்த தனி முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிக் கொண்டார். சர்க்கார் சர்வீஸ் கமிஷன் ஒன்றிலும் அவர் அங்கத்தினராய் இருந்தபடியால் அவருக்கு அந்தச் சலுகை. ஏற்கனவே உடல் பலவீனமுற்றிருந்த அவர் மகாநாட்டுக்கூட்டங்களில் பேசிய களைப்புத்தீர அன்று இரவு ரயிலில் படுத்து நிம்மதியாகத் தூங்கத் திட்டம் போட்டிருந்தார். மகாநாட்டில் கலந்து கொண்டிருந்த அங்கத்தினர்களுள் ஒருவர் வந்து ''உங்களோடு நானும் வரலாமா?'' என்று கேட்டதும் பெரியவர் திடுக்கிட்டார். சளசளவென்று பேசும் அந்தத் தொணதொணப்புப் பேர்வழி கூட வந்தால் தூங்க முடியுமா? மன அதிர்ச்சியை வெளிக் காட்டாமல் 'சரி' என்றார்.



சிறிது நேரம் பொறுத்து அதே ஆசாமி ஓடிவந்து, ''என்னுடைய நண்பர் ஒருவர் கூட வருகிறார். வரலாமா?'' என்று தயக்கமின்றிக் கேட்டார். நிறுத்தாமல் பேசுகிறவருக்குத் துணை என்றால் கேட்க வேண்டுமா? பெரியவருக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. வெறும் வாய்க்கு அவல்! இருந்தாலும் அடக்கத்துடன் அதற்கும் தலை அசைத்தார். இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். ரயில் புறப்பட்டவுடன் முதல் நண்பர் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டார். ''மேல் பர்த் சௌகர்யமில்லை. படுத்துப் பழக்கமும் இல்லை. கீழ் பர்த்துக்களில் நாங்கள் இரண்டு பேரும் படுக்கலாமா?''

என்ன சோதனை! அதற்கும் இசைந்துவிட்டு, உடல் நலிவுற்றிருந்த அந்த நிலையிலும் சிரமப்பட்டுச் சங்கிலியைப் பற்றி மெள்ள ஏறி மேல்பர்த்தில் படுத்துக்கொண்டார் பெரியவர். அன்று முழுவதும் அவருக்குச் சிவராத்திரி!

அந்தப் பெரியவர் யார் தெரியுமா? கோபால கிருஷ்ண கோகலே!

ஆதாரம் : நேருவின் 'சுய சரிதை'

தகவல் : என். முரளி





ஷகீலா



ராஜா

ஃபரார்

ஷகீலா: ராஜா! நீயும் நானும் ஒண்ணு!

ராஜா: எப்படி ?

ஷகீலா: எப்படின்னு, நீ 'ஃபரார்' என்கிற ஹிந்திப் படத்திலே எப்படி நடிக்கிறயோ, அப்படியே நான் தமிழ்ப் படத்திலே நடிச்சிருக்கேன்.

ராஜா: நீயாவா நடிச்சே? பொய் சொல்லப்படாது.

ஷகீலா: மெய்யாவே சொல்றேன். படம் எடுத்தவங்க அப்படி நடிக்க வைச்சிருக்காங்க.... உன்னைப் பார்த்து நான் நடிச்சேனு, என்னைப் பார்த்து நீ நடிச்சியான்னு பார்க்கிறவங்க சந்தேகப் படுவாங்க. அப்படிப் படம் பிடிச்சிருக்காங்க.

ராஜா: நான் நடிச்ச படம்தான் முன்னாடி வந்தது. ஆனால்......

ஷகீலா: அந்தச் சண்டை நமக்குள்ளே எதுக்கு?

ராஜா: சொல்றதுக்கு முன்னே நீ என்னவோ பேசிக்கிட்டுப் போறியே! நடிப்பிலே பழம் எடுத்தவள் நீதான்! உன்னை மாதிரி நான் நடிக்காமல் போயிட்டேனேன்னு வருத்தமாயிருக்கு !

ஷகீலா: என்னை அநாவசியமாப் புகழுறே, உன் தங்கச்சியா நினைச்சு! நீ ஒண்ணும் சோடையில்லே.

ராஜா: இரு வல்லவர்கள் கதையைக் காட்டிலும் 'ஃபரார்' அதாவது தப்பி ஓடியவன் கதை....

ஷகீலா: நல்லா இருக்குன்னு சொல்றே. அப்படித்தானே? சந்தேகமில்லாமல் நல்லாத்தான் இருக்குது ! அநாவசியக் காதல், கும்கும் குத்துச் சண்டை இல்லே. என்னையேகூட அல்லவா அவங்க வலிப்பு நடனத்தை ஆடச் சொல்லிவிட்டாங்க !

ராஜா: பெரியவங்களும் நல்லா நடிச்சிருக்காங்க. ஒளிப்பதிவு - ஒலிப்பதிவும் நல்லாயிருக்குது !

ஷகீலா: சொல்லிக்கிட்டே போனால் என்ன பயன் ? அந்தந்தப் பாத்திரங்களுக்கு ஏற்றபடி நல்ல சான்ஸ் கொடுத்திருக்காங்க. உன்னைக் கப்பலுக் கெல்லாம் கூட்டிச் சென்றிருக்காங்களே! அந்த அதிர்ஷ்டம் எனக்கு இல்லையே !

ராஜா: இல்லேன்னு சொல்லாதே! இந்திப் படக்காரர்களாகட்டும், தமிழ்ப் படக்காரர்களாகட்டும், மேனாட்டுப் படங்களிலே என்ன என்ன புதிசாப் பார்க்கிறாங்களோ, அதைக் காப்பி அடிக்கிறாங்க ! வேறு ஒரு படத்தில் உனக்கு என்னைக் காட்டிலும் நல்ல சான்ஸ் தருவாங்க, கவலைப்படாதே!

ஷகீலா: அது மெய்தான். நம்ம நாட்டுக்காரங் களுக்கு இந்த அயல்நாட்டு மோகம் எப்போதுதான் போகுமோ, தெரியலே ! நம் நாட்டுப் பண்புகளைச் சித்திரித்து மேனாட்டினரும் மெச்சும்படியான படம் எடுக்க ஆண்டவன் எப்பொழுது அருள்புரிவானோ?


ராஜா: ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்பாங்க. இன்றைக்கில்லாவிட்டாலும் என் றாவது ஒரு நாள் திருந்தி நல்ல படம் எடுப்பாங்க.

ஷகீலா: நம்ம இரண்டு பேருடைய பேச்சும் கற்பனையாயிருந்தாலும் இதயத்துக்கு இன்பம் தரு கிறது. அந்த நல்ல நாளை நாம் பார்ப்பதற்குள் நான் பாட்டியாகவும் நீ தாத்தாவாகவும் ஆகி விடுவோமோ, என்னவோ ?

ராஜா: ஆனா ஆயிட்டுப் போவோம். நம்ம பேரப்பிள்ளைங்க பார்த்து சந்தோஷப்படட்டுமே !

இரு வல்லவர்கள்

கதை :	எதற்கு ஐயா கேட்டு 'போர்' அடிக்கிறீர் ?
நடிப்பு :	வெடிப்பாகப் பதில் சொன்னால் கோபம் வருமே ?
பாடல் :	இந்தக் காலத்தில் யாரையா சந்தமும் இந்தமும் பார்த்துப் பாடல் எழுதுகிறார்கள் ?
இசை :	மேனாட்டுப் பின்னணி இசையும் ஸ்டாப் வாச்சும் கை கொடுத்து உதவுகிற வரையில் இசைப் பஞ்சம் இல்லே, ஐயா!
நடனம் :	தொத்து நோய் போலப் பரவி வரும் டுவிஸ்டு நடனம் கைகொடுத்து உதவுகிறது. பாரதப் பண்பு நம் தமிழ்த் திரையிலிருந்தும் விடைபெற்றுக் கொண்டு போய் வெகு நாட்கள் ஆகின்றன என்பதை நினைவூட்டுகிறது, ஐயா!
நடிகர்கள் :	பேபி ஷகிலா மனத்தை நிறைக்கிறாள், மற்றவர்களுக்குச் சிறிதும் இடம் தராமல்.
உச்ச கட்டம்:	சாரம் கட்டி ஏற்ற முயன்றிருக்கிறார்களே, போதாதா?
ரசனை :	யாருக்கு? பார்ப்பவர்களுக்கா? படம் தயாரிப்பவர்களுக்கா?
விமரிசனம் :	வல்லவர்கள் எடுத்த படத்துக்கு விமரிசனமா ?
மொத்தத்தில்	இரு வல்லவர்கள் 'ஹாண்ட்ஸ் அப் !'





கோவில் முழுதும் கண்டேன்

சரோஜினி சுப்பிரமணியம்

● மார்ச்]மாதம் இருபதாம் தேதி அறிஞர் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் மறைந்து ஓராண்டாகிறது.



தைத் திங்கள் பௌர்ணமி திதி. அன்று திக்கெல்லாம் புகழும் எங்கள் திருநெல்வேலியிலுள்ள சுவாமி நெல்லையப்பர் கோவிலில் லக்ஷ தீபம். லக்ஷ தீபத்தைக் காண என் குழந்தைகளுடன் சென்றிருந்தேன். சுவாமியைத் தரிசித்துவிட்டுத் தீபங்களைப் பார்த்துக் கொண்டே கோவிலை வலம் வந்தோம். அப்போது என் பையன், ''அம்மா, இந்தக் கோவிலை யார் கட்டினார்கள்?'' என்று கேட்டான். சரியான விடை தெரியவில்லை எனக்கு. திகைத்தேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''யாரோ பாண்டிய ராஜா கட்டினார்'' என்று சொல்லி வைத்தேன். எனக்கே வெட்கமாக இருந்தது, சரியான விடையைச் சொல்ல முடியவில்லையே என்று. எங்கள் தந்தை அமரர் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதியிருந்த 'வேங்கடம் முதல் குமரி வரை' நூல்களைப் படித்திருந்தும், சரியான விடையான சுவாமி நெல்லையப்பர் கோவிலைக் கட்டியவர் நின்ற சீர் நெடுமாறன் என்னும் பாண்டிய ராஜா என்று கூறவில்லையே என்று வருத்தப்பட்டேன். தாத்தாவிடம் பேரன் கேட்டிருந்தால், கோவிலைக் கட்டிய ராஜா யார் என்று மட்டுமா சொல்லியிருப்பார்? அங்கு கோவில் எப்படி வந்தது. யார் கட்டியது? சுவாமிக்கு ஏன் அந்தப் பெயர் வந்தது. அக்கோவிலிலுள்ள கலைச் சிறப்புக்கள் என்ன என்று ஒரு விளக்கமே கொடுத்திருப்பார்களே!

கோவிலுக்குச் சென்று வந்த மறுநாள் ஓர் அன்பர் எங்கள் வீட்டைத் தேடி வந்தார். ''அயல் தேசத்து ராஜாவும் ராணியும் நம் ஊருக்கு வந்திருக்கிறார்கள். இன்று கழுகுமலைக் கோவிலைப் பார்க்கப் போகிறார்கள். அவர்களுடன் கோவிலுக்குப் போகு முன் ஸ்ரீ தொண்டைமான் எழுதிய புத்தகம் இருந்தால் கோவிலைப் பற்றித் தெரிந்து கொண்டு அவர்களுக்கு விளக்கம் தரலாமே!'' என்று கேட்டார். நம்மால் செய்யக் கூடியது எங்கள் தந்தை எழுதிய புத்தகத்தை எடுத்துக் கொடுப்பதுதான். ஆனால் இம்மாதிரி கேட்டு வருகிற அன்பர்களுக்கெல்லாம் சளைக்காமல் விளக்கம் கூற அவர்கள் இல்லையே என ஏங்கியது உள்ளம். நமக்குக் கிடைக்கக்கூடிய ஆறுதல் ஒன்றே ஒன்றுதான். எங்கள் தந்தை திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமானை அமரர் உருவில் காண வேண்டுமானால், அவர்கள் பார்த்து, ரசித்து மகிழ்ந்த கோவில்

னைத் தேடிச் செல்ல வேண்டும். மனச் சாந்தி பெற அதுதான் வழி.

எங்கள் தந்தை திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் சின்னப் பையனாக இருக்கும் போதே கோவில்களுக்குத் தவறாது போகும் பழக்கம் உடையவரா யிருந்தாராம். இந்தப் பழக்கம் இறுதிவரை நீடித்தது. வீட்டி லிருந்து புறப்பட்டால் தெரு முனையில் உள்ள பிள்ளையார் கோவிலில் நின்று ஒரு கும்பிடு போடுவார். பிறகு மேலே செல்வார். அப்படிப் போகிற வழியில் இருக்கிற கோவில் களையெல்லாம் கண்டு, நின்று, கையெடுத்து வணங்குவார். அவர்கூட நாங்களும் போவோம். அவர்கள் வணங்கிய பின்னர் தான் 'இங்குகூட ஒரு சின்னப் பிள்ளையார் கோவில் இருக்கிறதே! இங்குகூட ஓர் அம்மன் கோவில் இருக்கிறது. முன்னமே நமக்குத் தெரியாமல் போய்விட்டதே' என்று எண்ணத் தோன்றும். அவருக்கு இருந்த பக்தி உள்ளத்தால்தான்' வேங்கடம் முதல் குமரி வரை உள்ள கோவில்களுக்கெல்லாம் சென்று வந்தார்கள். எங்களையும் அநேகமாக அழைத் துச் சென்றார்கள். எங்கள் அத்தான் ஸ்ரீ வி. கே. சி. நடராஜன் மதுரைக்காரராக இருந்தும் பழநி குமரனைத் தரிசித்து மகிழும் பாக்கியம் பெறாமலிருந்தார். திருமண மான பின் அதைக் கேட்டு எங்கள் தந்தை வியந்தார். என் தமக்கையின் கணவரோடு எங்கள் எல்லோரையும் பழநிக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்வித்தார். என் கணவர் ஸ்ரீ சுப்பிரமணியமோ கோவில் களுக்குப் போகும் பழக்கமோ, திருநீறு பூசும் பழக்கமோ இல்லாதிருந்தார். அவ ரும் எங்கள் குடும்பத்தில் ஒருவரான பின் கோவில்களுக்குச் செல்லவும், தவறாது விபூதி பூசவும் கற்றுக் கொண்டார். இரு மாப்பிள்ளைமார்களுக்கும் திருச்செந்தூர் முரு கனிடத்தில் மாறாத பக்தியை உண்டாக்கிய வர் எங்கள் தந்தைதான். இப்படி எத்தனை எத்தனையோ நண்பர்கள் எங்கள் தந்தையிடம் பழகிய பின் அடிக்கடி கோவிலுக்குப் போக ஆரம்பித்திருக்கிறார்கள்.

எங்கள் தந்தை கோயமுத்தூரில் ஜில்லா கலெக்டரின் பிரதம உதவியாளராக இருந்த போது ஓய்வில்லாத வேலை. டாக்டர் எங்கள் தந்தைக்கு ரத்தக் கொதிப்பு இருப்பதாகவும் ஓய்வெடுக்கும்படியும் கூறினார். ரத்தக் கொதிப்புக்கு டாக்டர் மருந்தை விட இன் னொரு மருந்தின் மேல் தந்தைக்கு நம்பிக்கை பிறந்தது. பிள்ளையார்பட்டி கற்பக விநா யகர் சந்நிதியில் நான்கு நாட்கள் மௌன விரதம் மேற்கொள்ள நினைத்தார். நினைத்தபடி எங்கள் தந்தை மட்டும் போய் மௌன விரதத்தை அனுஷ்டித்தார். ஸ்ரீ சா. கணேசன் தந்தைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுக் காரைக்குடியி லேயே இருந்து கொண்டார். அவரும் பிள்ளையார்பட்டிக்குப் போயிருந்தால் எங்கள் தந்தையால் மௌன விரதம் அனுஷ்டிக்க முடியுமா? மௌன விரதம் அனுஷ்டித்ததால் ரத்தக் கொதிப்புக் குறைந்ததோ என்னவோ? கற்பக விநாயகர் அருளால் பல கலைக் கட்டுரைகளை உருவாக்கினார்.

தந்தை தஞ்சை ஜில்லாவில் சுமார் ஐந்து வருடங்கள் உத்தியோகம் வகித்தார். தஞ்சை ஜில்லாவில் காவிரிக் கரையில் எத்தனை எத்தனையோ கோவில்கள். அக் கோவில்களில் எல்லாம் அழகழகான மூர்த் தங்கள். அவற்றைக் காணக் காணத் தந்தை யின் நெஞ்சு நிறைந்தது. அந்தப் பெரு மிதத்தை மற்றவர்களுக்கும் ஊட்ட வேண் டும் என்ற ஆர்வம் பிறந்தது. அந்த ஆர்வத் தில் எழுந்ததே தஞ்சை அரண்மனையில் உள்ள கலைக்கூடம். சிதறிக் கிடந்த கலைச் செல்வங் களை ஒன்று சேர்த்தார். கலைக் கோவில் உருவாகியது. அங்குள்ள தெய்வத் திரு உரு வங்கள் அழியாப் புகழ் பெற்றன. கோவில் உள்ளவரை, கலை உள்ளவரை, கலைக்கூடம் உள்ளவரை, எங்கள் தந்தையின் நினைவும், பெருமையும் நிலைத்து நிற்கும்தானே?

எங்கள் தந்தை உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் கல்கியில் 'வேங்கடம் முதல் குமரிவரை' என்ற தொடரில் கட்டுரைகள் எழுதி வந்தார்.

இன்னும் ஆனந்த விகடன், கலைமகள் முதலிய பத்திரிகைகளிலும் அவ்வப்போது தாம் கண்ட கோவில்களில் உள்ள சிற்பச் செல்வங்களைப் பற்றி எழுதி வந்தார் எங்கள் தந்தை. கிருஷ்ணாபுரத்தில் உள்ள வீரபத்திரன் உருவத்தில் உள்ள கோபத்தை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தினார். ரதி, மன்மதனின் அழகை ரசிக்கச் செய் தார். 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் உள்ள கோனேரி ராஜபுரம் நடராஜரது திரு உருவத்தைக் கண்டோம். திருவெள்ளிக்குடியிலுள்ள மணக் கோலநாதரை நமக்குக் காண்பித்தார்.

அவர் வழிபட்ட கோவில்களில் தமிழ்க் கோவில் ஒன்று. குற்றாலத்திலிருந்த ரசிகமணி திரு டி. கே. சி.யின் இல்லத்தைக் கோவிலா கவும், அவர்களைத் தெய்வமாகவும் மதித்துப் போற்றி வந்தார். ரசிகமணி திரு டி. கே. சி. அவர்களின் உறவும், அன்பும்தான் எங்கள் தந்தை திரு தொ. மு. பாஸ்கரத் தொண் டைமானுக்குக் கலைப் பணியில் ஈடுபட எல்லா வல்லமையும் கொடுத்தன. இன்று இவ்வுலகில் இருவரும் இல்லை. வேங்கடத்துக்கு அப்பா லும் எங்கள் தந்தை தல யாத்திரை சென்று வந்தார். ஆனால் அவர் பார்த்து அநு பவித்ததை நமக்கு முழுமையும் எடுத்துத் தரு வதற்கு முன் இறைவன் அழைத்து விட்டான். 'இறையருள் இருந்தால் எழுதி முடிப்பேன்' என்றார். அது அவருக்கும் நமக்கும் கிட்ட வில்லை. இன்று.

* ஒத்த பல ஆலயங்கள்
ஓங்கிவிட்ட என்றறிந்து
எத்தனையோ கோயிலவை
ஏங்கிநிற்கும் — இத்தரையில்
நின்று வளர் நம்புகழும்
நீளுதற்கும் பாஸ்கரன் தான்
என்று வருவானிங்கே
என்று.

கோவில்களோடு நாமும் ஏங்குகிறோம்.

---

* பாடல்: ஸ்ரீ சா. கணேசன்



டி. 2642 ஏளி. ஏளி/டிளி கேப்ரிஸ் ஏளி, ஏளி/டிளி பண்டோரா ஆல் டிரான்ஸிஸ்டர்

டெலிராட்

தரும்பொழுது வருஷம் முழுவதும் செவிக்கு இன்பம் தருகிறீர்கள்

பொலிவான தோற்றம், செவிக்கு இன்பம் — இதற்கு டெலிராட் ரேடியோவை மிஞ்சும் பரிசு வேறு ஒன்றும் கிடையாது ■ பல மாடல்களிலிருந்து தேர்ந்தெடுக்கலாம் ■ டெலிராட்தான் இந்தியாவில் ஹை — ஃபை ரேடியோக்களை முதன் முதலில் தயாரித்து அளித்தவர்கள் ■ அவற்றின் மர காபினெட்டுகள் ஒலித் தெளிவும் ஓசைச் சிறப்பும் தருகின்றன ■ பூம்-பூம் சத்தமோ ஒலிச் சிதறலோ இருக்காது

ஒவ்வொரு உறுப்பும் கடும்தரக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. உத்தரவாதமும், விற்பனைக்குப் பிறகு சேவை வசதியும் உண்டு.


டெலிராட் பிரைவேட் லிமிடெட்
சீ ரோடு, பம்பாய்-10




டிஸ்ட்ரிபூடர்ஸ்: (தெற்கு மண்டலம்)

மெஸர்ஸ் அசோசியேடட் ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ்

31, ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், சென்னை-2.



முதல் அநுபவம்
கதை : ஜெயந்தி
சித்திரம்: செல்லம்
சித்திரக் கதை
நாதனுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. காரியாலய விஷயமாகப் பம்பாய்க்கு விமானத்தில் செல்லும் வாய்ப்பும் ஏற்பட்டது.
குட் ஈவினிங்...
என்னுடைய ஸீட் எங்கே..?
இதுதான் உங்கள் ஸீட். வசதியாக இருக்கிறதல்லவா?
உங்கள் ஆசனம் கூட என் அருகில்தான் போலிருக்கிறது.
என் அருகிலேயே நீங்கள் இருப்பதால் உங்களைக் கவனித்துக் கொள்வது எனக்குச் சுலபம்.
அட்டென்ஷன் ப்ளீஸ்! விமானம் இன்னும் சில நிமிஷங்களில் கிளம்பப் போகிறது. எல்லோரும் அவரவர்கள் ஆசனத்தோடு இணைந்துள்ள 'பெல்ட்'களை அணிந்து கொள்ளுங்கள்.
நாதன் பெல்டை அணிந்துகொள்ளத் தெரியாமல் தவித்தான்.
எத்தனை இனிமையான மணம்! இவள் உபயோகிக்கும் செண்ட் என்ன என்று விசாரிக்க வேண்டும்.
நீங்கள் விமானத்தில் பிரயாணம் செய்வது இதுதான் முதல் முறையோ?
ஆமாம்! எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?
பெல்ட்டோடு நீங்கள் போராடிய முறையே சொல்கிறதே.
மிஸ்டர் நாதன்! உங்களுக்கு என்ன உதவி தேவையானாலும் இந்தப் பட்டனை அழுத்துங்கள். ஓடி வருகிறேன். இந்தப் பஞ்சைக் காதில் வைத்துக் கொள்ளவேண்டும்... இப்படி!


விமானப்பயணம் முதல் அநுபவமாதலால் நாதனுக்கு ஹோஸ்டஸின் உதவி அடிக்கடி தேவைப் பட்டது.
தலை சுற்றலா? இதோ இந்த யூடிகொலோனைத் தடவினால் சரியாகிவிடும்.
இந்த மாத்திரையைச் சாப்பிடுங்கள்...
சூடாகக் காப்பி கொண்டு வருகிறேன்
நாலு தடவை விமானத்தில் போனால் எல்லாம் பழக்கமாகி விடும்.
இந்த மாதிரி உபசாரங்கள் நடப்பதென்றால் தினமும் கூடப் பிரயாணம் செய்யலாமே.
பேஷ்... பேஷ்! அழகாகப் பேசுகிறீர்களே!
விமானம் பம்பாய் விமான நிலையத்தில் போய் நிற்கிறது.
விமானம் பம்பாய்க்குச் சீக்கிரமே வந்துவிட்டது. ம்... மறுபடி உங்களை எங்கே எப்போது சந்திக்கலாம்?
ஹோட்டல் தாஜில் தானே தங்கப் போகிறீர்கள். அங்கு வந்து நான் பார்க்கிறேன்!
கண்டிப்பாக...! நாளை மாலை ஐந்துமணிக்கு மறந்துவிடமாட்டாயே?
மறுநாள் மாலை குறித்த நேரத்தில்...
ஹலோ!...! எங்கே வராமல் ஏமாற்றி விடுவீர்களோ என்று தவித்துக் கொண்டிருந்தேன்.
நிஜமாகவா?
...வந்து மெட்ரோவில் ஒரு பிரமாதமான ஆங்கிலப் படம். அதற்குப் போய்விட்டு வருவோம்...
மிஸ்டர் நாதன்! இது பொதுவாகப் பிரயாணிகளிடம் அன்பாக ஆதரவாக நடந்துகொள்ள வேண்டியது ஒரு ஹோஸ்டஸின் கடமை. எங்கள் கடமையை நாங்கள் ஒழுங்காகச் செய்வதை உங்களைப் போன்ற சிலர் தப்பர்த்தம் செய்து கொள்ளுகிறார்கள். உங்கள் செல்வத்திலும் செல்வாக்கிலும் நான் மயங்கிவிட்டதாக எண்ண வேண்டாம்.
முக்கியமாக இதைச் சொல்லிவிட்டுப் போகவே வந்தேன் நான்... வரட்டுமா? அந்தக் காரில் என் கணவராகப் போகிறவர் காத்திருக்கிறார்... டாட்டா!...! சீரியோ...!

பல்சுவைப் பக்கம் 1

கத்தியின்றி ரத்தமின்றி....

கத்தியையும் உபயோகிக்காது, ரத்தத்தையும் சிந்த விடாது அறுவைச் சிகிச்சையைச் செய்யும் அளவிற்கு விஞ்ஞானம் முன்னேறி விட்டது. அமெரிக்காவில் உள்ள 'சின்சின்னடி' அறுவை சிகிச்சை நிலயத்தில் சாதாரண ஒளியை விட 10 லட்சம் மடங்கு பிரகாச மான 'லாசர்' என்ற ஒளிக்கதிரைப் பயன் படுத்தி இக்காரியத்தைச் சாதித்துள்ளனர். சமீபத்தில் ஒரு நோயாளியின் உடலில் ஏற்பட்ட கட்டியை அறுக்க ஒளிக்கதிர் லாசர் பாய்ச்சப்பட்ட உடன் கட்டி அறுபட் டது; ஒளியின் வெப்பத்தில் ரத்தமும் கண்டிப் போயிற்று. சிகிச்சையும் வெற்றிகரமாக முடிந்தது. அங்குள்ள ஆய்வாளர்களில் ஒருவரான டாக்டர் பிரகன் என்பவர் இதே லாசரை உபயோகித்து இத யம், மூளை போன்ற உள்ளுறுப்புகளில் கூட அறுவைச் சிகிச்சையை இரத்தம் சிந்தாமல் வெற்றிகரமாய் நடத்தமுடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருக் கிறார்.

—செல்வன்

யார் அவர்?

அமெரிக்க சுதந்திரப் போர் நடந்து கொண் டிருந்த சமயம் போர் வீரர்களுக்குக் கடுமையான வேலையிடப்பட்டிருந்தது. புதிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதே அது. பால வேலையை மேற் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் ஓர் அதிகாரி. வீரர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் அவர்களை விரட்டிக் கொண் டிருந்தான். சிறிது நேரத்துக்குள் அங்கு குதிரை யில் வந்த ஒருவர் அதிகாரியை நோக்கி, 'ஏன், தாங்களும் உதவலாமே' என்றார். அதிகாரி கோபமாக அவரைப் பார்த்து, 'இது என் வேலை யல்ல' என்றான். அவரோ குதிரையிலிருந்து இறங்கி வீரர்களுக்கு உதவினார். காரியம் முடிந்ததும் குதிரையில் திரும்பவும் ஏறி, 'ஐயா, இனி இதுபோன்ற



வேலை வந்தால், இராணுவத் தளபதி ஜார்ஜ் வாஷிங்ட னுக்குத் தெரிவியுங்கள்; அவர் வந்து உதவுவார்' என்று கூறிப் போய் விட் டார்!

—மன்னார்சாமி

தலைகீழாக நடக்கும் மிருகம்!



- ஒரு புறாவினுடைய எலும்புகளின் நிறையை விட அதன் இறகுகளின் நிறை அதிகமாக இருக்கும்.



- ஈ ஒரு நிமிடத்தில் இருபதினாயிரம் தடவை இறக்கையை அடித்துப் பறக்கிறது.



- தன் உடலைவிட அதிக நீளமான வால் உடைய மிருகம் குரங்கு ஒன்றுதான்.



- முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தான் தூங்கும்.



- கழுகு பறக்கும்போது அதன் கால்களும், தலையும் கீழ்நோக்கியே இருக்கும்.



- நண்டுக்குப் பற்கள் அதனுடைய வயிற்றில் இருக்கின்றன.



- மீன்கள் சாகும் வரை வளர்ச்சி யடைந்து கொண்டே இருக்கின்றன.



- சிம்பன்சி என்ற ஒருவகைக் குரங்கைத் தவிர இதர பிராணிகளுக்கு ஜலதோஷம் வருவதில்லை.
- ஸ்லாத் என்றொரு மிருகம் உள்ளது. இது நீரே அருந்துவதில்லை: தலைகீழாகவும் இது நடக்கும்.
- சிங்கத்தின் வாயிலே இருக்கும் மயிர்க்கற்றையை விலக்கிப் பார்த்தால் முனையில் ஆணிபோல் கடின மான ஒரு நகம் இருக்கக் காணலாம். - காழி ஜெயா



திரும்பிப் போ!

'விர்'ரென்ற போலீஸ் விஸில் காதைத் துளைக்கிறது. உங்கள் இதைப் பையும் இணைநிலையும் அறியாதவர் போல், 'ஒன் வே டிராபிக் ஸார்!' என்று கூறுகிறார் 'டிராபிக் கான்ஸ்டபிள்' — இதுமாதிரி எத்தனை முறை நடந்த தில்லை உங்கள் அனுபவத்தில்? சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். தினம் ஒரு தெரு 'ஒன்வே' ஆகவும் மறுதினம் 'டபுள்வே' ஆகவும் மாறிக்கொண்டேயிருக்கும்.

பொதுமக்களின் இந்தச் சிக்கலைத் தீர்க்க சிகாகோ நகரத்தில் புது வழியொன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். காரோட்டியோ பிறரோ எது ஒரு வழிப் பாதை, எது அல்ல என்று நினைவில் வைத்துக் கொள்ளத் தேவையில்லை. தானே இயங்கி மக்களின் போக்குவரத்துக் குற்றங்களைத் தவிர்க்கும் சாதனத்தை 'ஒருவழிப் பாதை'யின் தொடக்கத்தில் அமைத்திருக்கின்றனர்.

இந்த விசையின் பயனால் — தவறான திசையில் ஒரு வாகனம் செல்ல நேரிட்டால் உடனே சிவப்பு விளக்கு பிரகாசமாக எரிகின்றது; 'திரும்பிச் செல்லுங்கள்; தவறான பாதையில் நுழைந்து விட்டீர்கள்' என்னும் அசரீரி உரத்துக் கேட்கிறது. அதே சமயம் எதிர்த் திசையில் (முறையான வழியில்) வரும் வாகனங்களை நிற்கச் சொல்லி ஆரஞ்சு விளக்கு அவர்கள் பக்கமாக எரிகின்றது. இவையனைத்தும் தவறு நிகழ்ந்த ஒரு விநாடியில் நிகழ்ந்து விடுகிறது!

தகவல்: ப. விஜயமூர்த்தி



நல்லதும் கெட்டதும்

நபிகள் நாயகம் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது தேளொன்று நீர்ச் சுழலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டார். கரையேற முடியாமல் அது தவித்தது. நபிகளின் உள்ளத்தில் கருணை பிறந்தது. தேளை மெல்லக் கையால் எடுத்துக் காப்பாற்ற முயன்றார். ஆனால் அதுவோ அவர் கையில் நன்றாகக் கொட்டி விட்டு மீண்டும் தண்ணீருக்குள் விழுந்து விட்டது. மறுபடியும் கரை சேரப் போராடியது.

நபிகளின் கருணை உள்ளம் இரக்கம் காட்டவே முயன்றது. அந்த நினைவில் தேள் கொட்டிய கடுப்புக்கூட அவருக்குத் தெரியவில்லை. மீண்டும் அதைக் காப்பாற்ற முயன்றார். பலன்? பழைய பலன்தான்! கொஞ்சம்கூட மனம் தளராமல் நபிகள் மூன்றும் முறையும் அதைக் காப்பாற்ற முயன்றார். அப்போது கரையில் நின்ற ஒருவர் முகம்மது நபியைப் பார்த்துக் கேட்டார்: ''தீர்க்கதரிசியே, இந்தத் துஷ்ட ஜந்து தன்னுடைய தீய குணத்தை விடுவதாயில்லை. ஒவ்வொரு தடவையும் நன்மைக்குப் பதிலாகத் தீமையே செய்கிறது. அப்படியிருக்க ஏன் அதைக் காப்பாற்ற முயல்கிறீர்கள்? அது செத்துத் தொலையட்டுமே!''

நபிகள் அமைதியாக, சாந்தமான முறையில் பதிலளித்தார். ''சகோதரரே, அந்தத் தேளோ தன் கெட்ட குணத்தைக் கைவிடுவதாயில்லை யல்லவா? நான் மட்டும் ஏன் எனது நற்குணத்தைக் கைவிட வேண்டும்?''

ஆதாரம்: 'ஸ்மைல்ஸ் அண்டு டியர்ஸ்'. தகவல்: இ. பட்டிராஜன்

பல்சுவைப் பக்கம் 2

அந்த ஒருவன்

மகா கவி ரவீந்திர நாத தாகூர் மரணமடைந்த அன்று எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை விடப்பட்டது. பிரபல மராத்தி எழுத்தாளர் திரு வி. எஸ். காண்டேகர் மகன் அவிநாஷ் என்ற சிறுவன் அப்போது ஆரம்பப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். 'தாகூர் உலக மகா கவி, பிரபல எழுத்தாளர்' என்று அநுதாபக் கூட்டத்தில் பள்ளி ஆசிரியர் பேசியது சிறுவன் அவிநாஷின் சிந்தனையைக் கிளறியது. நேராக வீட்டுக்கு வந்து தன் தந்தையிடம், ''அப்பா! நீங்கள் இறந்ததும் இம்மாதிரி எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் விடுமுறை கிடைக்கும் அல்லவா?'' என்று கேட்டான்.

''எல்லாப் பள்ளி மாணவர்களைப் பற்றியும் எனக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாக ஒரு பள்ளி மாணவனுக்காவது விடுமுறை கிடைக்கும்!'' என்று பதிலளித்தார் காண்டேகர்.

தகவல்: தட்சிணாமூர்த்தி





நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலை
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனு
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவை
யாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனு ஒன்றுதான்.
பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது
நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனு ஒன்றுதான்.
அன்றாடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனு.
Rexona
GOOD FOR YOUR SKIN
'கேடில்' அடங்கிய ரெக்ஸோனு
உங்கள் மேனியெழிலுக்கு உகந்தது
லின்டாஸ் - RX. 25-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



ஆபத்தில் விளைந்த அருவருப்பு





அந்தக் கிராமத்தின் பெயர் 'பாத்'. அமைதியும் அழகும் நிறைந்த கிராமம். வம்புதும்பு சண்டை சச்சரவு களை விலைக்கு வாங்காமல் ஒவ்வொரு குடும்பமும் நிம்மதியாக வாழ்ந்து வந்தது. அவ்வப்போது ஆண்ட்ரு ஹேறாவைப் பற்றி ஏதாவது செய் திகள் கிளம்பும். ஆனால் யாரும் அதைப் பொருட்படுத்துவதில்லை.

ஆண்ட்ரு தனக்குச் சொந்தமான பெரிய பண்ணையில் கிராமத்தை ஒட்டி வசித்து வந்தான். சுபாவத்தில் கொஞ்சம் முரடன். முன்கோபி. நோயாளியான தன் மனைவியுடன் அடிக்கடி சண்டை போடுவதும், சும்மா இருக்கும் தன் குதிரைகளைச் சவுக்கால் விளாசுவதும், அன்னியர் நாய்களை அலட்சியமாகச் கட்டுத் தள்ளுவதும் அவனது வழக்கங்களாகி விட்டன. பண்ணையை அவன் சரியாகக் கவனிப்பதில்லை. நிலங்கள் புதர் மண்டித் தரிசாகப் போயின. அதை அடமானத்துக்கு எடுத்திருந்தவர்களுக்கு அவன் வட்டிப் பணத்தைக் கொடுப்பதில்லை. கடன் பாக்கி கேட்பவர்களிடம் எல்லாம் அவன் ஒரே காரணத்தைக் காட்டிச் சீறி விழுந்தான். ''நான் கல்வி வரி கட்டியே நாசமாகப் போகிறேன். இந்த ஊருக்குப் புதுப் பள்ளிக்கூடம் இல்லை என்று யார் அழுதார்கள்? இந்தப் பள்ளிக்கூடம் பொதுமக்கள் பணத்தை விழுங்குகிறது'' என்பான் அவன் அடிக்கடி.

ஆண்ட்ருவுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியதெல்லாம் கிராமத்தில் புதிதாகத் தோன்றிய பள்ளிக்கூடம்தான். ஊர்க்காரர்கள் எல்லோர் மீதுமே அவனுக்கு ஓர் இனம் புரியாத வெறுப்பு. ஊரில் புதிதாக ஒரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்ற யோசனையைச் சிலர் எழுப்பியபோது ஆண்ட்ரு அதைத் தீவிரமாக எதிர்த்தான்.

'புதுப் பள்ளிக்கூடம் அவசியம்' என்று வாதாடியவர் எமரி ஹியூக் என்பவர். 'புதுப் பள்ளிக்கூடம் என்றால் ஊர்க்காரர்கள் தலையில்தான் அதிக வரிச்சுமை விழும். ஆகையால் நான் இதை எதிர்க்கிறேன்' என்றான் ஆண்ட்ரு.

ஆனால் ஹியூக் பக்கம்தான் ஊர்க்காரர்கள் பலம் இருந்தது. பள்ளிக்கூடம் எழுப்பும் திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டுப் பள்ளிக்கூடக் கட்டடமும் கம்பீரமாக எழுந்தது. ஹியூக், ஆண்ட்ருவைச் சமாதானப்படுத்தும் வகையில் பள்ளி நிர்வாகத்தில் அவனையே பொக்கிஷதாரராகத் தேர்ந்தெடுக்கவைத்தார்.

பொக்கிஷதாரராக ஆண்ட்ரு திறம்படச் செயலாற்றினான். அந்தப் பதவியிலிருந்தால் பொதுமக்கள் வரிப் பணம் எப்படி உபயோகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அவன் உணர்வான் என்பதற்காகத்தான் ஹியூக் இந்த ஏற்பாட்டைச் செய்தார்.

ஆனால் ஆண்ட்ரு யாருக்கும் தெரியாமல் மற்றொரு காரியத்தையும் திறன்படச் செய்து வந்தான். ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் கிராமமே தூங்கிய பிறகு தன்னுடைய பழைய மோட்டாரில் பள்ளிக்கூடக் கட்டடத்துக்குப் பின்பக்கத்திலுள்ள ஒரு பெரிய மரத்தடியில் வந்து இறங்கினான். மர இருளில் மோட்டார் நிற்பது யாருடைய பார்வையிலும் விழாது. பிறகு அவன் இருளில் பதுங்கிப் பதுங்கி நடந்து கட்டடத்தின் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு பள்ளிக்குள் நுழைந்தான். அதற்கான சாவியை அவனே தயார் பண்ணியிருந்தான். கட்டடத்தின் அடித்தளத்துக்கும் மேல்தளத்துக்கும் பல தடவைகள் போய் வந்தான். இப்படிப் பல நாட்கள் செயல்பட்டான்.

சின்னஞ்சிறு மாணவ மாணவியர் உற்சாகத்துடன் வண்ண வண்ணமான ஆடைகளில் வளைய வந்து கொண்டிருந்தார்கள். 1927ம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் தேதி. அன்றுதான் பள்ளியின் முதல் ஆண்டு விழா.

காலை ஒன்பதரை மணிக்குப் பள்ளியின் முதல் மணி அடித்தது. பாட வகுப்புகள் அன்று கிடையாதாகையால் சிறுவர் சிறுமியர்கள் தங்கள் தங்கள் வகுப்பு அறைகளில் ஆனந்தமாக ஆடிப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

சரியாக ஒன்பது மணி நாற்பத்தி மூன்றாவது நிமிடத்தில் அந்தப் பள்ளிக்கூடக் கட்டடமே ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி பலருக்கு ஏற்பட்டது. காது செவிடுபடும்படியான குண்டு வெடிச் சத்தமும் கேட்டது. இரண்டாவது மாடியின் வடக்குப் பகுதி அப்படியே ஆடி முதல் மாடியின் தளத்தில் வீழ்ந்தது. குழந்தைகளின் கிரீச்சிட்ட அலறல் ஒலி ஏகோபித்த முறையில் வெகுதூரம் கேட்டது.

இடிந்து விழுந்த பகுதியிலிருந்து காயமடைந்த குழந்தைகளை அப்புறப்படுத்தும் வேலையில் பதற்றமடையாமல் பள்ளிமுதல்வர் ஹக்கெட்டும் காயமடையாத உபாத்தியாயர்களும் ஈடுபட்டார்கள். ஹியூக் ஏணிகளைச் சம்பாதித்து வந்து குழந்தைகளைக் கீழே கொண்டு வருவதில் முனைந்தார். பக்கத்து நகரங்களிலிருந்து தீயணைக்கும் மோட்டார்கள் விரைந்து வந்தன. பெற்றோர்கள் சொல்லொணாத் துயரத்துடன் பள்ளி வாசலில் வந்து குழுமினார்.

உதவிக்கு வந்திருந்தவர்களில் ஸ்டீபன் பிரைஸ் என்னும் கட்டடத் தொழிலாளியும் ஒருவன். பள்ளிக்கூடத்துக்குள் போய்ச் சுற்றிப் பார்த்து வெளிறிய முகத்துடன் அவன் வெளியே வந்தான். பள்ளிக்கூடத்தின் பல பகுதிகளிலும் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டு ஒவ்வொன்றும் இணைக்கப்பட்டிருப்பதாகவும் அடித்தளத்தில் ஒரு பெரிய பெட்ரோல் டாங்கியே குண்டு வெடிப்புக்கு முத்தாய்ப்பு வைக்க நிறுவப்பட்டிருக்கிறதென்றும் எதிர்பாராத வகையில் இரண்டாவது மாடி குண்டு வெடித்து, மற்றப் பகுதிகளுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதென்றும் சொன்னான். திட்டமிட்டபடி அடித்தளக் குண்டு முதலில் வெடித்திருந்தால் பள்ளி முழுதும் நாசமாயிருக்கும் என்றும் அறிவித்தான். அந்தக் குண்டுகளைப் பத்திரமாக அகற்றுவதில் மற்றவர்கள் முனைந்தார்கள்.

அப்போதுதான் ஆண்ட்ரு எங்கிருந்தோ தன் காரில் வந்து சேர்ந்தான். பள்ளி மைதானத்தில் காரை நிறுத்திச் சற்று வேடிக்கை பார்த்து விட்டு, அந்தப் பக்கம் வந்த ஹியூக்கைக் கை காட்டி அழைத்தான். ஹியூக் அவனிடம் விஷயத்தை விளக்க வேகமாக வந்து அவன் காரில் கைவைத்தவாறு ஏதோ பேச ஆரம்பித்தார். அந்த விநாடியில் ஆண்ட்ரு தன் காரிலுள்ள ஒரு பகுதியை அசைத்தான். அடுத்த கணம் அந்தக் காரிலிருந்த ஒரு குண்டு வெடித்தது. ஆண்ட்ரு, ஹியூக், இருவருடைய உடல்களும் சுக்கு நூறாகச் சிதிலமடைந்து சிதறின. அதே நேரத்தில் ஆண்ட்ருவின் வீட்டில் அவன் கடிகாரத்துடன் இணைத்து வைத்திருந்த ஒரு வெடிகுண்டு வெடித்து அவன் வீட்டைத் தரை மட்டமாக்கியது.

தன்னையும் நாசமாக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்தையும் தகர்த்த ஆண்ட்ரு சமூகத்தின் மேல் தனக்குள்ள அருவருப்பைத் தெரிவித்துக் கொண்டான். இந்த அருவருப்பான காட்சியைக் கண்ட பல 'பாத்' கிராமவாசிகளுக்குச் சித்தப்பிரமையே ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு நாள் இரவும் பள்ளிக் கட்டிடத்திற்குள் வெடி குண்டுகளைக் கொண்டு போய்க் குவித்த ஆண்ட்ரு கடைசியில் வெளியே நின்று கொண்டிருந்த தன் கொள்கை விரோதி ஹியூக் மீதும் பழி வாங்கி விட்டான்.

—கோமதி சுவாமிநாதன்

ஆதாரம்: காரனெட்.

7

சுற்றி நின்ற அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய ஜெகு அத்தானின் அருகில் வந்தான். ''மாமா! எனக்கு வாழ வேண்டும் என்கிற ஆசையே இல்லை. அதனால் உயிர் துறக்க முடிவு செய்து இந்த விஷ பாட்டிலை நாடினேன்'' என்றான்.

அத்தை அழுதாள். ''ஏனடா, ஜெகு, என் காது கேட்க இப்படிச் சொல்லலாமாடா கண்ணே? உனக்கு என்னடா குறை? ஒன்றுமில்லாத அநாதைகளெல்லாம் ராஜயோகமாக வாழும்போது நீ ஏனடா உயிரை விடணும்?'' என்று புலம்பினாள்.



யாத்திரை

ஏ.எஸ்.ராகவன்

ஜெகு சற்றும் அயராமல் அலட்சியமாக அவனைப் பார்த்து, ''ஏன் என்று கேட்கிறாயா? காரணம் நீதான்'' என்றான்.

''நானா?''

''ஆமாம். நீதான். எல்லாப் பிள்ளைகளும் போல நானும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று உனக்கு ஆசை இருக்கிறதா? உன் பிள்ளை எப்படி இருந்தாலென்ன, உன் கொத்துச் சாவி பத்திரமாக இருக்கிறதா என்று நிமிஷத்துக்கு நிமிஷம் சரி பார்த்துக் கொண்டே யிருப்பதுதான் உன்னுடைய கவலை.''

''நீ பணம் கேட்டு நான் இல்லையென்று சொல்லியிருக்கிறேனா? ஏன் அபாண்டமாகப் பொய் சொல்கிறாய்?''—அத்தை கெஞ்சினாள்.

அவனோ உரக்கச் சிரித்தவாறே, ''எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. நான் எப்பவுமே ப்ளெயின் ஹார்ட் தான். ஆயிரம் பொய்யும் புளுகும் உன்னிடம்தான் உண்டு'' என்றான்.

அத்தான் இதுவரையில் பொறுமையாக இருந்தவர் இப்போது இடைமறித்து, ''கல்யாணி, உன் பிள்ளை ஊதாரியாகவே இருக்கலாம். ஆனால் அவனை நல்ல முறையில் திருத்த வேண்டும். இல்லாவிட்டால் இப்படி விபரீதமாக ஏதாவது செய்து விட்டானானால், அசலுக்கே அல்லவா ஆபத்து வந்து விடும்'' என்றார்.

''நான் என்ன அண்ணு, செய்வேன்?.... இவன் செய்கிற காரியமெல்லாமே இப்படித் தான்... இருந்திருந்து ஒரு பிள்ளை பெற்றேன். அதுவும் அணிப்பிள்ளை, தென்னம் பிள்ளையாக இருக்கிறது'' என்ருள் அத்தை.

''கல்யாணி! நம் குழந்தைகள் நம் முடைய ரத்தத்தில், நம்முடைய நல்ல குணங்கள், கெட்ட குணங்கள் எல்லா வற்றையும் சுமந்து கொண்டுதான் பிறக் கின்றன. நிலத்துக்குத் தகுந்த பயிர்தானே விளையும்?.... அவனைக் குற்றம் சொல்லாதே. இதெல்லாம் விளைப் பயன். இனி மேலாவது அவனைக் கவனித்துக் கொள் நன்ருக..... இந்தா.......'' என்று அந்தக் ருப்பிளை அவ விடம் ஒப்படைத்துவிட்டு அத்தான் மளமள வென்று கீழே போய் விட்டார்.

''ஜெகு!'' என்று அன்புடன் அழைத்தாள்.

அவன் விறைப்பாக, ''நூறு ரூபாய் பணம் கொடு.... அப்புறம் பேசலாம்'' என்ருன்.

''எதுக்குடா, நூறு ரூபாய் ?''

''பார்த்தாயா, வாரி வாரி வழங்குகிற வள்ளல் மாதிரி பேசிறுயே ? இப்போ காரணம் கேட்கிறுயே ?''

''ஆற்றிலே கொட்டினுலும் அளந்து கொட்டணும்டாப்பா.... பணம் தரனும். காரணம் கேட்கக் கூடாதா ?''

''காரணம்தானே? சொல்றேன்.'' ஜெகு காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். இந்த அம்மாவுக்கா அவனுல் காரணம் காட்ட முடியாது! தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ''முதல் காரணம். இந்த பாட்டிலின் விலை இருபத்தைந்து ரூபாய். ஏன் சந்தேகமாக இருக்கிறதா? ஒரு டிராப் சாப்பிட்டுப் பாரேன், தெரியும். இரண்டா வது காரணம். என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததற்காக உனக்கு அபராதம் இருபத்தைந்து ரூபாய். அதிகமில்லை. இருபத்தைந்துதான். மூன்ருவது இந்த நிலையிலிருந்து என் மனசும் உடம்பும் மீண்டும் தேறணும்னு நல்ல டானிக்கா வாங்கிச் சாப்பிட்டாகணும். அதற்காக ஒரு இருபத்தைந்து ரூபாய்..... நான்காவது— கைச் செலவுக்குப் பணம் வேண்டும். அது, இது வாங்க.......''

கமலாவுக்கும் சீதாவுக்கும் அவனுடைய காரணப் பட்டியல் சிரிப்பைத் தந்தது. நாணு சிரிக்கவில்லை. ஜெகுவின் மன நிலை அவ னுக்குத் தெரியும். ரோஸியின் ஒரு கடிதமே போதுமானதாயிற்றே !

''சரி. சரி. வா. தந்து தொலைக்கிறேன்'' என்ருள் அத்தை.

''பார்த்தாயா, தந்து தொலைக்கிறேன் என்கிறுயே !''

''நான் தரேன். நீ தொலை. பணத்தின் அருமை உனக்கெங்கே தெரியப் போகிறது?''


''அப்படி என்ருல் நான் அருமை இல் லையோ உனக்கு?''

''அதற்காக நூறு நூருகத் தண்டம் கட்ட வேணுமா?''

''மறுபடியும்......?''

''கடவுளே, ஊரில் உலகத்தில் இல்லாத பிள்ளை பிறந்திருக்கிருனே எனக்கு! போதும் டாப்பா போதும்..... சரி சரி, வா, தரேன்.''

அத்தை அங்கிருந்து புறப்படவும் ஜெகு அவன் பின்னுல் கோணங்கி காட்டிக் கொண்டு தனது மாபெரும் சாதனைப் பெரு மிதத்தோடு நடந்தான். ஒரு பெரிய திரை அகன்ருற் போலிருந்தது. நடந்ததெல்லாம் கனவுதானே என்றிருந்தது நாணுவுக்கு. ஜெகு மட்டும் வராதிருந்தால் அவனுடைய நிலை என்ன ஆகியிருக்கும்? அத்தானுக்கு என்ன பதில் சொல்ல முடிந்திருக்கும் அவனுல் ? குற்றத்தை ஒப்புக் கொண்டு



இந்நேரம் போலீசில் சிக்கி.....! அப்பப்பா! ஜெகுவுக்கு மனத்துக்குள் அவன் செலுத்திய வந்தனங்களை எழுதி முடியாது. தக்க தருணத்தில் கைகொடுத்த உற்ற நண்பனல் லவா அவன்?

கமலா உதட்டைப் பிதுக்கிளுள். ''ப்பூ ! இவ்வளவுதானு? கடைசியில் நாம் நினைத்தது தப்பாக அல்லவா போய் விட்டது?'' என்ருள்.

''ஆமாம், கமலா.... இதை நான் எதிர் பார்க்கவே யில்லை'' என்ருள் சீதா.

அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதை அறிந்து கொள்ளும் ஆவலுடன் நாணு கமலாவையும் சீதாவையும் மாறி மாறிப் பார்த்தான். அவர்களோ தங்களிடமிருந்து தப்பி ஓடிவிட்ட குற்றவாளியைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தார்கள்.

“அத்தையின் தொல்லை பொறுக்க முடியாமல் இந்த நாணு தன் உயிரைவிட முடிவு செய்து விட்டதாக அல்லவா நினைத்தோம்! மறைத்து வைத்திருந்தது அந்த ஜெருத் தடியன்தான் என்று தெரிந்திருந்தால், அப்பாவுக்கே தகவலைச் சொல்லாமல், நானே ஒரு கிளாஸ் ஊற்றிக் கொடுத்திருப்பேனே அவனுக்கு” என்று சொல்லிவிட்டுக் கமலா கலகலவென்று சிரித்தாள்.

“ஒரு கிளாஸ் போதாது.... இரண்டாகக் கொடுத்திருக்கலாம்” என்றவாறே சீதாவும் சிரித்தாள்.

நாணு சிரிக்கவில்லை. ஜெரு அவனை எப்படிப்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறான் என்பது அவனுக்கல்லவா தெரியும் !

“ஏன், இன்னமும் நிற்கிறே, இங்கே?.... போயேன்......” என்று கமலா சீறினாள், அவனைப் பார்த்து.

நாணுவுக்கு இப்போது சிரிப்பு வந்தது. உயிரை விடத் துணியாதவனுக்கு அங்கு என்ன வேலை? கமலாவின் உபசரிப்புக்கும் பொருளில்லை, உதாசீனத்துக்கும் பொருளில்லை போலும்!

வேகமாகத் தன் அறைக்கு வந்தான். இனி அவள் கூப்பிடட்டுமே, அவன் போவானா அங்கே? அவளுடைய கோபத்துக்கும் தாபத்துக்கும் அவனா பொறுப்பு? உயிரைவிட நினைத்தது ஜெருவாக இருந்தால், அதற்கு நியாயம் வேறு. நாணுவாக இருந்தால் வேறா? அத்தானின் பெண்ணாக இருந்து கொண்டு இப்படிப் பேசுகிறாளே!

சற்று நேரத்துக்கெல்லாம் வந்த ஜெரு ஒரு நூறு ரூபாய் நோட்டை நாணுவின் கையில் கொடுத்து, “நீ எனக்குச் செய்த உதவிக்கு நன்றி, நார்யாண்.... இப்போதைக்குப் பணக் கவலை தீர்ந்தது. போ” என்று கூறினான்.

“நான் அல்லவா உனக்கு நன்றி சொல்லணும், ஜெரு? அந்த விஷக் குப்பியை எடுத்து வந்தவன் நான். மறைத்து வைத்தவனும் நான்.......” என்றான் நாணு.

“அதற்காகத்தானே நன்றி சொல்கிறேன்!.... அது இல்லாவிட்டால் மம்மியிடமிருந்து கினியாக நூறு ரூபாய் பெயருமா ?”

“ஜெரு, என் நன்றி பல நூறு ரூபாய்கள் பெறும்..... நீ மட்டும் வராமலிருந்தால் இந்நேரம் போலீசிலே சிக்கி ஜெயிலில் அவதிப்பட்டுக் கொண்டிருப்பேன்!”

“நான்சென்ஸ்.... நான் இருக்கிறபோது நார்யாணை எவன் ஜெயிலிலே போட முடியும்? அதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருப்பேன்!.... ஆல்ரைட்..... புறப்படு.”

“எங்கே, ஜெரு?”

“கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது.... ஸ்டார்ட் என்றால் ஸ்டார்ட்டணும்.”

நாணு சிரித்தவாறே புறப்பட்டான்.

இருவரும் காவேரிக்கரைக்கு வந்தார்கள். கரையோரமாகவே மேற்கு நோக்கி நடந்து போகலாமென்று ஜெரு சொல்லவே நாணு ஆமோதித்தான். ஜெரு மற்றவர்களுக்கு எப்படியோ, அவனைப் பொறுத்தவரை ‘ஹீரோ’தான் !

மேல்வானில் சரியும் கதிரோனின் கிரணங்கள் மாலை நேரத்துக்குத் திருஷ்டி கழித்துப் போட்டாற் போலக் குங்கும வர்ணம் காட்டின. ஜவான்களைப் போல் நின்ற தென்னைகளின் தலையில் மஞ்சள் வெயிலின் தங்கப் பூச்சு.

நாணல் மண்டிக் கிடந்த பகுதிக்கு வந்ததும் ஜெரு நின்றான். “நடந்தது போதும்.... இங்கே உட்காரலாமா?” என்றான்.

ஜெரு என்ன சொன்னாலும் செய்தாலும் அதை அப்படியே ஏற்கத் தயாராக இருந்தவனாயிற்றே, நாணு! ஒரு பெரிய விஷப் பரீட்சையில் தேற உதவிய நண்பனுக்குக் கடமைப்பட்ட உணர்வும் சிறைத் தண்டனையிலிருந்தும் அத்தானின் மன உளைச்சலிலிருந்தும் தப்பிய நிம்மதியும் அவனை அவ்வாறு இயக்கின.

ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான் ஜெரு. மூக்கின் வழியாகவும் வாயின் மூலமாகவும் பல வளையங்களை எழுப்பி வித்தைகள் செய்தான். பிறக்கும்போதே சிகரெட்டோடு பிறந்திருப்பானோ, என்னவோ!

“நீ சிகரெட் பிடிக்கமாட்டாயா, நார்யாணு?” என்று கேட்டான் அவன்.

“ஊஹூம்.” – நாணு தலையைப் பலமாக ஆட்டினான்.

“ஏன்?” என்று கேட்டான் ஜெரு.

“அது கெட்ட பழக்கனும்னு அம்மா சொல்லியிருக்கிறாள்.”

“நீ என்ன அம்மா கோண்டுவா?” ஜெரு சிரித்தான். “உலகத்திலே அம்மாக்கள் எல்லாமே பைத்தியங்கள். சிகரெட் பிடிக்கிறது தப்பா ? மேல் நாட்டிலே இதுதான் நாகரிகம்.”

“அங்கே எல்லாம் குளிர் அதிகம், நம் தேசத்திலே உஷ்ணமாக இருக்கும் போது இது எதற்கு?”

“உனக்குக் காப்பி பிடிக்குமா?” ஜெரு பேச்சையே மாற்றினான்.

“பிடிக்கும்.”

“அது மட்டும் நல்லதோ ?”

நாணு மென்று விழுங்கினான்.

“உலகத்திலே நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. நெருப்பு சுடும் என்பதற்காக அடுப்பை பற்ற வைக்காமல் இருக்கலாமா?”

இந்த வாதம் நியாயமாகவே நாணுவுக்குத் தோன்றிற்று. ஆனாலும் சிகரெட் பிடிப்பது அடுப்பைப் பற்ற வைத்து ஆகாரம் சமைக்கிற நல்ல காரியம் அல்ல. அவனால் அதைச் செய்ய முடியாது.

“எதையும் பழக்கமாக வைத்துக் கொள்வதுதான் தப்பு, நார்யாணு.... அப்படி வைத்துக் கொண்டால் அப்புறம் நமக்கென்று ஒரு ப்ரீ வாழ்க்கை இல்லாமல் போய்விடும். என்னவோ இந்தப் பழக்கங்களுக்காகவே உயிர் வாழ்கிற மாதிரி ஆகிவிடும். நான்கூட முடிவு செய்து விட்டேன். இந்தப்

பாக்கெட்டோடு சிகரெட்டை விட்டு விடப் போகிறேன்'' என்றான் ஜெகு. சொல்லி விட்டுச் சற்று நேரம் வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

உண்மையாகவே சிகரெட் பிடிப்பதை ஜெகு விட்டு விடுவான்போலிருக்கிறதே என்று நாணா எண்ணுவதற்குள் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் ஜெகு.

''இதுதான் சிகரெட்டை நீ விடுகிற லட்சணமா?'' என்று கேட்டான் நாணா.

''நான்தான் சொன்னேனே—பழக்க வாசனை விடாது என்று.'' ஜெகு சிரித்தான். ''ஓர் ஐந்து சிகரெட் மிச்சமிருக்கிறது...அதை ஊதி முடித்து விட்டால் அப்புறம் ஒரு முழுக்கு இதற்கு...நார்யாணா! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? அம்மாவோடு சண்டை போட்டே பழகி விட்டேன்...சிகரெட் குடித்துப் பழகிவிட்டேன்...பள்ளிக்கூடத்துக்கு மக்கர் அடித்துப் பழகி விட்டேன்...பழக்கம் இருக்கிறதே, அது பொல்லாதது.. சிகரெட் இல்லாவிட்டால் கஷ்டம். காப்பி இல்லாவிட்டால் கஷ்டம். காதல் இல்லாவிட்டாலும் இப்படித்தான் போயேன்'' என்றான்.

''காதல்கூட ஒரு பழக்கமா?'' என்று கேட்டான் நாணா.

''பின்னே என்னவாம்?''

''என்னவோ, நான் என்ன கண்டேன்? உலகத்திலே காதலே கிடையாதுன்னு என் அம்மா சொல்வாள்.''

''மைகாட்! காதலே இல்லையா? நார்யாணா, உன் அம்மா ஒரு வொண்டர்புல் உமன்தான்...... இப்படி ஒரு தியரியை நான் கேட்டதே இல்லை...'' ஜெகு வியப்புடன் கூறினான். முற்றும் எதிர்பாராத அந்த உண்மை அவனுடைய மனத்தில் என்ன புரட்சியை உண்டு பண்ணிற்றோ! கையிலிருந்த சிகரெட்டைக் கூடத் தூர எறிந்து விட்டு அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்...''நோ லவ்!...நார்யாணா, லவ் கிவ் என்பதெல்லாம் பொய் தானா? ரோஸியின் கடிதம் இதை 'ப்ரூவ்' செய்கிறதில்லையா?... நீ எவ்வளவு அன்பு காட்டினாலும், எத்தனை சாக்லேட் ஐஸ்கிரீம் தந்தாலும், அதையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு, 'டாடா' சொல்கிற பெண்கள்தான் ஜாஸ்தி! உன் மம்மி சொல்வது கரெக்ட். நான் யாரையும் இனி மேல் 'லவ்' பண்ணப் போறதில்லை. நீயும் 'லவ்'வாதே...பார்க்கப் போனால், இந்தக் காதலாலே மனசு கெடுவது தான் கண்ட பலன்.''

நாணா சிரித்தான்.

''ஏன், சிரிக்கிறாய்?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சிகரெட்டை உதறினாய்....உடனே பற்ற வைத்தாய்...இப்போது காதலை உதறுகிறாய்!''

ஜெகு அசட்டுச் சிரிப்புடன், ''நான் பற்றிக் கொள்ள மாட்டேன். ஆனால் அது பற்றிக்கொள்ளுமோ, என்னவோ!'' என்றான்.

இருள் கவியத் தொடங்கிற்று. நாணல் காட்டில் புதர்கள் எல்லாம் சிறுசிறு பூதங்களாகத் தென்படலாயின. விசித்திரமான ஜந்துக்களின் குரல்கள் வேறு கேட்கத் தொடங்கவே, ''போகலாமா, ஜெகு? இருட்டி விட்டது'' என்றான் நாணா.

''பாக்கி இருக்கிற சிகரெட் தீர்ந்ததும் புறப்பட்டு விடலாம்'' என்றான் ஜெகு.

அவனுக்கு இருளைக் கண்டு பயமில்லை போலிருந்தது. ''ஒசத்தி சிகரெட்டுடா இது! பாக்கெட் விலை ஐந்து ரூபாய்...இந்த ஊரிலே கிடைக்காது. பங்களூரிலிருந்து கொண்டு வந்தேன்...நீ வேண்டுமானால் ஒன்று பிடியேன்...நான்தான் விட்டுத் தொலைக்கப் போகிறேனே...அப்புறம் நீ கேட்டாலும் என்னால் தர முடியாது'' என்றான்.

புத்தாண்டு மலரிலிருந்து

கௌசிகன்


எழுதும்

புதிய சித்திரக் கதை

ஆரம்பமாகிறது



டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் தரத்தில் சிறந்தவை



JWT-TVS-3484

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் பரிசோதனை செய்யப் பெற்று, தேர்ந்த பிறகுதான் விற்கப் பெறுகின்றன. இதனை பஸ், லாரி மற்றும் கார் சொந்தக்காரர்கள் நன்கு அறிவர். டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். அதனால் உங்கள் நடைமுறைச் செலவு குறையும்.

டிவிஎஸ் விநியோகிக்கும்
நம்பகமான மோட்டார் உறுப்புகளில் சில:

Standard BATTERY	FERODO Brake Linings	MICO Fuel Injection Parts	BORG & BECK Clutch Spares
W/L Commercial Wheels	CD TVS Air-assisted brakes	TRANCO VALVES	KAP AUTO PARTS
DOUBLE	ROLON Timing Chains	FRITZ Filter Elements	Fenner Fan Belts
GHR Tie Rod Ends	Gaskets and Radiators	allite Bulbs	ABC Bearings
FinOlex Cables	HELLA Horns	NBC Bearings	Sunfit Machined Auto Parts
TEX Wiper arms and Blades	SIRUBBER Rubber parts	Ap Accurate products	SUNKAST Ferrous and non-ferrous castings

டி.வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் - பெங்களூர் - செகந்திராபாத் (A.P.)

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பெங்களூர்

''ஊஹூம்..... வேண்டாம்'' என்றான் நாணு.

''அட, தமாஷுக்கு ஒன்று பிடித்தால் என்னவாம்? நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்...... உலகத்திலே எல்லாத்தையும் கற்று அநுபவப்பட வேண்டும். ஒட்டிக் கொள்ளத்தான் கூடாது......''

''எனக்கு எதற்கு?''

''அதுவும் சரிதான். உனக்கு எதற்கு இது? நீ நல்ல பிள்ளை. நான்தான் கெட்டலைகிறவன்.''

''ஜெகு!''

''நெவர் மைண்ட்.... கடவுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வகையாகப் படைச்சிருக்கார். உனக்கு நல்ல அம்மா கிடைச்சிருக்கிறாள்..... என் மம்மியைப் பார். எப்போதும் யார் மீதாவது குற்றம் சொல்வதே அவள் வேலை.....கடவுள் உனக்காகப் பத்மநாப மாமாவைப் படைச்சிருக்கார்.... எனக்காக யாரும் கிடையாது. போயும் போயும் இந்தச் சிகரெட்தான் எனக்காகப் படைக்கப்பட்டிருக்கிற அருமையான பொருள் என்று தோன்றுகிறதுடா...''

ஜெகுவின் துயரம் தோய்ந்த ஆற்றாமை நாணுவை என்னவோ செய்தது.

அவனுக்கும் இப்போது மெள்ள மெள்ள ஓர் ஆசை, சபலம் வந்திருந்தது. சிகரெட் பிடித்துப் பார்த்தால் என்ன! இந்த இரவில் அவன் பிடிப்பதை யார் பார்க்கப் போகிறார்கள்? சிகரெட்டுப் புகையின் மணத்தில் ஓர் இலேசான மயக்க சக்தி இருக்கிறதே, அது உடலுக்குள் பாயும் போது எப்படி இருக்குமென்பதை அநுபவித்துப் பார்க்கலாமே ! மதுரையில் நாகராஜ டாக்டர் எப்போதும் சிகரெட்டாக ஊதிக் கொண்டிருப்பார். டாக்டராயிற்றே, அவருக்கு இது கெடுதல் என்று தெரியாதா? பின் ஏன் அவர் ஸ்டெதாஸ்கோப்பும் சிகரெட்டுமாகவே இருந்தார் !

''நான் ஒரு முட்டாள்டா, நார்யாணு.... வடிகட்டின முட்டாள்.....'' ஜெகுவின் குரல் வேதனையைச் சுமந்து கொண்டு வெளிப்பட்டது.

நண்பனின் துயரம் நாணுவை வருத்திற்று. அவனுடைய சாதாரண வேண்டுகோளை அவன் நிராகரித்ததால் தானே இவ்வளவும் !

''ஜெகு, ஒரே ஒரு சிகரெட் கொடு....'' என்று கையை நீட்டினான் நாணு.

''வாட்?'' என்று கூவினான் ஜெகு.

''எனக்கு ஆசையாக இருக்கிறது....''

''நார்யாணு, நீ ஒரு வொண்டர்புல் பாய்..... இது வரை என் பேச்சை மதித்தவர்களே கிடையாது..... எனக்காக நீ சிகரெட் பிடிக்க ஒப்புக் கொண்டாயா ?''

''ஆமாம்.''

''உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை......''

ஜெகு லைட்டரை நீட்டினான். சிகரெட் புகைந்தது. கணகணப்பான நெடி, மயக்கம் தரும் புகை, தொண்டைக்குள் ஒரு கமறல், புதிய அநுபவம் ஒன்றின் புளகிதம் எல்லாம் நாணுவைச் சூழ்ந்தன. இத்தனைக்கும் மேலே பயம் வேறே. தப்பான காரியம் செய்கிற அவஸ்தை. நெஞ்சில் அந்தக் குறுகுறுப்பு வளர்ந்தது. ஆனால் அதை உதறித் தள்ளி விட்டுச் சிகரெட்டை வலிந்து இழுத்துப் புகையை வெளியிடுவதில் ஈடுபடலானான்.

''இந்த ஊருக்கு நான் வந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன், நார்யாணு... நீ எனக்கு நண்பனாக வாய்த்தாயே!... என்னவோ உன்னிடம் எனக்குப் பயமாகக் கூட இருக்கிறது'' என்றான் ஜெகு.

''பயமா? ஏன்?''

''அதைச் சொல்லத் தெரியல்லேடா. உன் மம்மி உனக்கு நல்லதெல்லாம் கற்றுத் தந்திருக்கிறாளில்லையா?''

''ஆமாம். எங்கம்மாவுக்கு எல்லாம் தெரியும்.''

''அந்தப் பாக்கியம் எனக்கு இல்லை. அதனாலேயே நான் இந்த சிகரெட் கிகரெட்டிலெல்லாம் மனசைச் செலுத்தி அழிகிறேன். போகட்டும். நீ என் நண்பனானதில் ரொம்ப சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது எனக்கு.... நார்யாணு, நானும் நீயும் குற்றாலம் போய் விட்டு ஜாலியா ஒரு வாரம் இருந்து அநுபவித்துவிட்டு வரலாமா?''

ஜெகு விரக்தியிலிருந்து கனவுக்குத் தாவினான். அவன் அப்படி ஒன்றும் கெட்டவனில்லையென்பதும் சில பழக்க வழக்க வாசனைகளில் சிக்கித் தவிக்கிறவன் என்பதும் நாணுவுக்குப் புரிந்து விட்டது. தன் தாயின் போக்குகள் பிடிக்காமல் எத்தனை வேதனையுறுகிறான்! அதே சமயம் நாணுவின் அம்மாவை எப்படிப் புகழ்கிறான்!

''குற்றாலத்துக்குத்தானே?... போகலாம், ஜெகு. நான் ஒரு தடவை பள்ளிக்கூடத்தில் பிக்னிக் கோஷ்டியோடு போயிருக்கிறேன். இன்னொரு தடவை போகமாட்டோமா என்றிருக்கிறது.''

''கவலைப்படாதே. நான் அழைத்துக் கொண்டு போகிறேன், உன்னை. பணத்துக்கு வழி செய்ய வேண்டும் முதலில். மம்மியை எப்படிச் சமாளிக்கலாம்?... ஸம்ஹௌ, குற்றாலம் போயே தீரவேண்டும்.''

நாணுவுக்கும் ஒரு தடவை இந்தச் சூழ்நிலையிலிருந்து எங்காவது போக மாட்டோமா என்றுதானிருந்தது. அத்தை வந்த பிறகு வீட்டில் தங்குவதே சிரமமாக இருந்தது.

ஜெகு குற்றாலம் போனவனில்லை. அதன் பெருமையைக் கேள்விப்பட்டிருக்கிறான். எல்லாவற்றையும் அநுபவித்துப் பார்த்துவிட வேண்டும் என்பது அவன் சித்தாந்தம். வாழ்க்கை என்பது அழுது புலம்புவதற்காக ஏற்பட்டதல்ல. ஆழ்ந்து துய்ப்பதற்குத்தான். எவ்வகையிலாவது நண்பன் நாணுவுடன் குற்றாலப் பயணத்தை மேற்கொண்டே தீருவதென்று அவன் முடிவு செய்தான். இவ்வாறு முடிவு செய்த பிறகு அங்கு அமர்ந்திருப்பது கடினமாக இருக்கவே எழுந்து விட்டான்.

இருவரும் வீடு நோக்கிக் காவேரியின் கரையோரமாகவே திரும்பினார்கள்.

ஜெகு பாடத் தொடங்கி விட்டான். திடீரென்று உச்ச ஸ்தாயிக்கும் கீழ் ஸ்தாயிக்கும் வலிப்பு வந்தது போலக் குரல் தாவிற்று.

நாணு அனுதாபத்துடன் நண்பனின் சங்கீதத்தை அனுபவிக்க முயன்றான். ஆனால் அது சங்கீதமாக இருந்தால் அல்லவா ரசிக்க? அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் ஜெகுவின் மனம் நோகாமல் நடந்து கொள்ளவும் ஒரே ஒரு வழிதான் உண்டு. சிகரெட் பிடிப்பது தான் அது.

தெற்கே பிரிகிற பாதை காவேரியின் கரையோடு சேரும் இடத்தில் வாய்க்காலின் பாலத்தில் அமர்ந்து மீதமிருந்த சிகரெட்டுகளை ஆளுக்கு ஒன்றாக ஊதினார்கள். ஜெகு பாலத்தில் தாளம் போட்டபடி குரலை முழக்கினான்.

சுற்றிலும் நிலவிய இருளின் மடியில் ரகசியமாக இந்தப் பாவத்தைப் புகைத்தெறிவதில் நாணுவுக்கு ஒரு வகைத் தீவிரமே இருந்தது. ஏன் என்று தெரியவில்லை. இன்னும் தொடர்ச்சியாகப் பல சிகரெட்டுகளைப் புகைக்கவும் அவன் விரும்பினான்.

''ஆல் ரைட்.... போகலாம்'' என்றான் ஜெகு. நாணுவுக்கு மனமில்லை. இவ்வளவு சீக்கிரம் வீடு திரும்பி என்ன ஆக வேண்டும்? இந்தச் சுகத்தைக் கூடியவரையில் நீடிப்பதில் உள்ள ஆனந்தம் வீடு திரும்புவதால் பாழாகி விடாதா?

சிகரெட்டின் அடிக் காம்பு உதட்டைச் சுடுகிறவரை இழுத்து முடித்து அதைத் தூர எறிந்துவிட்டு வேறுவழியில்லை யென்று அவன் எழுந்தான். வீசியெறியப்பட்ட துண்டு குறி தவறாமல் யார் காலிலோ போய் விழுந்திருக்க வேண்டும். ''யார் அது?... ஆள் வருவது தெரியவில்லை?'' என்ற அதட்டல் கேட்டது.

நாணு பயந்து விட்டான். இவ்வளவு நேரம் துய்த்த ஆனந்தம் அந்தக் கணமே அவனை விட்டு நழுவி விட்டாற்போலிருந்தது.

ஜெகுவோ சிறிதும் அஞ்சாமல், ''ஆள் வருவது இருட்டில் எப்படித் தெரியுமாம்? சிகரெட்டில் நெருப்பு இருக்கிறதே, அது வருவது உங்களுக்குத் தெரியாமல் போயிற்றோ?'' என்று பதிலுக்கு அதட்டினான்.

இருள் விலகி அந்த உருவம் இப்போது நாணுவின் கண்ணில் தெரிந்தது. பார்வையில் பெரிய மனித பாணி தொனிக்க, ''ஏனி, கல்யாணியின் பிள்ளையா? அது யார் உன் கூட?'' என்று கேட்டார் அவர்.

''அவன் யாராக இருந்தால் உங்களுக்கு என்ன?'' என்றான் ஜெகு அலட்சியமாக.

''அது சரிதானப்பா. அவன் யாராக இருந்தால் எனக்கென்ன? எப்போது உன்னுடன் சேர்ந்தானோ, அப்போதே அவன் யார் என்று தெரியவில்லையா?''

''அவன் என் நண்பன்... ஷட் அப்!''

அவர் சிரித்தார். ஜெகுவின் சீற்றம் அவருக்குச் சிரிப்பைத்தான் தந்தது. நாணுவைப் பார்த்தார் இப்போது. ''நீ சுந்தரியின் பிள்ளை அல்லவா? இவனோடு சேர்ந்து கெட்டுப்போக முடிவு செய்துவிட்டாயா நீயும்?... அவன் சிகரெட் பிடிக்காவிட்டால்தான் ஆச்சரியப்படுவேன். ஆனால் நீயுமாப்பா பிடித்தாய்? அவளுடைய பிள்ளைக்கு இந்தப் புத்தி வரலாமா?'' என்றார்.

தரையின் கீழ், பாதாளத்துக்கும் கீழ் அமுங்குவது போல் இருந்தது நாணுவுக்கு.



"குழந்தை பிறந்திருக்கிறதாகச் சொல்லிட்டு அதுக்கு ஏண்டா இப்படித் துக்கப்படறே?"

அவர் போய்விட்டார் வேகமாக.

விக்கித்து நின்றான் நாணு. ஓர் அற்ப ஆசையின் விளைவாக அவன் எத்தகைய கறையை உண்டாக்கிக் கொண்டு விட்டான்! அவனா கெட்டான் அதனால்? அவனுடைய தாயின் நல்ல பெயரல்லவா கெட்டுவிட்டது!

''அவர் கிடக்கிறார்... விட்டுத் தள்ளு!'' என்றான் ஜெகு. மறுபடியும் பாட்டில் இறங்கி விட்டான்.

நாணுவின் நெஞ்சு தவித்தது. அம்மாவின் பெயரை அந்த மனிதர் சொல்லாமலிருந்தால் ஒருவேளை அவனுக்கு இத்தனை வருத்தம் தெரிந்திராதோ என்னவோ! ஆனால் இது வருத்தம் கூட அல்ல. அருவருப்பும் நாணமும் கலந்த கழிவிரக்கம். புனிதமான ஓர் உணர்வைப் போற்றத் தவறிய அறியாத்தனத்தின் மீது அவனுக்கு எழுகின்ற சீற்றத்தின் ஆற்றாமை. விஷத்திலிருந்து தப்பித்தானே, இந்தப் புகையில் ஏன் விழுந்தான்? இரண்டுமே அவன் மனத்தின் விகாரங்கள். முன்னதில் அவனைக் காப்பாற்றிய ஜெகு பின்னதில் அவனை ஆழ்த்தி விட்டான்.


நாணுவுக்கு எங்காவது ஓடி விடலாமா என்றிருந்தது.

இருவரும் வீட்டை அடைந்தபோது கூடத்தில் அத்தான் இருந்தார். அவருக்கு எதிரே ஒருவர் வீற்றிருந்தார். அவரைக் கண்டதும் நாணுவுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது. காவேரிக் கரையில் அவனால் காலைச் சுட்டுக்கொண்டு அவன் நெஞ்சைச் சுட்டாரே, அவரேதான் உட்கார்ந்திருந்தார், எதிரே.

மாடிக்கு ஓடினான் வேகமாக. வழியில் கமலா தென்பட்டாள். அவனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். சொல்லி வைத்தாற்போல் ருக்கம்மாவும் எதிர்ப்பட்டாள். முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கமலாவின் அறைக்குள்ளிருந்த சீதாகூட அவனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

படுக்கையில் விழுந்த நாணு தன் முகத்தைத் தலையணைக்குள் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதான். (தொடரும்)





LIFEBUOY
for health



சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகாஃபெல்டன்
—அநுத்தமா

பிளாட்பாரத்தில் முதல் மணி ஒலித்தது. ஒரு நிமிஷத்தில் ரயில் கிளம்பி விடும்.

இரண்டாவது மணி அடிப்பதற்குள்ளாகவே அந்தப் பெண்களின் உறவுக்காரப் பையன் ஒருவன் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு வேகமாகப் பாய்ந்து வந்து, அவர்கள் இருந்த பெட்டியின் கதவைத் திறந்தான்.

''வா'' என்று கத்திக் கொண்டே அவன் தன் தலையையும் தோள்களையும் உள்ளே நுழைத்து இரு கைகளையும் வீசி இந்துவின் மணிக்கட்டுகளைப் பிடித்து இழுக்கலானான்.

''முடியாது!'' என்று அவள் வீறிட்டலறினாள்.

அவள் வயதுக்கு அவன் மிகச் சிறியவனாக ஒல்லியாக, மெல்லியனாக இருந்தான். அந்த உறவினன் பலம் கொண்ட மட்டும் அவளை இழுத்தான். இதற்கிடையில் சீதாவும், சித்தியும் சட்டென்று அவள் கால்களைப் பிடித்துப் பின்னுக்கு இழுத்தனர். இன்னும் சற்று நேரம் அவர்கள் தாமதித்திருந்தால் இந்து தலை குப்புறப் பிளாட்பாரத்தில் விழுந்திருப்பாள்.

இரண்டாவது மணி அடித்ததை யாரும் கவனிக்கவில்லை. கதவு இன்னும் திறந்தே இருந்தது. அச் சிறு பெண் இரு பக்கமும் இழுபட்டுக் கொண்டிருந்தாள். ஒரு குலுக்கலுடன் வண்டி கிளம்பலாயிற்று.

சித்தி மூதாட்டியானாலும் நல்ல பலசாலி. இருவரும் தெம்பையெல்லாம் ஒன்று திரட்டி வலுவாக இழுத்தனர். இதை அந்த இளைஞனால் சமாளிக்க முடியவில்லை. ரயில்வேகம் பெறவும் அவன் பிடி தளர்ந்தது. அவன் ஒரு கால் பிளாட்பாரத்தில் விழுந்து விட்டிருக்கலாம். சித்தியும் சீதாவும் திரும்பிப் பார்க்கவில்லை. இழுபட்டுக் காயம் அடைந்திருந்த இந்து கலங்கி அழுது கொண்டிருந்தாள். ஆனால் தான் பேராபத்திலிருந்து தப்பி இப்போது பத்திரமாயிருப்பதை உணர்ந்த அவள் சிறிது நேரத்துக்கெல்லாம் சிரிக்கவும் செய்தாள்.

ஆனால் சித்திக்கு வேறு ஒரு விதத்தில் கவலையாக இருந்தது. ஹாஸ்டலில் இந்து தாராளமாக இருக்கலாம். ஆனால் அவளுக்காகும் செலவை எப்படிச் சமாளிப்பது? விதவையான பெண்களுக்குத்தான் சர்க்காரில் உபகாரச் சம்பளப் பணம் கிடைத்தது. சுப்புலக்ஷ்மியும் அவளது பெற்றோர்களும் தங்களால் இயன்றவரையில் இந்துவுக்கு உதவி செய்ய முன்வந்தாலும் கூட, அவளைப் போஷிப்பது முடியாத காரியமாகவே பட்டது.

''இந்து எப்போதுமே அதிருஷ்டசாலி. வருங்காலத்தை எண்ணிச் சித்தி அவ்வளவு தூரம் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை. அவள் சென்னைக்கு வந்து சேருவதற்கு முன்பே ஒரு மனிதர் என்னை வந்து பார்த்து, கல்யாணமாகாத ஏதாவது ஒரு பெண்ணின் சம்ரட்சணைக்காகத் தாம் மாதம் இருபது ரூபாய் நன்கொடையாகத் தர விரும்புவதாகக் கூறியிருந்தார். ஆகையினால், இந்து ஹாஸ்டலில் தங்கியிருந்ததில் எங்களுக்குச் சிரமம் ஏதும் இருக்கவில்லை. எல்லாம் இனிதாக முடிந்துவிட்டது'' என்று இச் சம்பவத்தைப் பற்றி என்னிடம் கூறி நிறுத்தினார் சகோதரி.

''பிறகு அவ்விரு சகோதரிகளும் என்ன ஆனார்கள்?'' என்று நான் வினவினேன்.

சகோதரி பளிச்சென்று சிரித்தார். ''அதைப் பற்றி நான் பிறகு கூறுகிறேன்'' என்றார். ''இந்த விவகாரம் தீர்ந்தவுடன் பல இதர கவலைகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. பாவம், என் தங்கை சாவித்திரியைப் பற்றி நாங்கள் எல்லோரும் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்.''

சாவித்திரியின் கணவர் துரைசாமி பத்திரமாக வீடு வந்து சேர்ந்து விட்டார். ஆனால் அவர் உடல் இன்னும் நன்றாகத் தேறவில்லை. 1920ம் ஆண்டு மே மாதம் சுப்புலக்ஷ்மியும் அவள் பெற்றோரும், அவள் சிறிய தங்கைகளும் விடுமுறைக்காக இலங்கைக்குச் சென்ற போது துரைசாமியின் தேக நிலை கொஞ்சம் சுமாராக இருப்பதுபோல் தோன்றியது. சாவித்திரி அவரைப் பெங்களூருக்கு அழைத்துச் சென்றிருந்தாள். அந்தச்

சீதோஷ்ண நிலை அவர் உடம்பைத் தேற்றும் என்ற நம்பிக்கையில்.

இலங்கைப் பிரயாணம் தொடங்கிய போது, கடலைத் தாண்டிப் போகப்போகிறோம் என்பதும் நாடு விட்டு வேறொரு நாட்டுக்குச் செல்லப் போகிறோம் என்பதுமான குறுகுறுப்பில் இரவெல்லாம் சகோதரி கண்ணை மூடக்கூட இல்லை. நீண்ட ரயில் பிரயாணத்துக்குப் பிறகு கடல் பிரயாணம் இரண்டரை மணி நேரம்தான் இருந்தது. அப்போது அச்சமூட்டும் வகையில் பலமான காற்று வீசியது. கனத்த மழை பொழிந்தது. சுப்புலக்ஷ்மிக்கு இவை ஆபத்தை உணர்த்திப் பரபரப்பூட்டின. என்ன ஆகுமோ என்ற நினைப்பில் ஏற்படும் மனச் சிலிர்ப்பே ரசிக்கக் கூடிய ஒன்றாக இருந்தது சுப்புலக்ஷ்மிக்கு. ஆகவே, அவள் என்றாவது ஒரு நாள் இதை விட வெகு தூரம் கப்பல் பிரயாணம் செய்ய நேரலாம்; அமெரிக்காவுக்கோ இங்கிலாந்துக்கோகூடப் போகும்படி இருக்கலாம் என்று ஆர்வத்துடன் எண்ண ஆரம்பித்தாள்.

இலங்கை தேவலோகம் போலிருந்தது. கண்டியில் அவர்கள் ஒரு பங்களாவை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சில வாரங்கள் தங்கினார்கள். இதைவிட அழகான இடம் உலகத்திலேயே இருக்க முடியாது என்று சுப்புலக்ஷ்மிக்குத் தோன்றியது. அவள் மணிக்கணக்கில் அம்மலைச் சரிவுகளில் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தாள். தோட்டங்களில் அதுவரை அவள் பார்த்திராத மரங்களும் செடிகளும் இருப்பதைக் கண்டாள். விஞ்ஞான ரீதியில் அவற்றை ஆராய்ந்தாள். அவற்றின் ஜாதிகளைக் கண்டு பிடித்தாள். திருவல்லிக்கேணிப் பள்ளிக்கூடத்தில் தாவர சாஸ்திர வகுப்புகளில் அவை பற்றித் தான் சொல்லி, மாணவிகளை வியப்பில் ஆழ்த்தப் போவது பற்றிச் சிந்தித்தாள்.

ஆயினும், அவள் பூர்ண சந்தோஷம் அடையவில்லை. இந்தப் பசுமையான செழித்த சொர்க்கலோகத்திலும்கூட அருவருப்பான விஷயங்கள் இருந்தன. மரங்களிலிருந்து பெரிய பெரிய வௌவால்கள் தொங்கின. ஒவ்வோர் இரவும் மனிதர்கள் அவைகளை வேட்டையாடிச் சுட்டார்கள். அவ்வாறு சுட்டுக் கொல்வது பெரும் வேடிக்கைபோல் மறு நாள் காலை வேட்டை பற்றிப் பேசிக் களித்தார்கள். ஆண்டவன் சிருஷ்டியில் ஏற்பட்ட எந்தப் பிராணியையும், அது யாரையும் துன்புறுத்தாத வரையில், கொல்வது மிகவும் பாவம் என்பது சுப்புலக்ஷ்மியின் எண்ணம். பௌத்தர்கள் ஏராளமாய் உள்ள இலங்கையில் இவ்விதம் பலர் நடந்து கொள்வது அவளுக்குப் புதிராக இருந்தது.

அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டிருந்த போதிலும், அவள் தகப்பனார் தாய்நாடு திரும்புவதென்றும் விடுமுறையின் மீதி நாட்களைக் குற்றாலத்தில் கழிப்பதென்றும் நிர்மானித்த போது அவள் சிறிதும் வருத்தமடையவில்லை.

குற்றாலத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்த சில நாட்களுக்குள் ஒரு தந்தி வந்தது. என்னமோ ஏதோ என்று மிகவும் நடுக்கத்துடன் சுப்புலக்ஷ்மி அதைப் பிரித்துப் பார்த்தாள். அவள் முகம் சிவந்தது. குடும்பத்தினர் அனைவருக்கும் அதை உரக்கப் படித்துக் காட்டும்படி கூறி அவள் தன் தந்தையிடம் அந்தத் தாளை நீட்டினாள். அப்போது அவளுடைய முகத்தில், தந்தியில் கண்டிருப்பதை அவளால் நம்பவே முடியவில்லை என்பதும், மிகுந்த வியப்பும் பிரதிபலித்தன.

லார்டு பெண்ட்லாண்டுக்குப் பிறகு சென்னை கவர்னராக வந்திருந்தவர் லார்டு வில்லிங்டன். கவர்னரிடமிருந்துதான் தந்தி வந்திருந்தது. மாட்சிமை பொருந்திய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஸ்ரீமதி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மிக்குச் சென்னை ராஜதானியில் பெண் கல்விக்கு அவள் செய்த தொண்டுக்காகப் பதக்கம் (Kaiser - i - Hind Medal) அளிக்க மனமுவந்திருப்பதாகத் தந்தியில் கண்டிருந்தது.

இவ்வாறு நடக்கும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. ஆனந்த வெள்ளத்தில் மிதந்தாள் அவள்.

3

சுப்புலக்ஷ்மியும் சித்தியும் ஐஸ்ஹவுசுக்குத் திரும்பி வந்ததும் கேட்ட முதல் செய்தி துரைசாமி இறந்து விட்டார் என்பதுதான்.

அப்போது கருவுற்றிருந்த சாவித்திரி தன் துக்கத்தைத் தைரியத்துடன் பொறுத்துக் கொண்டாள். அவளும் சம்பிரதாயமான விதவைக் கோலம் பூணவில்லை. தன் அக்காவைப் பின்பற்றி, அவளைப் போலவே அமைதியும் சாந்தமும் கலந்த ஒரு கம்பீரத்துடன் துயரைத் தாங்கினாள். அவளுக்கு ராணுவத்திலிருந்து 'பென்ஷன்' கிடைக்கும் என்று தோன்றியது. அவளுடைய குழந்தைகள் எல்லோரையும் நன்றாகப் படிக்க வைக்க வாய்ப்பிருந்தது.

மூத்த பெண் காந்தாமணி தன் தந்தையைப் போலவே தானும் டாக்டராக விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அந்த எண்ணம் நிறைவேறுவதில் இடையூறு ஏதுமில்லை. குழந்தைகள் நன்கு வளர்ந்து தங்களுக்கென்று அபிப்பிராயங்கள் உருவாக்கிக் கொள்ளும் தகுதியையும் வயதையும் அடைந்து கணவன்மார்களைப் பெறும் வரை சாவித்திரி அவர்களை நன்றாகப் பராமரித்துக் குடும்பத்தை நடத்தவேண்டும்.

சகோதரியும் சித்தியும் தங்கள் துக்கத்தை மறைத்துக் கொள்ள வெகுவாக முயன்றார்கள். ஏனெனில், இளம் விதவைகள் வளர்ந்து வரும் அந்த இல்லத்தில் சந்தோஷச் சூழ்நிலையைக் காப்பாற்றி வருவதுதான் தங்களது முதல் கடமை என்று கருதினார்கள்.

இன்னமும் விதவை இல்லத்தைப் பற்றிக் கண்டனங்கள் அவ்வப்போது எழத்தான் செய்தன. இனி எதிர்காலத்திலும் எழும் என்றுதான் தோன்றியது. ஆயின் இதற்குள் விதவை இல்லத்தின் வெற்றி பெரும்பாலும் பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

1930ம் வருஷத்தில் ஜல்லவுனில் சுமார் நூறு பெண்கள் இருந்தனர். கட்டடம் நிட்டமாக நிரம்பி யிருந்தது. அவர்களில் பெரும்பான்மையானவர்கள் குழந்தை விதவைகளே. அநேகம் பேர்கள் மிகவும் ஏழைமையான குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். கல்யாணமாகாத சில பெண்களும் வேறு சிலரும் வசதி படைத்த குடும்பங்களிலிருந்து வந்திருந்தார்கள். சுமங்கலிகளாக இருப்போரை அங்கு சாதாரணமாகச் சேர்த்துக் கொள்வதில்லை. இதற்கு விதிவிலக்காக இருந்த ஓரிருவர் அங்கு வருவதற்கான முக்கிய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் உருவாகி யிருந்தன.

சகோதரி ஒரு நாள் என்னைக் கேட்டார்: ''ஓர் இளம் விதவை மறுமணம் செய்து கொண்டதையும் அவள் கணவன் மிகவும் பேராசைக்காரனாகவும் கொடுமைப்படுத்துபவனாகவும் இருந்தபடியால் அவனை விட்டு விட்டு அவள் ஓடி வந்ததையும் பற்றி உங்களிடம் இதற்குமுன் கூறியிருக்கிறேனா?''

''ஆமாம், சொன்னீர்கள். ஆனால் அவள் உங்களிடம் மீண்டும் அழைத்து வரப்பட்ட போது அவள் விதவை அல்ல என்ற காரணத்தால் அவளைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை என்றல்லவா சொன்னீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''ஆமாம்; அவள் முதலில் வந்த போது அப்படித்தான் இருந்தது. பிறகு, சட்டங்கள் மாற்றப்பட்டன. அவள் தகப்பனார் மீண்டும் வந்து அவளைச் சேர்த்துக் கொள்ளும்படி என்னைக் கேட்டார். நானும் ஒப்புக் கொண்டேன். அவள் மிகவும் புத்திசாலியான பெண். சீக்கிரமே அவள் இங்கு அநேக தோழிகளைச் சம்பாதித்துக் கொண்டு விட்டாள்.''

இத்தகைய தோழிகளில் ஒருத்தி இவளைப் போலவே பதினாறு, பதினேழு வயதுப் பெண். அவளுக்குக் கல்யாணமாகி யிருக்கவில்லை. அவள் பெற்றோர்கள் சென்னையிலேயே இருந்தனர்.'

இந்த இரண்டாவது பெண்ணின் தகப்பனார் தம் பெண்ணுக்கு ஏற்ற வரனைத் தேடிக் கொண்டிருந்தார். அவன் நல்ல ஸ்திதியில் இருந்தால் மட்டும் போதாது, படித்த மனைவியைப் பாராட்டக் கூடியவனாகவும் இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். அதற்காக அவர் பத்திரிகையில் விளம்பரம் செய்தார். ஓரிரண்டு வாரங்களுக்குப் பிறகு அவர் ஜல்லவுக்கு வந்து, கல்கத்தாவிலுள்ள ஒருவரிடமிருந்து பதில் வந்திருப்பதாகத் தம் பெண்ணிடம் கூறினார். அந்தத் தந்தை முற்போக்கான கொள்கையுடையவர். தம் பெண்ணைக் கலக்காமல் எந்த ஏற்பாடும் செய்ய மாட்டார். அந்த இளைஞன் எழுதிய கடிதத்தை அவளிடம் படிக்கக் கொடுத்தார். அவனைக் கல்யாணம் செய்து கொள்ள அவளுக்கும் விருப்பம் இருந்தது. அந்தத் தந்தை, தம் மனைவியிடம் கலந்து ஆலோசித்துவிட்டுக் கல்கத்தாவுக்குத் 'தந்தி' யடித்து அந்தப் பையனை உடனே சென்னைக்கு வரவழைப்பதாகக் கூறிச் சென்றார்.

அவர் அந்தக் கடிதத்தைத் தம் பெண்ணிடமே விட்டுச் சென்றார். அவள் அதை இரண்டாவது முறையோ, மூன்றாவது முறையோ படித்துக் கொண்டிருக்கும்போது மறுமணத்திலும் மிருந்த துயருக்குள்ளான அவள் தோழி அவ்வறைக்குள் வந்தாள். கையிலிருந்த ஒரு புத்தகத்துடன் கீழே அமர்ந்தவள் படிக்க ஆரம்பிக்குமுன் யதேச்சையாக நிமிர்ந்து நோக்கினாள். பார்த்தவள் அப்படியே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள். நீண்ட நேரம் தயங்கி விட்டு, 'அந்தக் கையெழுத்தை இதற்கு முன்பே எங்கோ பார்த்திருப்பது போல் இருக்கிறதே எனக்கு' என்று கூறினாள்.

அவள் ஊகம் தவறாகவில்லை. கையெழுத்து அவள் கணவனுடையதுதான். இரு பெண்களும் தாங்கள் இவ்விஷயத்தைக் கண்டு கொண்டதைச் சகோதரியிடம் சொல்ல விரைந்தனர்.

சகோதரி உடனே அப்பெண்ணின் தகப்பனுருக்குச் செய்தி அனுப்பி விட்டாள். ''அதிருஷ்டவசமாக அவர் இன்னும் தந்தியை அனுப்பவில்லை. இந்தச் சம்பந்தத்தை வேண்டாமென்று தட்டிக் கழித்து விட்டனர். அவ்விரு பெண்களும் மேலும் சிறிது காலம் இல்லத்தில் தங்கிப் படித்தார்கள்'' என்று சகோதரி இப்போது என்னிடம் கூறினார்.

(தொடரும்)

பேட்டிக் கட்டுரை

ரேஷன் தொல்லை

○ ○

வீர சாவர்க்கர்

—சிறப்புக் கட்டுரை

○ ○ ○

சிறப்புக் கதை

மூக்குப்பிள்ளை

— துரோணன்



அடுத்த இதழில்



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் மீது
நளினி நம்பிக்கை வைத்தாள்,
நல்ல பலன் பெற்றாள்

7 நாட்களில் கண்ணாடிக் கன்னம், கண்டோர் வியக்கும் மாசுமறுவற்ற சருமம்

எனக்குக் கலியாணமே ஆகாதோ என்று மனம் புழுங்கினேன் ... எனக்கும் கலியாணம் ஆகும் என்ற நம்பிக்கையே போய்விட்டது. சிநேகிதிகளின் திருமணங்களுக்குச்சென்றுஎனக்கு அலுத்து விட்டது. மனதிலே அவநம்பிக்கை,தீராத ஏக்கம்!



இரண்டாவது முறை க்ரீமைத் தடவினால் சோப்பு நுரை புகமுடியாத சருமத்துவாரங்களுக்குள் க்ரீம் புகுந்து அங்கு அடைந்து கிடக்கும் அழுக்கை வெளியேற்றி விடுகிறது. மேலும், சருமத்தை மிருதுவாக்கி வறட்சியை ஒழிக்கிறது.



"7 நாட்களில் எழில் பெறலாம்" என்ற இலவச புத்தகத்தைப் பெற
தபால் செலவுக்கு 15 பைசா ஸ்டாம்பு வைத்து, இன்றே எழுதுங்கள்

என்னிடத்திலுள்ள குறைதான் என்ன? கண்ணாடியில் கூர்ந்து கவனித்தேன். வரிசை வரிசையாக வெண் பற்கள், கருவிழிகள்... அழகாய்த்தானிருந்தேன். ஆனால் என் சருமம்தான் சொர சொரப்பாய் அழுது வடிகிறது என்று புரிந்து கொண்டேன். உடனே அதற்கான பரிகாரம் கண்டு கொண்டேன்.



7 நாட்களில் எழில்தரும் பாண்ட்ஸ் பராமரிப்பை மேற்கொண்டேன். பிரதி இரவும், பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை இரண்டு தரம் தடவிக்கொண்டேன். முதல் முறையில், முகத்தில் படிந்துள்ள பழைய பவுடரை சிறிதுகூட பாக்கி வைக்காமல் பாண்ட்ஸ் க்ரீம் சருமத்தில் ஊடுருவி சுத்தம் செய்து விடுகிறது. அது சோப்பைப்போல எரிச்சலை ஏற்படுத்துவதில்லை.



7 நாட்களுக்குப் பிறகு—என்ன அதிசய மாறுதல்! 7 நாட்களில் எழில் தரும் பாண்ட்ஸ் பராமரிப்பு மூலம் என் முகம் வசீகரப் பொலிவுடன் விளங்கிற்று! சருமம் பட்டுப்போல் மிருதுவாகி விட்டது. ஆமாம்...எனக்குக் கலியாணம் கூட நிச்சயமாகியிருக்கிறது!



இனிமேல் சரும எழிலைக் காப்பதில் என்றுமே அக்கரையோடிருப்பேன். பாண்ட்ஸ் பராமரிப்பு தான் என் சருமத்தை பொலிவுடனும், வசீகரத்துடனும் வைக்குமே!



சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்பொரேட்டட், டிபார்ட்மெண்ட் 13, கன்போ ஸ்ட்ரீட், பம்பாய்-1

JWT-P-4569



ஊர் வம்பு

ஓரளவுக்குச் செல்வம், வசதிகள் படைத்த குடும்பத்துக் குழந்தைகள் கொழு கொழு வென்று வளர்ந்திருந்தால், அதிசயப்படுவதற் கில்லை. ஆனால் குறைந்த வருவாயுள்ளவர் களும் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார்களானால் அதிகச் செல வின்றியே அவற்றைப் போஷாக்குடன் வளர்க்க முடியும். இதை வலியுறுத்தவும் ஆரோக்கியமான முறையில் குழந்தைகளை வளர்க்க ஊக்கமளிக்கவும் இந்தியக் குழந் தைகள் நல கவுன்சில் குழந்தைகள் கண் காட்சி நடத்துகிறது ஒவ்வொரு வருஷமும்.

சென்னை நகரசபையைச் சேர்ந்த குழந் தைகள் நல சென்டரிலிருந்து சில குழந்தைகள் கண்காட்சியில் பங்கு பற்ற வந்திருந்தன. அவற்றுடன் அவற்றைப் பாதுகாத்து வளர்த்து வரும் நர்ஸ்கள் சிலரும் வந்திருந் தனர். அக்குழந்தைகளில் ஒன்றுக்கு அளிக் கப்பட்ட பரிசை அதன் சார்பில் ஒரு 'நர்ஸ்' பெற்றுக் கொண்டாள். அப்போது ஒருவர், ''நர்ஸ்கள் குழந்தைகளைவிட நன்றாக ஆரோக்கியமாக வளர்ந்திருக்கிறார்கள். அவர் களுக்கும் ஒரு பரிசு கொடுக்கலாம்!'' என்று கூறுவது காதில் விழுந்தது. மறுவுஷன் சொல்லி முடித்தாரோ இல்லையோ, நர்ஸுக்கு வெள்ளி டம்ளர் பரிசு அறிவிக்கப்பட்டது! அழகாக ஆரோக்கியமாக அவர் வளர்ந் திருந்ததற்காக அல்ல; கொழு கொழுவென்று குழந்தையை வளர்த்ததற்காக!

- பி. எஸ். எம்.


❀ ❀ ❀

அந்த நாளில் நாங்கள் கல்லூரியில் நடத்திய பொருட்காட்சி நினைவுக்கு வரு கிறது. தண்ணீர் 'பைப்'புடன் இணைக்கப் படாத வெறும் குழாய் மட்டும் இரண்டு கயிறு களின் முனையில் முடியப் பெற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும். ஆனால் அதிலிருந்து நீர் மட்டும் கொட்டிக் கொண்டே யிருக்கும். வந்தவர்கள் எல்லாரும் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். இரு கயிறுகளையும் சுட்டிக் காட்டி, 'ஒன்றின் வழியே ஹைட்ரஜனும் மற்றொன்றின் வழியே ஆக்ஸிஜனும் வரு கின்றன; குழாய்க்குள் ரசாயனச் சேர்க்கை யில் தண்ணீராக மாறிக் கொட்டுகிறது' என் பேன். உண்மை என்று நம்பியவர்கள் ஏராளம்! அவர்கள் அறியாதது என்ன வென்றால் குழாயின் வாயில் கண்ணாடிக் குழல் ஒன்று பொருத்தப்பட்டுத் தரைமட்டம் வரை நீண்டிருந்தது. அதன் அடிவாரத்தில் ரப்பர் டியூப் இணைக்கப்பட்டிருந்தது. பக்கத்து அறையிலிருந்து ரப்பர் டியூப் வழியே தண்ணீர் வந்து கண்ணாடிக் குழலி னூடே மேலே ஏறி அதனைச் சுற்றிலும் வழிந்தது. நீர் கொட்டியதால் கண்ணாடிக் குழல் கண்ணுக்குத் தெரியாது. ரப்பர்க் குழா யும் மண், செடி, கொடிகளால் அலங்கார மாக நன்கு மறைக்கப்பட்டிருக்கும்!

❀ ❀ ❀

'தண்ணீர் அடுப்பு' என்றதும் முதலில் எனக்கு இப்படி ஏதேனும் வேடிக்கையோ என்றே தோன்றியது. ஆனால் இந்த அரிய சாதனை நிகழ்ந்தே யிருக்கிறது. தண்ணீரை ஆக்ஸிஜனாகவும் ஹைட்ரஜனாகவும் பிரிக் கிறது அடுப்பு! அப்படிப் பிரியும்போது 3000 டிகிரி ஸென்டிகிரேட் உஷ்ணம் உண்டாகிச் சமையலைத் துரிதமாக முடித்துத் தருகிறது! செலவு ரொம்ப ரொம்பக் கம்மி; அநேக மாக ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்! கரியா, விறகா, மண்ணெண்ணெயா?— வெறும் தண்ணீர்தானே! ஆபத்து ஏதும் கிடையவே கிடையாது என்கிறார்கள். ஆனால் இந்த அடுப்பின் விலை ஐந்நூறு ரூபாய் ஆகிறதாம்! அதிசய அடுப்பைவிடப் பெரிய அதிசயம் என்ன தெரியுமா? இதைக் கண்டுபிடித்தவர் தம் பெயரை வெளியிட விரும்பவில்லை!

அடுப்பை வாங்கவோ பார்வையிடவோ விரும்புவோர் ராம்லே, 7, காட் கோவிந்த தாஸ் நகர் ரோடு, சென்னை - 2 என்ற விலா சத்துக்கு எழுதலாம். - கு. வி.





வெற்றித் திருநகர்

அகிலன்

அத்தியாயம் நான்கு

சதித் திட்டம்

சாளுவ நரசிம்மரின் விருப்பத்துக்கு மாறாக விசுவநாதனுக்கு வீரத் திலகமிட்டு அனுப்பிய லட்சுமி, அதற்காக அவர் தன்னைச் சினந்து கொள்ளுவார் என்று எதிர்பார்த்தாள். அமைச்சரோ அதைச்-சிறிது கூடப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. சிறு குழந்தைகளின் விளையாட்டை அலட்சியப் படுத்துபவர் போல் லட்சுமியை விழித்து நோக்கி விட்டு, ''விசுவநாதன் வெற்றி பெறப் போகிறான் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று பரிகாசம் கலந்த குரலில் கேட்டார்.

துணுக்குற்றாள் லட்சுமி.

''பயப்படாதே, லட்சுமி! இவனுடைய உயிருக்கு ஒன்றும் ஆபத்து நேர்ந்து விடாது!'' என்று கூறியவர், ''நாகம நாயக்கர் தம் குமாரனிடமே தோற்றுப் போகும் அளவுக்கு ஆற்றல் இழந்தவரில்லை என்பதையும் தெரிந்துகொள்'' என்றார்.

அவர் கூறிய சொற்களுக்குப் பின்னே பயங்கரமான சில உண்மைகள் மறைந்திருந்தன என்பதையும் அவள் உடனடியாகக் கண்டு கொண்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் அமைச்சரைத் தேடிக் கொண்டு அங்கு ராமபத்திரநாயக்கரின் தம்பி விட்டலநாயக்கர் வந்து சேர்ந்தார். அவரை அழைத்துக் கொண்டு நேரே தோட்டத்தின் பின்புறம் சென்றார் சாளுவ நரசிம்மர்.

வழக்கமாகச் சாளுவ நரசிம்மரின் ரகசியப் பேச்சுக்களை அறிந்து கொள்வதில் அவள் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் அன்றைக்கு அவளால் அப்படி இருக்க முடியவில்லை. விசுவநாதனுக்கு எதிரான செயலுக்காகவே அங்கு விட்டல நாயக்கர் வந்திருக்கிறார் என்பதை அவள் கண்டுகொண்டாள். ஒற்றறிதல், உளவு கூறுதல், தூது செல்லுதல் முதலிய செயல்களில் வல்லவரென்று பெயர் பெற்றவர் விட்டல நாயக்கர். குட்டையாக, ஒல்லியாக, ஏதுமறியாத அப்பாவி போல் அவர் காட்சியளித்தாலும், அவரைக் கண்டாலே பலர் அவர் கண்களிலிருந்து விலகுவதுண்டு. 'அவர் எதற்காக அப்பாவைத் தேடி வந்திருக்கிறார்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் லட்சுமி.

திராட்சைக் கொடிகளிடையே தன்னை மறைத்துக் கொண்டு சந்தடியின்றித் தோட்டத்துக்குள் நடந்தாள். புதருக்குப் பின்னால் நின்று மூச்சுவிடும் ஓசையைக்கூட அடக்கிக் கொண்டாள். அமைச்சரும் விட்டலராயரும் மிகவும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர். விசுவநாதனுடன்



செல்லும் படையினரின் எண்ணிக்கை, அவர்கள் செல்லும் வழிகள், இடையில் தங்கப் போகும் இடங்கள் முதலியவற்றை விவரித்தார் விட்டல நாயக்கர்.

''விட்டல நாயக்கரே! எனக்குச் சேர நாட்டு உதயமார்த்தாண்டனின் மறுமொழி என்ன என்று தெரிய வேண்டும். நாகமநாயக்கருக்குத் துணையாகப் படைகளுடன் வந்து அவன் விசுவநாதனுடன் போரிடுவானா? அதற்குப் பிரதியாகத் தென்காசி நாட்டை அவனுக்குக் கொடுப்பதாக நாகமநாயக்கர் ஒப்புக் கொண்டாரா? உதய மார்த்தாண்டவர்மனை எப்படியாவது இதில் நாகம நாயக்கருக்குப் பின்பலமாக்கிவிட வேண்டும்.''

''யோசித்து முடிவு சொல்வதாக உதய மார்த்தாண்டவர்மன் கூறியிருக்கிறார்.''

''சேர நாட்டுத் தலைவர் முடிவு செய்வதற்குள் பாண்டிய நாட்டின் எல்லைக்கே விசுவநாதன் போய்ச் சேர்ந்து விடுவான் போல் இருக்கிறதே!'' என்று கூறிச் சிரித்தார் அமைச்சர். ''உதயமார்த்தாண்டன் யோசனை செய்வதற்கான காரணம் எனக்குப் புலப்படுகிறது. விஜயநகரத்தின் படைபலத்தைக் கண்டு அவர் நடுங்குகிறார். ஆகையால் அவருடைய அந்தப் பயத்தைப் போக்க வேண்டியது நம் கடமை. சக்கரவர்த்திகள் இருக்கும் நிலையில், இனி அவர்கள் நாட்டின் தென்கோடிக்குப் படையெடுத்து வர மாட்டார்கள் என்பதை அவருக்கு நீ எடுத்





"உங்களுக்கெல்லாம் இப்போது கதை சொல்லப் போகிறேன். என்ன கதை வேணும்?"

"ரோமியோ — ஜூலியட், லைலா — மஜ்னு, அம்பிகாபதி — அமராவதி, எலிசபெத் டெய்லர் — ரிச்சர்ட் பர்ட்டன் கதை சொல்லுங்க டீச்சர்!"

துக் கூற வேண்டும். அதே போல், அவர் படைகளோடு மதுரைக்கு வரும் வரையிலும் நாகமநாயக்கர் உடன்பாட்டுக்கு வருவது போல் விசுவநாதனிடம் பேச்சு நடத்திக் காலம் தாழ்த்த வேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் நீ எப்படியாவது செய்து தீர வேண்டும். இனியும் தாமதித்தால் எல்லாமே கெட்டுப் போய்விடும்."

"மிகச் சிரமமான பணிதான்" என்றார் விட்டல நாயக்கர்.

"குறுக்கு வழிகளில் தனித்தனியே மதுரைக்கும் கொல்லத்துக்கும் ஆட்கள் போக வேண்டும். உதய மார்த்தாண்டனுக்கு நானே ஓலை தருகிறேன். அப்போது தான் அவருக்கு நம்பிக்கை பிறக்கும். நீயே அதை அவரிடம் சேர்ப்பித்து, அங்கிருந்து அவரை மதுரைக்குப் படைகளோடு அனுப்பி வை. சித்திரா நதியும் செந்நெல் விளையும் மண்ணும் கொண்ட தென்காசியை அவருக்கு நாகமர் அளிப்பார் என்று உறுதி சொல்."

பிறகு அவர்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பவே, லட்சுமி அவசரம் அவசரமாக மாளிகைக்குள் நுழைந்து மேல்மாடத்துக்குச் சென்றாள். அவள் தேகம் நடுநடுங்கியது; நா வறண்டது. விழிகள் சுழல்வது போல் தோன்றின.

நாகம நாயக்கரோடு போரிடப் போவதால், விசுவநாதனின் உயிருக்கு ஏதும் ஊறு விளையக் கூடுமென்று அவள் அதுவரை நினைக்கவில்லை. எங்கிருந்தோ மூன்றாவது ஒருவன் படை திரட்டி வரப் போகிறானே! விசுவநாதனை எதிர்ப்பதற்கு இரண்டு பேர்களா?

சாளுவ நரசிம்மர் மீது அவளுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. அவருடைய பிடிவாதம் எந்த எல்லைக்குச் சென்றுவிட்டது என்பதைக் கண்டு அவள் பதறித் துடித்தாள். 'காட்டு மிருகத்தை வளைத்து வேட்டையாடுவது போல், இவரைச் சதி செய்து வளைக்கப் பார்க்கிறார்களா? எப்படித்தான் இதற்கு ஒரு தந்தையும் உடன்படுகிறாரோ, தெரியவில்லை!'

நேரடியாகவே தன் தந்தையிடம் கேட்க வேண்டுமென்ற ஆவேசம் அவளுக்கு. அதற்குள் அமைச்சர் அரண்மனைக்குச் சென்றுவிடவே, அவளும் உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சிந்தனையாக மாற்றினாள். அவருடன் பழகி ஓரளவு அரசியல் விஷயங்களைத் தெரிந்து கொண்டவளாதலால், அவளுடைய மனம் நொடிப் பொழுதில் எண்ணற்ற யோசனைகளைச் செய்து பார்த்தது.

கடைசியாக அவள் அன்னையாரிடம் சென்று, "நான் திருமலாதேவி பட்டணம் சென்று பாட்டியைப் பார்த்துவிட்டு வருகிறேனம்மா!" என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல், வாயிலுக்கு வந்தாள். தோழி ஒருத்தியை அழைத்துக் கொண்டு சிவிகைக்குள் அமர்ந்தாள். மூன்று நாழிகைப் பிரயாணத்தில் திருமலாதேவிப் பட்டணம் சென்றுவிடலாம். விசுவநாதனின் படைகள் அன்றிரவு அங்கு தங்கி, பொழுது புலருவதற்கு முன்பு அங்கிருந்து கிளம்பப் போகின்றன என்ற விஷயத்தை அவள் அறிந்திருந்தாள்.

படைகளின் நடமாட்டம் மிகுந்திருந்த சாலையோரத்தில் அவளுடைய சிவிகை விரைந்தது. படைகளுக்குப் பின்னே வீரர்களுடன் குதிரையில் சென்ற விசுவநாதன் சிவிகையை இனம் கண்டுகொண்டு வியப்போடு பார்த்தான். சிவிகை நின்றது. திரையை மெல்ல விலக்கி அவனைத் தன் விழிகளால் அருகில் அழைத்தாள் லட்சுமி. வீரர்களை விட்டுத் தனியே செல்வதற்கு அவன் ஒரு கணம் தயங்கிவிட்டு, பிறகு மெல்லத் தன் குதிரையைச் சிவிகைக்கு அருகே கொண்டு சென்றான்.

"திருமலாதேவி பட்டணத்துக்கு என் பாட்டியாரைக் காணச் செல்கிறேன். அவர்களுடைய மாளிகையில்தான் இருப்பேன். முடிந்தால் ஒரே ஒரு விநாடி என்னை அங்கு வந்து சந்திக்கிறீர்களா?"

கெஞ்சுவது போல் விரிந்த அவளுடைய விழிகள் அவனுக்கு மறுக்க முடியாத ஆணையிட்டன. அவளுடைய தோற்றத்தில் அவன் கண்ட பரபரப்பு, ஏதோ முக்கியமான செய்தி என்பதையும் அவனுக்கு உணர்த்தியது.

"வருகிறேன்" என்றான். சிவிகை மேலே விரைந்து சென்றது.

அவளைச் சந்திப்பதற்காகத் தோழியை அனுப்பி வைக்க நினைத்தவனுக்கு வழியில் அவளைக் கண்டுவிட்டது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

பாட்டியின் மாளிகை வாசலில் அவனுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள்

லட்சுமி. அவனுடைய குதிரையைக் கண்டவுடன்தான் அவளுக்கு உயிர் வந்தது. ''உங்களை இந்தச் சமயம் பார்த்து அழைத்தது தவறுதான்; ஆனால் நான் உங்களைக் காண்பதற்குத்தான் இங்கு வந்திருக்கிறேன்'' என்று அவனை அழைத்துக் கொண்டு மாளிகையில் ஒரு தனி இடத்துக்குச் சென்றாள். அவளால் உடனடியாக ஏதும் பேச முடியவில்லை. தடுமாறினாள்.

''என்ன லட்சுமி?''

''நீங்கள் எதிர்பாராத எதிர்ப்புக்களும் அங்கே உங்களுக்காக மறைந்திருக்கின்றன. எளிதான போராக இது இருக்குமென்று நினைக்க வேண்டாம். உங்கள் அப்பாவைத் தவிர நீங்கள் சேர நாட்டு மார்த்தாண்ட வர்மரோடும் போர் புரிய வேண்டிய அவசியம் இருக்கும்.''

''என்ன?'' — திடுக்கிட்டான் விசுவநாதன்.

விவரமாக அவள் அறிந்த சதித் திட்டங்களை அவனிடம் வெளியிட்டாள் லட்சுமி. விசுவநாதனால் அவள் கூறியவற்றை நம்பாமல் இருக்க முடியவில்லை. உதய மார்த்தாண்டனின் உறவு சரியான நிலையில் இல்லை என்பதை அவன் முன்பே அறிந்தவன்.

''எப்படி நீ இந்தச் செய்திகளை அறிந்து கொண்டாய்?''

''தயைசெய்து அதை மட்டிலும் என்னிடம் கேட்காதீர்கள்'' என்று தழுதழுத்த குரலில் வேண்டிக் கொண்டாள் லட்சுமி.

அத்தியாயம் ஐந்து

அன்பு பட்ட துன்பம்

உதயமார்த்தாண்ட வர்மன் நாகம நாயக்கருக்குத் துணையாகப் படையெடுத்து வரக்கூடுமென்று விசுவநாதன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்திருந்தால் முன்பே அதற்கான ஆயத்தங்களுடன் புறப்பட்டிருப்பான். விஜயநகரத்திலிருந்து புறப்பட்ட பிறகு செய்தி வந்திருக்கிறது. போருக் கென்று கிளம்பி வந்த பிறகு திரும்பிச் சென்று படைகளைப் பெருக்கிக் கொள்ள அவன் விரும்பவில்லை. விசுவநாதன் திகைப்படைந்தான். என்றாலும் செய்தி தக்க சமயத்தில் கிடைத்தது அவனுக்கு எச்சரிக்கையாக இருந்தது.

''லட்சுமி! எப்படி நீ இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டாய் என்ற விவரத்தையும் என்னிடம் கூறவேண்டும். அப்போதுதான் இந்தச் சதிச் செயலிலிருந்து என்னால் மீள முடியும். நீ செய்யும் உதவியும் எனக்கு முழுப் பலனைத் தரக்கூடும்'' என்றான்.

''உங்களை எதிர்நோக்கியுள்ள ஆபத்தை நான் சொல்லிவிட்டேன். அதையும் முறியடித்து நீங்கள் வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். அதற்கு மேல் என்னிடம் கேட்காதீர்கள்'' என்றாள் லட்சுமி.

''ஏன் கேட்கக் கூடாது?''

லட்சுமி பரிதாபமாக அவனை விழித்துப் பார்த்தாள். அந்தப் பயங்கரமான சதிச் செயலுக்கு மூலகாரணமே அவள் தந்தைதான் என்று அவள் கூற விரும்பவில்லை. சாளுவ நரசிம்மரின் ஓலையோடு விட்டல நாயக்கர் புறப்பட்டிருப்பதையும் அவள் வெளியிட மறுத்தாள். அந்த ஓலை சக்கரவர்த்திக்குக் கிடைக்குமானால், அமைச்சர் அப்பாஜி அநுபவித்து வரும் தண்டனையைவிடக் கடுமையான தண்டனை அவருக்குக் கிடைக்கும் என்ற அச்சம் அவளுக்கு.

லட்சுமி கண்ணீர் வடித்தாளே தவிர, மறுமொழி கூறவில்லை. விசுவநாதன் புன்னகையோடு அவளை உற்றுப் பார்த்தான். உண்மையை ஊகித்தறிய வெகு நேரமாகவில்லை அவனுக்கு.

''நீ கூறவேண்டாம். நானே கூறட்டுமா?'' திடுக்கிட்டு விழித்தாள் லட்சுமி.

''உன் அப்பா சாளுவ நரசிம்மரின் ஏற்பாடு இது! தம்முடைய நண்பரைக் காப்பாற்றுவதற்காக இந்தப் பெரும் பழியைச் செய்யத் துணிந்திருக்கிறார் அவர். உதய மார்த்தாண்ட வர்மனுடைய தந்தையும் உன் அப்பாவும் நெருங்கிய நண்பர்கள். நண்பரின் குமாரர் என்பதால் அவரைத் தூண்டி விட்டிருக்கிறார் உன் அப்பா!''

லட்சுமி வெலவெலத்துப் போனாள். சொற்கள் தடுமாறின.

''நான்.... நான்.... உங்கள் மீது அன்பு கொண்டிருக்கிறேன். ஆனால் என் அப்பாவுக்கு ஏதும் துன்பம் வந்தால் என்னால் அதைத் தாங்க முடியாது. பிறகு என்னை உயிரோடு நீங்கள் காண முடியாது'' என்று தேம்பினாள்.

விசுவநாதன் லட்சுமியின் போராட்டத்தை உணர்ந்து கொண்டான். அவன் அவளைக் காப்பாற்ற விரும்பினான். அதே சமயம் அவள் தந்தையைக் காட்டிக் கொடுக்கவும் துணியவில்லை. அவரையுமே அவள் பாதுகாக்கத் துடித்தாள்.

வருத்தத்துடன் சிரித்தான் விசுவநாதன். ''லட்சுமி! நம் இருவருக்குமே இப்போது பகை வெளியே இல்லை. வெளிப் பகையோடு போராடுவது மிகவும் எளிதான காரியம். நம்மிடம் அன்பும் பாசமும் கொண்டவர்களே நமக்குப் பகைவர்களாக மாறியிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது நம் இருவருக்கும் ஒரே துன்பம்தான்'' என்றான்.

''எனக்கு நீங்கள் ஒரு வாக்குறுதி தர வேண்டும்!'' என்று திடீரெனக் கேட்டாள் லட்சுமி.

''என்ன?''

''தருவதாகச் சொல்லுங்கள்.''

''வாக்கைக் கொடுத்துவிட்டால் பிறகு நான் அதைக் காப்பாற்ற வேண்டும். நீ



"நான் ஆபீஸிலிருந்து வருவதற்குள் என் அம்மாவும், அக்காவும் ஊருக்குப் போய் விட்டார்களே! உண்மையைச் சொல். அவர்களை நீ ஏதாவது சொன்னாயா?"

"ரேஷன் அரிசியில் கல்லைப் பொறுக்கி எடுத்தால்தான் சோறு வடிப்பேன் என்று சொன்னேன். இது, தப்பா?"

கேட்பது என்ன என்று தெரியாமல் என்னால் வாக்களிக்க முடியாது. முன்யோசனை இன்றி நான் எதையும் சொல்ல மாட்டேன். இதற்காக எனக்கு உன்மீது அன்பில்லை என்று நினைத்துவிட வேண்டாம். என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் நீ இங்கு விரைந்து வந்திருக்கிறாய். நான் நன்றி மறந்துவிட மாட்டேன்."

லட்சுமியின் முகம் கருத்தது. கோபத்தோடு அவனை உருட்டி விழித்து விட்டு, "வேண்டாம்; உங்களிடம் நான் எதுவுமே கேட்கவில்லை!" என்று சொல்லிவிட்டுச் சரேலென்று அங்கிருந்து எழுந்தாள்.

அவள் கரத்தைப்பற்றி நிறுத்தினான் விசுவநாதன். "சொல்! நீ விரும்புவது என்ன?"

அழுகையும் ஆத்திரமும் தொண்டையை அடைக்க, "அப்பாஜிக்கு நேர்ந்துள்ள கதி என் அப்பாவுக்கும் நேர்ந்துவிடக் கூடாது! அவருக்கு அப்படி ஏதாவது நேர்ந்தால் இனி இந்த உயிருடன் உங்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்!" என்றாள் லட்சுமி.

உடனடியாக விசுவநாதன் மறுமொழி கூறவில்லை. அவன் யோசனையில் ஆழ்ந்தான். அப்படி அவன் யோசனை செய்தது லட்சுமிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. கோபத்துடன் அவனை உற்றுப் பார்த்தாள்.

"நீ, உன் அப்பா, என் அப்பா எல்லோரையுமே நான் உயிருக்குயிராக நேசிக்கிறேன். அதே போல் இந்த மாபெரும் சாம்ராஜ்யத்திடமும் அன்பு கொண்டிருக்கிறேன். சாம்ராஜ்யம் முன்பு இருந்தது போல் இப்போது இல்லை. சக்கரவர்த்திகளைப் போலவே அதுவும் பலவீனப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் முன்பு அப்பாஜியைத் தண்டித்தது போல் இப்போது சக்கரவர்த்திகளால் உன் அப்பாவைத் தண்டிக்க முடியாது. அவர்கள் இருவருக்குள்ளும் பகையோ, பிளவோ ஏற்பட்டால், அதனால் வெளிப் பகை புகுந்துவிடும். ஆகவே, சாம்ராஜ்யத்தின் நன்மைக்காக உன் அப்பாவுக்கு ஒரு கெடுதலும் வராது பார்த்துக் கொள்வேன். அதேபோல், சாம்ராஜ்யத்துக்கும் அவரால் கெடுதல் விளையாமல் இருக்க வேண்டும்."

லட்சுமிக்கு இப்போதுதான் அவனிடம் ஓரளவு நம்பிக்கை பிறந்தது. "அப்படியானால் இதையே நான் உங்களுடைய வாக்குறுதியென்று எடுத்துக் கொள்ளலாமா!" என்று கேட்டாள்.

"அப்படியே வைத்துக் கொள்!"

"விட்டல நாயக்கரிடம் அப்பா உதய மார்த்தாண்டனுக்கு ஓலை அனுப்பியிருக்கிறார். அந்த ஓலை உதய மார்த்தாண்டனுக்கோ நம் சக்கரவர்த்திகளுக்கோ கிடைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் லட்சுமி.

விசுவநாதனுக்கு ஏற்பட்ட ஆனந்தத் துக்கோர் எல்லையில்லை. மலையைப் போல் குறுக்கே வந்து நின்ற சோதனை ஒன்று பனிப் படலம் போலக் கரைந்துவிட்டது கண்டு அவன் உளம் பூரித்தான். லட்சுமியின் அழகு அந்தக் கணத்தில் ஆயிரமாயிரம் சுடர்கள் விட்டுத் திகழ்வது போல் அவனுக்குத் தோன்றியது.

"லட்சுமி! எதையும் தனதென்று மூடி மறைத்து வைத்துக் கொள்ளாமல், எல்லா இரகசியங்களையும் நீ என்னிடம் இன்று கொட்டியிருக்கிறாய். உன்னுடைய இந்த அன்பு என்றும் இவ்வாறே முழுமையோடு துலங்க வேண்டும். இதை நான் ஒருபோதும் தவறாகப் பயன்படுத்த மாட்டேன்" என்று நெஞ்சுருகக் கூறினான் விசுவநாதன்.

லட்சுமியின் இதயமும் பாகாய்க் கரைந்து உருகியது. "போர்க்களத்தில் உங்களைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். வெற்றியோடு விரைவில் திரும்பி வாருங்கள்!" என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டே அவன் விடை கொடுத்தாள்.


விசுவநாதன் தன் படை முகாமுக்குத் திரும்பினான். சில நாழிகைக்கெல்லாம் லட்சுமியும் தன் பாட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு விஜயநகரத்துக்கு விரைந்தாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தவுடன் விசுவநாதனின் படை தெற்கு நோக்கிக் கிளம்பியது. அரியநாத முதலியாரிடம் மட்டிலும் தனித்துப் பேசிவிட்டு, சில ஆட்களுடன் குறுக்கு வழிப் பாதையை நோக்கிச் சென்றான் விசுவநாதன். தொலைவில் குதிரைகளின் குளம்பொலிச் சத்தம் கேட்டது. ஆட்களை மறைந்திருக்கச் சொல்லிவிட்டுத் தானும் புதர்களின் பின்னே பதுங்கினான்.

மூன்று குதிரைகள் வரிசையாக வந்து கொண்டிருந்தன. இடையில் விட்டல நாயக்கர் வந்து கொண்டிருந்தார். வீரர்களுக்குச் சைகை செய்துவிட்டுக் குறுக்கே வந்து நின்றான் விசுவநாதன். விட்டல நாயக்கரின் முகம் பிரேதக் களை காட்டியது.

மெல்ல அவர் அருகில் சென்று, அவருக்கு மட்டிலும் கேட்கும்படியாக, "உதய மார்த்தாண்ட வர்மனுக்கு அமைச்சர் அனுப்பிய ஓலையைத் தந்து விடுகிறீர்களா?" என்று கேட்டான். மறுமொழி பேசாது ஓலையை எடுத்து நீட்டிவிட்டார் விட்டல நாயக்கர். போரில்லை; சலசலப்பில்லை; சத்தமில்லை.

மீண்டும் விசுவநாதன் அவனுடைய படை வீரர்களுடன் சேர்ந்து கொள்வதற்காகத் திரும்பி வந்தான். அப்போது அவனுக்குப் பின்னால் சிறை செய்யப்பட்ட விட்டல நாயக்கரும் மற்றும் இரு துரோகிகளும் காணப்பட்டனர். (தொடரும்)



ஸ்ரீ G. N. பாலசுப்ரமணியம் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி G. B. துரைசாமிக்கும் ஸ்ரீ R. V. மல்லிநாத அய்யர் அவர்களின் குமாரி சௌ. கிரிஜாவுக்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும், மாலை வரவேற்புக்கும் ஏராளமான நண்பர்களும் உறவினர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர். வாழ்க மணமக்கள்!


ஆபீஸ் வேலை தலைக்குமேல் — தலைவலியோ
மண்டையைப் பிளக்கிறது!
தலைவலி தாள முடியலை. இத்தனை வேலையையும் எப்படி செய்யப் போறேனோ!
ஒரே ஒரு வில்லை ஸாரிடான் சாப்பிடு விஸ்வநாதன்! தலைவலி ஓடிப்போகும் பார்!
விஸ்வநாதன் ஸாரிடான் சாப்பிடுகிறார்
பிறகு ...
பிரமாதம், பிரமாதம்! தலைவலி ஓடிப் போச்சே!
ஒரே ஒரு ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
'உலகப்புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் தலைவலி, பல்வலி, உடல்வலி மற்றும் சாதாரண உடல் கோளாறுகள் இவற்றிலிருந்து விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. பெரியவர்களுக்கு 1 வில்லை, குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
Saridon
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

அட்டைப்படக் கதை

தராசு

தி. சா. ராஜூ

எதிர்பாராதவிதமாக நல்ல மழை பெய்து ஓய்ந்திருந்தது. பாத்தியிலிருந்து பெரிய நாற்றுக்களாக எடுத்துக் களைக்கொட்டியின் உதவியுடன் வாசற்புறத் தோட்டத்தில் நட்டுக் கொண்டிருந்தேன். அடுத்த வீட்டுப் போர்ட்டிகோவில் ஸ்கூட்டர் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நண்பர் கல்யாணராமன் தமது அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து விட்டார்: இன்னும் சில நிமிஷங்களில் அவர் என்னைக் காண வருவாரென்று தெரியும். ஆகவே கையைக் கழுவிக் கொண்டு வெளி வராந்தாவில் பிரம்பு நாற்காலிகளை எடுத்துப் போட்டேன்.

கல்யாணராமன் வருமான வரி இலாகாவில் உயர்தர அலுவலர். அவருடைய அந்தஸ்துக்கும் வருவாய்க்கும் அவர் இன்னும் சிறந்த பகுதிகளில் நல்ல வீடாகப் பார்த்துத் தங்கியிருக்கலாம். ஆனால் அல்வரில் வாழும் ஒரே தமிழனின் பக்கத்தில் வசிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவர் என்னுடைய அடுத்த வீட்டுக்குக் குடி வந்தார். ஒரு நாளைக்குக் குறைந்தது மூன்று தரமாவது என்னைக் காணாமல் போக மாட்டார்.

தட்டாடை வேஷ்டி, முழுக்கை பனியன், காலில் சிங்கப்பூர்ச் செருப்பு, தோளில் கைத்தறித் துண்டு ஆகிய உடையுடன் என் வீட்டுக்குள் நுழைந்தார் கல்யாணராமன்.

"உங்கள் உமாசங்கர் இல்லையா, மேன்மை தங்கிய தோல் வினைஞர், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்று காலை அவருக்கும் பக்கத்துக் கடைக்காரரான ரவி சங்கருக்கும் ஏதோ தகராறு. அவரை இவர் இரண்டு கிலோ எடைக் கல்லினால் பதம் பார்த்து விட்டார். ஒரே உதிர–வெள்ளம். தராசுக் கடைத் தோழர் அலெக்ஸாண்டிரியா ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். உங்கள் நண்பர் ஜெயிலில் என்ன செய்வாரென்று இனிமேல் தான் தெரிய வேண்டும்."

"தகராறுக்கு என்ன காரணமாம்?"

"காரணம் பெண் வேட்டைதான். அந்தப் பெண் இருக்கிறாளே, அவளுக்கு என்ன பெயர் வைத்தீர்கள்? விழியால் மொழி பேசுவாளே! கடாக்ஷிணியா, மிருணாளினியா, உங்கள் கவிதைக் குமரி — அவள்தான் வந்து போனாளாம். அதற்குப் பிறகுதான் சண்டை ஏற்பட்டதாம். எதிர்த்தாற் போலிருந்த சைக்கிள் கடைக்காரன் கூறினான்" என்றார்.

விடுதலைக்கு முன்பு அல்வர் ஒரு சுதேச சமஸ்தானம். ராஜா ஒரு ஹிந்து. ஆட்சி மொழி உருது. சமஸ்தானத்தில் நிறைய முஸ்லிம்கள் வசித்தனர். இஸ்லாமிய ஆதிக்கம் சற்று அதிகமாகவே இருந்தது. நாடு துண்டாடப்பட்டபோது பாஞ்சாலத்திலிருந்து விரட்டப்பட்ட ஹிந்துக்கள் இங்கே ஓடிவந்தார்கள். அல்வர் மன்னரும் அவர்களை வரவேற்றார். இங்கு ஓண்ட வந்த அகதிகள் உள்ளூர் முஸ்லிம்களைச் சூறையாடத் தொடங்கினர். ஆனால் அவர்களை எதிர்த்து நின்றவர்கள் அல்வரைச் சேர்ந்த ஜாட்டுகளும், அஹீர்களும் ஆவர். நாளடைவில் சமநிலை தோன்றியது. இங்கு குடியேறியதும் அகதிகள் ஊரில் பல தொழில்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பூட்பாலிஷ், கரும்பஞ்சாறு பிழிந்து விற்பது, சிறு சிறு தொழில் பட்டறை, பிஸ்கட், பெப்பர்மின்ட் விற்பனை, சைக்கிள் ரிக்ஷா, பஸ் கண்டக்டர், தள்ளு வண்டி, இன்னும் எவ்வளவோ! ஆனால் ஒருவரும் வீதிகளில் கையேந்தி நிற்கவில்லை.

நண்பர் கல்யாணராமன் குறிப்பிட்ட ரவிசங்கர், உமாசங்கர் இருவருமே அகதிகள்தாம். மகாராஜா தமது பிரஜையை வைத்திருந்த பாழ் மண்டபத்தில் ரவிசங்கர் ஒரு சிறிய கடையைத் தொடங்கினான். சைக்கிள் ரிப்பேர், ஸ்டவ் செப்பனிடுவது முக்கியமான தொழில். கூடவே சிணுக்கு ஏற்ற துணைத் தொழில்களும் உண்டு. நாவல் பழம், நிலக்கடலை, மாம்பழம், தேங்காய் பத்தை எல்லாம் விற்பனை ஆகும். இந்த ஊரில் வாழைப் பழத்தையும், தேங்காய்க் கீற்றையும் கூட நிறுத்துத்தான் விற்பனை செய்வார்கள். ஆகவே, கடைகளில் தராசு ஓர் இன்றியமையாத அம்சம். அதுவும் இவனுடைய கடையின் முகப்பில் ஒரு சிறிய மேஜையின் மேல் தன்னுடைய 'ஸ்டாண்டிங் பாலன்ஸை' எடுப்பாக வைத்திருப்பான். அதனுடைய எடைத் தட்டுக்கும் சங்கிலிக்கும் தண்டுக்கும் பாலிஷ் போட்டு வைப்பான். நடுத் தண்டில் ஒரு சந்தனப் பொட்டு. அதைக் காணும்போதெல்லாம் எனக்கு மொகலாய மன்னர்களின் நீதி மன்றத்துத்

தராசு நினைவுக்கு வரும். ஜஹாங்கீரின் நேர்மை கண் முன்பு நிற்கும். கூடவே சிபிச் சக்கரவர்த்தியும், சத்தியபாமையும் எதிரே வந்து நிற்பார்கள்: தராசு நமது சமுதாயத்துக்கே ஒரு நேர்மைச் சின்னம்.

அந்த மண்டபத்துக்குப் பக்கத்தில் ஒரு கித்தான் படுதாவை நிழலுக்கு விரித்து உமா சங்கர் அமர்ந்திருப்பான். அவன் முதலில் பூட்பாலீஷ் செய்யத் தொடங்கினான். அடுத்துச் செருப்புக் கடையும் வைத்தான். சிறிய ரிப்பேர் தொழிலும் செய்வதுண்டு. வேலை அதிகம் இல்லாதபோது காலண்டர் அளவில் சித்திரங்கள் வரைவான். இருவரும் நல்ல பையன்கள். ஒருவர் இல்லாதபோது இன்னொருவர் கடையைக் கவனித்துக் கொண்டு உதவியாக இருப்பார்கள். வாடிக்கைக்காரர்களிடம் இன்முகமாகப் பேசுவதில் இருவரும் வல்லவர்கள். கெட்ட பழக்கம் எதையும் நான் அவர்களிடம் காணவில்லை.

உமாசங்கரை முதன் முதலில் சந்தித்தது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. நல்ல வெயில் நேரம். தெருவெல்லாம் சூட்டில் பளபளத்துக் கொண்டிருந்தது. நான் சாமான் வாங்கக் கொண்டு வந்திருந்த கைப் பையின் பிடி அறுந்து விட்டது. அதைத் தூக்கிடாமல் ஓசக்கிலேயே எடுத்துச் செல்வது அசாத்தியம். அதற்காக அவனுடைய கடையை நாடினேன். ரப்பர் செருப்புக்கள், அதன் வார் எல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மற்றொரு மூலையில் அவன் உட்கார்ந்திருந்தான். ஒரு வாளியில் தண்ணீர், சில தோல் துண்டுகள், கத்தி, இடுக்கி, ஆணி பிடுங்கி, செருப்பாணி, சில நிக்கல் பக்கிள், நூல்கண்டு, 'காப்லர்ஸ் ஆன்வில்' தேன் மெழுகு அனைத்தும் அததற்குரிய இடத்தில் இருந்தன. சற்றுத் தொலைவில் ஒரு மூன்று கால் சித்திர ஸ்டாண்டு. அதிலே முற்றுப் பெறாத ஓவியம் ஒன்று தொங்கிற்று. தூரிகை, வண்ணப் பெட்டி, கிளிஞ்சல்கள் ஆகியவை பக்கத்தில் இருந்தன.

கடையின் முன்னால் மூன்று பேர்கள் கால் செருப்பைக் கழற்றிக் கொடுத்துவிட்டுத் தீ மிதிப்பது போல் துள்ளிக் கொண்டிருந்தார்கள். நான் என்னுடைய பையைக் கொண்டு போய்க் கொடுத்தேன். அவன் கைகூப்பி வணங்கினான். ''பாபுஜி! இன்னும் அரை மணி பொறுத்து வாருங்கள். தங்கள் வேலைகள் தயாராக இருக்கும்'' என்றான்.

நான் திரும்ப யத்தனித்தபோது அவன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகில் ஒரு கார் வந்து நின்றது. உள்ளே உட்கார்ந்தவாறே ஒருவர் ஒரு ஜோடி ஜரிகைச் செருப்பை அவன் முன்பு வீசினார். 'ஜல்தி கர் இஸ்கோ' — அவருடைய குரலில் உத்தரவிடும் பாவனை இருந்தது. உமா சங்கர் நிமிர்ந்து பார்த்தான். அவர் எறிந்த செருப்புக்களைப் பக்கத்தில் கிடந்த காகிதத்தில் மடித்தான். மரியாதையுடன் எழுந்து நின்று அதைக் காரின் ஆசனத்தில் வைத்து, ''மன்னிக்க வேண்டும், பாபுஜி. என்னிடம் இதை ரிப்பேர் செய்யக் கூடிய தோல் இல்லை'' என்றான் பணிவுடன். ''எதையாவது போட்டுத் தை. பரவாயில்லை.'' மறுபடியும் அவருடைய குரல் உறுமிற்று.

''க்ஷமா கரோ பாபு!'' உமாசங்கர் தனது இருப்பிடத்துக்கு வந்து விட்டான். கார் உதறிக் கொண்டு நகர்ந்தது.

''தம்பி! அது யாருடைய கார் தெரியுமா?'' அவன் கடை முன்பு நின்றுகொண்டிருந்த வாடிக்கைக்காரர்களில் ஒருவன் கேட்டான்.

''தெரியுமே! காரில் நம்பர் பிளேட் இல்லாததை நானும் கவனித்தேன். அவ்வர் அரண்மனையைச் சேர்ந்த கார்களில் ஒன்று'' என்று பதிலிறுத்தான் அவன்.

''பின் ஏன் நீ மறுத்தாய்?''

தலையில் கூடையுடன் கடை முன்பில் நின்று கொண்டிருந்த கிழவியைச் சுட்டிக் காட்டினான் உமா சங்கர். ''அந்தத் தாயின் செருப்பை நான் ஒக்கிட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் அக்பர்பூருக்கு நடந்து செல்ல வேண்டும். காரில் போகிறவர்களிடம் பல ஜோடி செருப்புக்கள் இருக்குமே!''

நான் பக்கத்தில் இருந்த கடையில் போய் உட்கார்ந்தேன். அங்கே பற்பல ஆசனங்கள் இருந்தன. கடையின் முகப்பில் சிறிய மேஜையின் மேல் இருந்த பளபளக்கும் தராசு என்னைக் கவர்ந்தது. ஏறக்குறைய முன்னவனைப் போலவே தோற்றமுடைய இன்னோர் இளைஞன் என் முன்பு வந்து, 'கருப்பஞ்சாறு சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டான்.

''கொண்டு வாயேன்!''

அவனுடைய கை இயந்திரம் சுழன்றது. கான்வாஸ் பையில் பனிக்கட்டியைப் போட்டுக் கட்டையால் அதை அடித்தான். கருப்பஞ்சாற்றில் பனிக்கட்டியைக் கலந்து சில துளி தாழம்பூ எஸன்ஸையும் அதில் இட்டு என்னிடம் தந்தான்.

''உன் பெயரென்ன?'' — என்று நான் வினவினேன்.

''ரவிசங்கர்.''

நான் செருப்புக் கடைப் பக்கம் திரும்பினேன். ''அந்தப் பையன் உனக்கு உறவா?''

ரவிசங்கரின் முகத்தில் எத்தகைய மாறுதலும் இல்லை. அவன் இல்லை என்றோ, ஆமாம் என்றோ ஒரு பதிலும் சொல்லவில்லை.

இரண்டு பேருமே சரணார்த்திகள் என்று நினைக்கிறேன். பாஞ்சால அகதிகளை அல்வர்வாசிகள், சரணார்த்திகள் என்றே அழைத்தார்கள்.

''ஆமாம் ஐயா. எங்களுக்குச் சொந்த ஊர் மியான்வாலி.''

நான் அந்தக் குளிர்ச்சியான கருப்பஞ்சாற்றை உறிஞ்சினேன். இடையிடையே சில வாடிக்கைக்காரர்கள் வந்தார்கள்...அவர்களிலே ஒருத்தி அழகிய பஞ்சாபிப் பெண். துறுதுறுவென்று போகும் விழிகள். கூந்தல் அவ்வளவு கறுப்பில்லை. அங்கங்களின் அழகை வெளிக் காட்டுவதற்கென்றே தைக்கப்பட்டிருந்த இறுகிய உடையில் அவளுடைய எழில் உள்ளத்தை ஈர்த்தது.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

சென்னை மத்திய கிளை (ரிஜிஸ்டர்டு)

ஸ்ரீராம நவமி இசை விழா நிகழ்ச்சி 1966

சென்னை, ஆழ்வார்ப்பேட்டை, கிளை காலனியில் 30-3-66 அன்று மாலை 7-00 : சென்னை கவர்னர் ஸ்ரீ P. சந்திரா ரெட்டி அவர்கள் ஆரம்பித்து வைப்பார்

கச்சேரிகள் தினசரி மாலை 7-30 முதல் ஆரம்பம் – மாறுதல் இருப்பின் அறிவிக்கப்படும்

30-3-66 மாலை 6-மணிக்கு நாதஸ்வரம் 7-மணிக்கு துவக்க விழா

7-30 மணிக்கு ஸ்ரீ தியாகராஜர் சரித்திரம்
பிரம்மஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்
அவர்களால் நடைபெறும்.

31-3-66	ஆலத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யர்	- பாட்டு
	ஸ்ரீ டி. என். கிருஷ்ணன்	- வயலின்
	பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர்	- மிருதங்கம்
	ஸ்ரீ டி. எஸ். வில்வாத்திரி ஐயர்	- கடம்
1- -66	ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி	- பாட்டு
	திருவள்ளூர் ஸ்ரீ சுப்பிரமணியம்	- வயலின்
	தஞ்சாவூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ்	- மிருதங்கம்
	ஸ்ரீ டி. எஸ். வில்வாத்திரி ஐயர்	- கடம்
2-4-66	ஸ்ரீமதிகள் ராதா, ஜெயலக்ஷ்மி	- பாட்டு
	ஸ்ரீ எம். எஸ். அனந்தராமன்	- வயலின்
	பாலக்காடு ஸ்ரீ கிருஷ்ணமணி	- மிருதங்கம்
	பாலக்காடு ஸ்ரீ சுந்தரம்	- கடம்
3-4-66 மாலை 6-15	ஸ்ரீமதி சுலோசனா பட்டாபிராமன்	- பாட்டு
	ஸ்ரீ சி. லட்சுமிநாராயணன்	- வயலின்
	தஞ்சை ஸ்ரீ சிவப்பிரகாசம்	- மிருதங்கம்
மாலை 7-45	செம்பை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர்	- பாட்டு
	ஸ்ரீ எம். எஸ். கோபாலகிருஷ்ணன்	- வயலின்
	ஸ்ரீ டி. வி. கோபாலகிருஷ்ணன்	- மிருதங்கம்
	புதுக்கோட்டை ஸ்ரீ நாராயண ஐயர்	- கடம்
4-4-66	ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் குழுவினர்	- பாட்டு
5-4-66	மதுரை ஸ்ரீ சோமசுந்தரம்	- பாட்டு
	ஸ்ரீ எம். சந்திரசேகரன்	- வயலின்
	ராமநாதபுரம் ஸ்ரீ சி. எஸ். முருகபூபதி	- மிருதங்கம்
	மதுரை ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார்	- கஞ்சிரா
	ஸ்ரீ ஆர். குருமூர்த்தி	- கடம்
13-4-66	ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணா	- பாட்டு
	ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியம்	- வயலின்
	உமையாள்புரம் ஸ்ரீ சிவராமன்	- மிருதங்கம்
	ஆலங்குடி ஸ்ரீ ராமச்சந்திரன்	- கடம்
14-4-66 மாலை 6-15	திருச்சூர் ஸ்ரீ வி. ராமச்சந்திரன்	பாட்டு
	புதுகோட்டை ஸ்ரீ ஆர். ராமநாதன் B. (Mus) -	வயலின்
	குருவாயூர் ஸ்ரீ துரை	- மிருதங்கம்
	ஸ்ரீ ராமகிருஷ்ணன்	கடம்
மாலை 7-45	மைசூர் ஸ்ரீ வி. துரைசாமி அய்யங்கார்	- வீணை
	மைசூர் ஸ்ரீ டி. சௌடையா	- வயலின்
	மைசூர் ஸ்ரீ எம். எஸ். வீரபத்ரையா	- மிருதங்கம்
	மைசூர் ஸ்ரீ மஞ்சுநாதன்	- கடம்
15-4-66	செம்மங்குடி ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாச அய்யர்	- பாட்டு
	ஸ்ரீ வி. தியாகராஜன்	- வயலின்
	வேலூர் ஸ்ரீ ராமபத்ரன்	- மிருதங்கம்
	ஸ்ரீ வி. நாகராஜன்	- கஞ்சிரா
16-4-66	ஸ்ரீ ராமர் படம் ஊர்வலம்	
மாலை 7-00	செம்பனார் கோவில் சகோதரர்கள், மாயூரம்	
	ஸ்ரீ எஸ். ஆர். டி. முத்துக்குமாரசாமி &	
	ஸ்ரீ எஸ். ஆர். டி. வைத்தியநாதன்	- நாதஸ்வரம்
	ஸ்ரீ பெரும்பள்ளம் வெங்கடேச பிள்ளை	- ஸ்பெஷல் தவுல்

ஸ்ரீ ஆஞ்சநேய உத்ஸவம்

17-4-66 மாலை 6-15	ஸ்ரீரங்கம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ்	- பாட்டு
	திருப்பாப்புலியூர் ஸ்ரீ ராஜம் ஐயர்	- வயலின்
	தஞ்சை ஸ்ரீ சிவபிரகாசம்	- மிருதங்கம்
	ஸ்ரீ ரங்காச்சாரி	- கஞ்சிரா
மாலை 7-45	ஸ்ரீ ராம காருண்யஞ்சலி	-கோஷ்டி கானம்

6-4-66	ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரி -	பாட்டு
	ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியம் -	வயலின்
	திருச்சி ஸ்ரீ சங்கரன் -	மிருதங்கம்
	உமையாள்புரம் ஸ்ரீ நாராயணஸ்வாமி -	கடம்
7-4-66	சீர்காழி ஸ்ரீ கோவிந்தராஜன் -	பாட்டு
	குன்னக்குடி ஸ்ரீ ஆர். வைத்தியநாதன் -	வயலின்
	மதராஸ் ஸ்ரீ ஏ. கண்ணன் -	மிருதங்கம்
	கொச்சி ஸ்ரீ பாஸ்கரன் -	கஞ்சிரா
	ஸ்ரீ ஆர். குருமூர்த்தி -	கடம்
	ஸ்ரீ ஆர். வி. பக்கிரிசாமி -	மோர்சிங்
8-4-66	ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் -	பாட்டு
	ஸ்ரீ எம். எஸ். அனந்தராமன் -	வயலின்
	பாலக்காடு ஸ்ரீ குஞ்சுமணி -	மிருதங்கம்
	ஸ்ரீ கே. எம். வைத்தியநாதன் -	கடம்
	உடுமலை ஸ்ரீ மயில்சாமி -	கஞ்சிரா
9-4-66	குமாரி ஆர். பாரதி -	பாட்டு
மாலை	ஸ்ரீ சுப்பண்ணா -	வயலின்
6-30	ஸ்ரீ சஞ்சீவி -	மிருதங்கம்
	ஸ்ரீ ஹரிஹரன் -	கஞ்சிரா
இரவு 8-00	ஸ்ரீ ஏ. கே. சி. நடராஜன் குழுவினர் -	கிளாரினெட்
10-4-66 மாலை 6-15	ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர் -	பஜனை
மாலை	பல்லடம் ஸ்ரீ வி. என். ராஜன்	புல்லாங்குழல்
7-45	ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸன் -	வயலின்
	ஸ்ரீ வி. ராமச்சந்திரன் -	மிருதங்கம்
	ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி -	கஞ்சிரா
	ஸ்ரீ கல்யாணராமன் -	கடம்
11-4-66	லால்குடி ஸ்ரீ ஜெயராமன் & -	வயலின்
	ஸ்ரீமதி பிரம்மானந்தம் -	டூயட்
	பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் & பாலக்காடு ஸ்ரீ ராஜாமணி -	மிருதங்கம்
12-4-66	மதுரை ஸ்ரீ மணி அய்யர் -	பாட்டு
	மைசூர் ஸ்ரீ டி. சௌடையா -	வயலின்
	பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் -	மிருதங்கம்
	மதுரை ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் -	கஞ்சிரா

ஸ்ரீ ராம நவமி விடையாத்தி உத்ஸவம்

18-4-66 மாலை 7-00	சிர. சுந்தர்-சுரேந்தர் சகோதரர்கள் முருகன் பாடல்கள் இன்னிசை	
இரவு 8-00	சிறுமிகள் உமா & ரமா (பயிற்சி: வழுவூர் ஆர். சாமராஜ்)	[நடனம்
19-4-66	தஞ்சாவூர் ஸ்ரீ டி. எம். தியாகராஜன்] & திருவாரூர் ஸ்ரீ டி. வி. நமசிவாயம்	பாட்டு
	லால்குடி ஸ்ரீ ஜெயராமன்	வயலின்
	ஸ்ரீ T. K. மூர்த்தி, உமையாள்புரம் ஸ்ரீ சிவராமன்	மிருதங்கம்
20.4-66	ஸ்ரீ சிட்டி பாபு -	வீணை
	குருவாயூர் ஸ்ரீ துரை -	மிருதங்கம்
	ஸ்ரீ ஏ. ஆர். செல்லப்பா -	கடம்
21-4-66	மதுரை ஸ்ரீ கிருஷ்ணன் -	பாட்டு
	ஸ்ரீ டி. என். கிருஷ்ணன் -	வயலின்
	உமையாள்புரம் ஸ்ரீ சிவராமன் -	மிருதங்கம்
	மதுரை ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார்	கொன்னக்கோல்
	கண்டதேவி ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் -	டோலக்
	ஸ்ரீ கே. எம். வைத்தியநாதன் -	கடம்
	ஸ்ரீ சியாம்சுந்தர் -	கஞ்சிரா
	புதுகோட்டை ஸ்ரீ மகாதேவன் -	மோர்சிங்
22-4-66	ஸ்ரீ டி. எஸ். வல்லீசன் -	பாட்டு
மாலை	ஸ்ரீ வி. சேதுராமையா -	வயலின்
6-30	கண்டதேவி ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் -	மிருதங்கம்
	ஸ்ரீ சி. வி. கே. ஸ்வாமி -	கஞ்சிரா
மாலை	கோயம்புத்தூர் குமாரி கமலா -	பாட்டு
8-00	ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸன் -	வயலின்
	ஸ்ரீ வி. ராமச்சந்திரன் -	மிருதங்கம்
	ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி -	கஞ்சிரா
23-4-66	மணக்கால் ஸ்ரீ ரங்கராஜன் -	பாட்டு
	கண்டதேவி ஸ்ரீ அழகிரிசாமி -	வயலின்
	ராமநாதபுரம் ஸ்ரீ சி. எஸ். முருகபூபதி] -	மிருதங்கம்
	கும்பகோணம் ஸ்ரீ ராஜப்பையர் -	கடம்
	ஸ்ரீ ராஜகோபாலன் -	கஞ்சிரா

(நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன) அனுமதி இலவசம் அனைவரும் வருக

விசேஷ இடங்கள்: நாற்காலி (வினை) ரூ. 30/-, (தினசரி) ரூ. 2/- ஜமுக்காளம் (வினை) ரூ. 15/-, (தினசரி) ரூ. 1/-

டிக்கெட்டுகள் மற்றும் இதர விவரங்களுக்கு :

(காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை) ஸ்ரீ S. H. நாராயண அய்யர், பொருளாளர், 19A, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை-34 போன் : 85112

(மாலை 6-30 மணி முதல் இரவு 9 மணி வரை) தெய்வீக வாழ்க்கைச் சங்கம் பந்தல், வினஸ் காலனி, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18 போன் : 75012

S. G. ரத்னம் அய்யர், தலைவர், "ஸ்ரீநிகேதன்", வீனஸ் காலனி, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

கை மெஷினில் பிழிந்த கரும்பஞ்சாற்றைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றப் போனான் ரவிசங்கர். அவள் சாடை காட்டினாள். மண் குடுவையில் அதை ஊற்றிக் கொடுத்தான். அவள் காசைக் கொடுத்து விட்டுக் குடுவையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

''அவளுக்குப் பேசத் தெரியாதா?''—நான் வினவினேன்.

''ஊஹூம்! ஆனால் அவள் செவிட்டூமை இல்லை. காதுமட்டும் கேட்கும்.'' ரவிசங்கரின் முகத்தில் பரிதாப உணர்ச்சி தோன்றியது.

''அவளும் சரணார்த்தியா?''

''ஆமாம். அவள் குருக்ஷேத்திர முகாமில் பிறந்தாள். பிறந்த உடனேயே தாயை உருட்டிவிட்டாள். யாரோ ஊர் பேர் தெரியாத கிழவர் ஒருவர்தான் அவளை வளர்த்து வருகிறார். அற்புதமாகத் தையல் வேலை செய்வாள். கணேஷ் தெருவில் சிறிய பூத் தையல் கடை வைத்திருக்கிறார் அவளுடைய வளர்ப்புத் தாத்தா. உமா சங்கர் அவளுக்கு நிறைய டிசைன்கள் எழுதித் தருவான். அவன் ஒரு ஆர்டிஸ்ட் என்பது உங்களுக்குத் தெரியுமோ?''

இவ்வாறுதான் தொடங்கியது எங்கள் அறிமுகம். பிறகு அது இறுகி நட்பாக மாறியது. தினமும் நான் அவர்களுடைய கடை வழியாக அலுவலகத்துக்குச் செல்லும் போது இரு இளைஞர்களும் எழுந்து நின்று மலர்ந்த முகத்துடன் எனக்கு வணக்கம் செலுத்துவார்கள். மாலையில் நான் வீடு திரும்பும் வழியில் ரவிசங்கரின் கடையில் சிறிது நேரம் உட்காருவேன். ஒரு கிளாஸ் சர்பத்தோ, தேநீரோ பருகும்வரையில் உமாசங்கரும் என் எதிரே வந்து நிற்பான். நான் எதிர்பாராத வகையில் கேள்விகள் கேட்பான். 'தன்வந்திரி என்பது யார்? யஜுர் வேதம் யாரால் எழுதப்பட்டது? மாக்ஸிம் கார்க்கிக்கு அந்தப் பெயர் வந்த காரணம்?'' இப்படி ஏதாவது எங்கள் உரையாடலுக்குத் தொடர்பில்லாத கேள்விகளாக இருக்கும். நானும் எனக்குத் தெரிந்தவரையில் பதில் சொல்லுவேன்.

ஒரு நாள் கணேஷ் சந்துக்குப் போயிருந்தேன். பூத் தையல் வேலை செய்யும் அந்த ஊமைப் பெண்ணை மறுபடியும் காணவேண்டும் என்ற ஆவலை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் நான் சென்ற அன்று அவள் கடையில் இல்லை. கிழவர் மட்டும் இருந்தார். அவர் பற்பல வேலைப்பாடுகளுள்ள சாளரத் திரை, மேஜை விரிப்பு, தலையணை உறை ஆகியவைகளை எடுத்துக் காட்டினார். 'இந்த ஊர் ஆர்டிஸ்ட் போட்டுத் தந்த சில டிசைன்களை நூலால் வரைந்திருக்கிறாள் என் பேத்தி. ஏதாவது பிடித்தமானால் வாங்குங்கள்' என்றார்.

ஒரு மகாவிஷ்ணுவின் படம். அவரது கால்களில் செருப்பை அணிவித்து அதன் வாரை இழுக்கிறான் ஒரு தொழிலாளி. அடியில் 'தாமாஜி' என்று வரையப்பட்டிருந்தது. தாமாஜி என்பது மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சக்கிலி. மகா பக்தன். தமிழகத்து நந்தன், திருப்பாணாழ்வாரைப் போல் அவனும் போற்றுதற்குரியவன்.

அடுத்தது 'தன்னு பகத்' தனது தோல் ஊற வைக்கும் வாளியிலிருந்து தங்கக் காப்பை எடுத்துத் தரும் காட்சி. தன்னு பகத்தின் வரலாற்றை நான் கேட்டிருக்கிறேன். அவரும் ஒரு செருப்புத் தொழிலாளி. பாஞ்சாலத்தைச் சேர்ந்தவர். தமது நீர் வாளியிலேயே அவர் கங்கையை வரவழைத்ததாகக் கூறுவார்கள். அடுத்த படமும் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. டால்ஸ்டாயின் கதையில் வரும் சக்கிலி மார்ட்டின். அவன் உழைப்பாளிகளின் பாதங்களில் கடவுளையே தரிசிக்கிறான். 'அன்புள்ள இடம் ஆண்டவனின் இருப்பிடம்' என்று அடியில் எழுதியிருந்தது. கடைசியிலே பார்த்த ஓவியம் என் நெஞ்சைக் கிளர்க்கச் செய்துவிட்டது. சிறைச்சாலையில் ஒரு கைதி உட்கார்ந்திருக்கிறார். மும்முரமாகத் தமது தோல்வினைப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். சிறைக் கம்பிக்கு வெளியில் அவரைக் கருணையுடன் பார்க்கிறது ஓர் ஐரோப்பிய உருவம். சிறிது நேரம் யோசித்த பிறகுதான் அது ஜெனரல் ஸ்மட்ஸ் என்று புரிந்தது. கட்டம் போட்ட சட்டையுடன் வீற்றிருந்த செருப்புத் தைக்கும் கைதியை அடையாளம் கண்டுபிடிக்க அதிக நேரம் ஆகவில்லை. நீண்ட செவிகள், பொக்கை வாய், பெரிய மூக்கு, அருளொழுகும் கண்கள், மூக்குக் கண்ணாடி. இவற்றை எந்த இந்தியன்தான் மறக்க முடியும்? நானி மேத்தாவின் வைஷ்ணவ ஜனதோ பாடலை யாரோ என் செவியில் இசைத்தார்கள். படத்தின் தலைப்பும் பொருத்தமாகவே இருந்தது — 'வைஷ்ணவன்'.

எத்தனை நேரம் நான் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருந்தேன் என்று சொல்ல இயலாது. ''பாபாஜி, இவைகளுக்கு உரிய விலையைக் கொடுக்க என்னிடம் பொருளில்லை. என் கையில் இருப்பதைத் தங்களுக்குத் தருகிறேன்'' என்று கூறிப் பணப்பையைக் காலி செய்துவிட்டு வந்தேன். மறுபடியும் அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. எனது இலக்கியப் பார்வையில் ஒட்டியிருந்த அழுக்கு எண்ணம் அந்த ஓவிய திருஷ்டியினால் கழுவப்பட்டு விட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு உமா சங்கர் என்னைக் கேட்டான்: 'டெல்லி இர்வின் ஆஸ்பத்திரியில் உங்களுக்குத் தொண்டை நிபுணர் யாரையாவது தெரியுமா?''

''ஏன், எதற்காகக் கேட்கிறாய்?''

''அவள்தான், அந்தப் பெண்'' — உமா சங்கரின் கண்கள் கீழே பார்த்தன. நான் புரிந்து கொண்டேன்.

''இங்கே ஆஸ்பத்திரியில் பரிசோதித்துப் பார்த்தோம். அவளுக்குக் காது நன்றாகக் கேட்கிறது. நாக்குத்தான் கீழ் அண்ணத்தில் ஒட்டிப் புரள முடியாமல் கஷ்டப்படுகிறாள். டெல்லியிலே ஆபரேஷன் செய்து குணப்படுத்திவிடலாமாம்.''

''ஆமாம், அதை 'டக் டைட்டுநெஸ்' என்று சொல்லுவார்கள். அது ஒரு சிறிய ஆப ரேஷன்தான்.''

''அப்படியா?'' — அவனுடைய கண்கள் மலர்ந்தன. ''அவனுக்குப் பேச்சு வந்து விடுமா, பாபுஜி? உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?'' அவன் ஆவலுடன் கேட்டான். அவனுடைய குரலிலிருந்த தாபத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

'மூக கவி' என்றொரு ஸம்ஸ்கிருதக் கவிஞன் உண்டு. அவன் அற்புதமான கவிதைகளை இயற்றியிருக்கிறான். ஒருகால் அவனுக்கும் இதைப் போன்ற கோளாறுகத்தான் இருக் கும். வசந்த கால மாங்குயிலின் இன் னிசையை அவன் வர்ணிக்கிறான். கோயில் மணி ஓசை கேட்டு உளம் பூரிக்கிறது என்று எழுதியிருக்கிறான். பேச்சை இலக்கியத் துறையில் திருப்பினேன். அவன் அகமகிழ்ந்து நின்றான்.

எப்படி இருந்தால் என்ன? இப்போது சட்டத்தின் முன்பு உமாசங்கர் ஒரு குற்ற வாளி. அதற்குக் காரணம் என்னவாக இருக்க லாம்? ஒருவேளை அந்தப் பெண்தானோ?

கல்யாணராமனும் நானும் சிறைச் சாலையை அடைந்தபோது இருள் சூழ்ந்து விட்டது. இன்ஸ்பெக்டர் மங்காசிங் எங்களை அன்புடன் வரவேற்று மரியாதையுடன் பழ

மனம் ஒரு நிலையில்

மனத்தைச் சஞ்சலம் அடையாதபடி ஒரே நிலையில் வைக்கத் திபெத்தியர் சிறு வயது முதலே முயலுவர். ஒருவன் லாமாவைக் குருவாக அடையச் சென் றால் முதலில் அவர் அவனது மனம் ஏகாக்ர நிலையில் உள்ளதா என்பதைச் சோதிப்பார். அப்படி இல்லாவிடில் அதற்கான பயிற்சியைத்தான் முதலில் தருவார். ஏதாவது ஒரு பொருளை அவன் எதிரில் வைத்து அதையே பார்த்துக் கொண்டும் சிந்தித்துக்கொண் டும் இருக்கச் செய்வதுதான் அந்தப் பயிற்சி.

இது சம்பந்தமான பல சுவையுள்ள கதைகள் திபெத் மக்களிடையே பரவி உள்ளன. இவற்றில் சில ஹாஸ்யம் நிறைந்தவையா யிருக்கும். சுமார் இருபது வயதுள்ள ஒரு வாலிபன் ஒரு லாமாவைக் குருவாகத் தேடிச் சென் றான். கடைசியில் ஒரு லாமா அவனுக்கு அனுக்கிரகம் செய்யவும் இசைந்தார்.



திபெத்திய முறை

''உனது மனம் ஏகாக்ர நிலையில் உள் ளதா?'' என்று வினவினார் லாமா.

''நான் என்ன முயன்றும் என்னால் இதில் வெற்றி பெற முடியவில்லை, ஐயா!'' என்றான் அந்த வாலிபன் வினயமாக.

''நீ என்ன வேலை செய்கிறாய்?'' என்று லாமா வினவினார்.


''யாக் மந்தையைக் காட்டில் மேய்த்து வருகிறேன்'' என்று வாலிபன் கூறினான்.

''நல்லதாய்ப் போயிற்று. நீ உன் னுடைய மந்தையில் உள்ள ஒரு யாக் கையே (பனிப் பிரதேசத்தில் உள்ள ஒரு மிருகம்) தியானம் செய்'' என்று உத்தரவிட்டார் லாமா.

வாலிபன் திரும்பினான். தனது சிற் றூரில் உள்ள ஒரு குடிசையில் இருண்ட அறையில் யாக்கைத் தியானிக்க ஆரம் பித்தான். சில மாதங்கள் கழிந்தன.

லாமா தமது சீடனின் முன்னேற் றத்தைக் கண்காணிக்க அவனுடைய சிற்றூருக்கு வந்தார். வாலிபனது குடி சைக்கு முன்னால் வந்து கதவைத் தட்டி அவனை அழைத்தார். பலதடவை அழைத்த பின்னர் அவன் ''ஐயா, இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லி எழுந்தான்.

ஆனால் உடனே அவன், ''குருதேவா! நான் எப்படி வெளியே வருவது?



னூர். நான் உமாசங்கரைப் பார்க்க வேண்டும் என்றேன். ''அடிபட்ட ரவி சங்கர் அபாயமான நிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். அவன் பிழைப்பானு என்று தெரியாது. இத்தனை நேரத்துக்கு மேல் நீங்கள் குற்றவாளியைக் காணுவதைச் சிறை விதிகள் அனுமதியா. வேண்டுமானுல் உங்கள் செய்தியை அவனுக்குச் சொல்கிறேன். அவன் ஏதாவது சொல்ல விரும்பினுலும் உங்களுக்குக் கூறுகிறேன்'' என்று பணிவுடன் மறுத்து விட்டார்.

நான் சற்று ஏமாற்றத்துடனேயே அவரிடம் பேசினேன். ''இந்த இரண்டு இளைஞர்களையும் எனக்குத் தெரியும். இருவரும் நல்லவர்கள். உழைப்பாளிகள். ஒருவர் நலனை மற்றவர் நாடுபவர். உமாசங்கர் திடீரென்று கோபமுற்று நண்பனைத் தாக்க வேண்டும் என்றுல் அதற்கு ஏதாவது தக்க காரணம் இருக்க வேண்டும். அவன் அவ்வளவு எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவன் இல்லை'' என்றேன். பிறகு உமா சங்கரின் நேர்மை, உழைப்புத் திறன், கலைத் திறமை, ரவி சங்கரின் சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் குறித்து எனது சுய அனுபவத்தை அவருக்குக் கூறியதோடு அந்த ஊமைப் பெண்ணைப் பற்றியும் சொன்னேன். குற்றவாளிகளிடையே பழகிப் பழகி மரத்துப்போன மனமுடைய மங்காளிக்கூட என் வார்த்தைகளில் ரத்தை

இருக்க....

டி. எஸ். ராஜு¨சர்மா

இந்த நோக்கத்தைக்கூட அறியாத சில சீடர்களும் உண்டு. ஒரு லாமா தமது சீடனுக்குப் பயிற்சி அளித்து வந்தார். அவனுடைய தலையில் வெண்ணெய் நிரம்பிய விளக்கு ஒன்றை வைத்தார். விளக்கு நமது நாட்டின் அகல் விளக்குக்குச் சமமானது. தாம் திரும்பும் வரையில் ஒரே நிலையில் யோகாசனத்தில் அமர்ந்திருக்க உத்தரவிட்டார் லாமா.

சில நிமிடங்களில் விளக்கில் இருந்த வெண்ணெய் தீர்ந்துவிட்டது. திரியும் எரிந்துவிட்டதால் மாணவன் விளக்கைக் கீழே வைத்துவிட்டான். அவன் இந்தப் பயிற்சியின் உள் கருத்தை அறியவில்லை.

குரு லாமா மறுநாள் வந்தபோது மாணவன் அதே நிலையில் யோகாசனத்தில் அமர்ந்திருந்தான். ''விளக்கில் உள்ள வெண்ணெய் தீர்ந்துவிட்டதால் நான் அதைத் தனியாக எடுத்து வைத்து விட்டேன்'' என்றுன்.


''நீதான் தியானத்தில் இருந்தாயே? உனக்கு விளக்கு அணைந்தது எப்படித் தெரிந்தது? உன்னுடைய தலையில் ஏதோ ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்பது கூட உனக்கு எப்படித் தெரிந்தது?'' குரு லாமா மடக்கினூர். அப்போதுதான் மாணவனுக்குத் தனது தகுதிக் குறைவு தெரிந்தது.

குடிசையின் வாயில் சிறியது. அதனுல் அகன்று நீண்டிருக்கும் எனது கொம்புகள் நுழையாதே. இடிக்குமே! என்ன செய்வது?'' என்று கேட்டான்.

அனி (பிக்ஷுணி) ஒருத்தி தனது குருவின் தியானமாகவே பயணத்தை முடித்துத் திரும்பினுள். அவளுடைய தோளில் அவளுடைய குரு லாமா உட்கார்ந்திருந்தார். அவர் நல்ல பருமன். தடித்து வளர்ந்த உடல். அவரது தியானத்திலேயே இருந்த அந்த அனி சுமை தாங்க மாட்டாது தவித்தாள். மறுபடியும் எப்படியோ சாமர்த்தியமாகப் பயணத்தை முடித்தாள்.

புத்த விஹாரத்தை அடைந்ததும் கீழே இறங்கிய குரு லாமா அவளைப் பார்த்துக் கேட்டார்: ''நான் சொன்னபடி சரியாக நடந்து கொண்டாயா?''

''குருதேவா, அப்படியே நடந்து கொண்டேன், ஆனுல் தங்கள் சுமை தாங்காது தவித்தேன். அதனுல் சற்று இடமாற்றம் செய்ய எண்ணித் தங்களைக் கீழே இறக்கி விட்டுவிட்டேன். தங்கள் தோள் மீது நான் ஏறி எஞ்சிய பயணத்தை முடித்துத் திரும்பினேன்'' என்றுள் அந்த அனி. மனத்தை ஒரு நிலைப்படுத்துவதில் அந்த அனி வெற்றி பெற்று விட்டாளில்லையா?



காட்டுவது எனக்குச் சிறிது வியப்பை ஊட்டியது. ''நீங்கள் நாளைக் காலையிலே வாருங்கள். நாம் உமா சங்கருக்குச் சாதகமாக என்ன செய்யலாம் என்று யோசித்துச் சொல்கிறேன்'' என்று உறுதி அளித்தார்.

பிறகு நாங்கள் இருவரும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். ரவிசங்கரின் பொட்டில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. இரண்டு புட்டி இரத்தம் செலுத்திய பிறகும் அவன் பிரக்ஞையின்றிக் கிடந்தான். நாங்கள் வீடு திரும்பும்போது நேரம் நள்ளிரவை நெருங்கி விட்டது.

மறு நாள் காலையில் நான் மட்டும் சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தேன். மங்காசிங் என்னைத் தனியறைக்கு அழைத்துச் சென்றார். 'உங்கள் உமாசங்கரைக் குறித்து நாம் எண்ணியதெல்லாம் தவறு'' என்று அவர் கூறியதும் என் வயிற்றில் குழி விழுந்தது. அந்தக் கணத்தில் அவன் ஓவியங்களில் விவரித்த காட்சிகளும், அவை என் உள்ளத்தில் தோற்றுவித்த மெய்யுணர்வும் என் நினைவுக்கு வந்தன. அந்த அநுபவம் பொய்யல்லவே! அவனால் எப்படித் தவறு செய்ய முடியும் ?

இன்ஸ்பெக்டர் தொடர்ந்து கூறினார். ''அவன் ரவிசங்கரைத் தாக்கியதற்கு என்ன காரணம் எனக்! கேட்டு நேற்றிரவு வெகு நேரம்வரை வாதாடினேன். அவன் கடைசி வரையில் இது குறித்துப் பேச மறுத்து விட்டான். இறுதியாக ஒரு நிபந்தனையின் பேரில் சொல்ல ஒப்புக் கொண்டான்.''

''என்ன அது?''

மங்காசிங் வாசற் கதவைப் பார்த்தார். பிறகு குரலைத் தணித்துக் கொண்டார். ''நீங்கள் இதை யாரிடமும் சொல்லாதீர்கள்'' என்ற பீடிகையுடன் தொடங்கினார். நான் தலையை அசைத்தேன்.

''அவன் ரவிசங்கரைத் தாக்கிய இரண்டு கிலோ எடைக் கல்லை எடுத்து மறைத்து விட்டு அதன் இடத்தில் அதே எடையுள்ள இன்னொரு கல்லை வைத்துவிட வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை!''

எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'அதனால் அவனுக்கு என்ன லாபம்?' நான் யோசித்துப் பார்த்தேன். நியாய உணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகத் தொங்கும் தராசின் ஒரு தட்டின் கீழ் அந்த எடைக் கல்லை நான் அடிக்கடி கண்டதுண்டு. ஆனால் அது மட்டும் எப்போதும் சாமான் நிறுக்கும் தட்டுக்கு நேர் கீழேதான் இருக்கும். அதன் இடம் மாறியதே இல்லை. எனக்கு ஏதோ பொறி தட்டிய மாதிரி வெளிச்சம் தட்டுப்பட்டது.

''ஏன் அந்தக் கல்லில் காந்தசக்தி ஊட்டப்பட்டிருந்ததா?'' நான் பளிரென்று கேட்டேன்.

மங்காசிங்கின் முகம் மலர்ந்தது. அவர் என் கையைப் பிடித்துக் குலுக்கினார். ''மதராஸிகள் உண்மையிலேயே புத்திசாலிகள்தான்'' என்று பாராட்டினார்.

''.....நெடுநாட்களாக ரவிசங்கர் இப்படி வாடிக்கைக்காரர்களை ஏமாற்றி வந்திருக்கிறான். நேற்று அந்த ஊமைப் பெண் மாம்பழம் வாங்க வந்தாளாம். பழம் வாங்கிச் சென்றவள் சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்ப வந்து எடையைப் பற்றிக் குறை கூறி விவாதிக்க முனைந்திருக்கிறாள். அவளை மிரட்டித் திருப்பி அனுப்பி விட்டான் ரவிசங்கர். விவகாரத்தைச் செவியுற்ற உமாசங்கர் கையில் தைக்கும் குத்தூசியுடன் அங்கு வந்திருக்கிறான். தராசின் பக்கத்தில் சென்றதும் அந்தக் குத்தூசி எடைக்கல்லில் ஒட்டிக் கொண்டு விட்டது. ஒரே கணத்தில் அவனுக்குத் தராசின் மர்மம் விளங்கி விட்டது.

''தன் இனத்தைச் சேர்ந்த ஓர் அகதி, தன் மொழி பேசுபவள், அதிலும் ஒரு பெண், அபலை, ஊமை என்று கருதாமல் அவளையும் தன் நண்பன் ஏமாற்றத் துணிந்ததில் உமாசங்கர் பொங்கி விட்டான். தன்னை மீறிய வேகத்தில் அந்த எடைக் கல்லை எடுத்து வீசியிருக்கிறான். இதிலே வியக்கத்தக்க செய்தி என்னவென்றால் தன்னுடைய நண்பன் நேர்மையற்றவன் என்ற செய்தி பிறருக்கு எட்டக் கூடாது என்று உமாசங்கர் எண்ணுகிறான், பாருங்கள், அதுதான்.....''

இன்ஸ்பெக்டரின் மேஜையின் மேல் இருந்த படத்தை அப்போதுதான் கவனித்தேன். ''இதை வரைந்தது யார், உமா சங்கரா?'' என்று வினவினேன்.

''ஆமாம்'' என்று அவர் பதிலிறுத்தார்.

நான் அந்தப் படத்தைக் கையில் வாங்கிப் பார்த்தேன்.

அழகிய அரசவை முற்றம். விராட மன்னனும் கங்கபட்டரும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கும் காட்சி. சினங்கொண்ட மன்னர் வீசிய சொக்கட்டான் காய் கங்கபட்டரின் நாசியில் பட்டு உதிரம் வடிகிறது. சேடி சைரந்திரி கையில் ஒரு தங்கக் கிண்ணத்துடன் பதறி ஓடி வந்து அந்த உதிரம் கீழே சிந்தாமல் ஏந்த முன்வருகிறாள். இதைக் கண்ணுற்ற வல்லபனான பீமன் முற்றத்தில் இருக்கும் மாபெரும் விருட்சத்தை உலுக்குகிறான். கட்டடத்தின் அடித்தளமே அதிர்கிறது. கங்கபட்டர் தமது இடது கையை உயர்த்தி அவனைத் தடை செய்கிறார். தர்மகிரந்தியான குதிரைக்காரன், தந்திரபாலனான ஆயன், பிருஹன்னளையான அலியுருவம் எல்லோரும் பீதியுடன் இந்தக் காட்சியைக் கண்ணுறுகிறார்கள். என் உடம்பு புல்லரித்தது. இந்த விராட பர்வக் கதையை அவனுக்குச் சொன்னதே நான்தான்.

'அல்வார் பிரதேசம்தான் முன்பு விராட ராஜ்யமாக இருந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று இன்ஸ்பெக்டர் மங்காஸிங்கைக் கேட்டேன்.

''அப்படியா?'' என்று மட்டும்தான் அவரால் அதிசயத்துடன் கூற முடிந்தது.

அவருடைய ஆசனத்துக்குப் பின்புறம் உயரே சுவரில் மாட்டியிருந்த தராசின் படம் என்னை நோக்கிப் பொருள் பொதிய நகைத்தாற்போல் இருந்தது.

அத்தியாயம் அறுபத்தைந்து

பூநாகம்

எத்தனை பெரிய விஷயத்தை எவ்வளவு சுருக்கமாகச் சொல்லி விட்டாள் கன்னியம்மாள்! தன் தாயின் சமர்த்தை எண்ணி உள்ளூறச் சிரித்துக்கொண்டான் நச்சி. அத்துடன், தனக்கு இத்தனை காலமாகத் தெரியாமலும், தான் தெரிந்து கொள்ளாமலும் இருந்த அவ்விஷயத்தை — வேதா சபேசனை நேசிக்கிறாள் என்பதை — அவள் எப்படியோ கூர்ந்து கவனித்துத் தெரிந்துகொண்டிருப்பது மல்லாமல், அதுபற்றி ஏற்கனவே நிறையச் சிந்தித்து ஒரு முடிவுக்கும் வந்திருப்பதை எண்ணிப் பிரமிப்படைந்தான். சிறிது நேரம் கழித்து, ''எல்லாம் சரிதாம்மா! அப்படி ஒரு பேச்சு நடத்தி விஷயம் படிஞ்சு போச்சுன்னு வைச்சுக்க; அப்ப இன்னு பண்ணுவே? வெறுங் கையாலே முழம் போடுவியா?'' என்று கேட்டான்.

''நீதான் பயாஸ்கோப்புக்குப் பாட்டுக் கட்டி ஆயிரமாயிரமா மலக்கிறயே, அதிலே கண்ணாலத்தை நடத்திப்பிட்டாப் போவுது!'' என்றாள் கன்னியம்மாள் எரிச்சலுடன்.

நச்சிக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் அசடு வழியச் சிரித்தான்.

''கேள்வி கேட்க வந்துட்டான், கஸ்மாலம்! அதான் இருக்குதே ரெண்டு மாடுங்க; அதிலே ஒண்ணை வித்துக் காரியத்தை முடிக்க வேண்டியதுதான்!'' என்று அலட்சியமாகச் சொல்லிக்கொண்டே பிடுங்கிப் போட்ட வைக்கோலைச் சுருட்டி எடுத்துக்கொண்டு கொட்டகையை நோக்கி விரைவாக நடந்தாள் கன்னியம்மாள்.

அவளின் இந்தப் பதிலைக் கேட்டு நிஜமாகவே ஆச்சரியப்பட்டுப் போன நச்சி



வீட்டினுள்ளே சென்று தன் கந்தல் பாயைப் பிரித்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

வேதா இப்போதும் படுத்தே கிடந்தாள். அவள் விழித்துக் கொண்டிருக்கிறளா, தூங்குகிறளா என்றும் தெரியவில்லை.

சற்று நேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்த நச்சி, மெல்லக் கனைத்துவிட்டு, ''தங்கச்சி!'' என்றான்.

வேதா உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ஆனல் நச்சியைப் பார்க்காமல், கட்டைச் சுவர்ப் பக்கம் திரும்பிக் கொண்டு தூக்கக் கலக்கத்தில் கண்ணைக் கசக்குவதுபோல் பாவனை செய்தாள்.

''இன்னு தங்கச்சி? உடம்புக்கு இன்னு?''

''ஒன்னுமில்லேன்னு!'' என்றாள் வேதா அவனைப் பார்க்காமலே.

''சாப்பிட்டுவிட்டாயா?''

''ஊம்...''

''நான் இன்னும் சாப்பிடலே!''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னல் சாப்பிட்டு விட்டுத். தானே வெளியே போனய்?''

''அப்போ நீ இவ்வளவு நேரம் தூங்கலே, முழிச்சுக்கிட்டுத்தான் இருந்திருக்கிறே; இல்லேயா?''

வேதா மௌனமாகத் தலை குனிந்தாள்.

''தங்கச்சிக்கு என்மேலே இன்னு கோவம்?''

அவள் இப்போதும் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தாள்.

''உன் அப்பாவையும், அம்மாவையும் நினைச்சுக்கிட்டு வருத்தப்படறியா?''

சட்டென்று திரும்பிய வேதா அவனைக் கண் கலங்கப் பார்த்து, ''அண்ணு, தயவு செய்து அப்படிச் சொல்லாதே! நீ சொல்லித்தான் அவர்களை என் அம்மா, அப்பா என்று எனக்குத் தெரியும். அது உண்மையாயிருந்தாலும், அதை உண்மைதான் என்று நான் ஏற்றுக் கொண்டு விட்டேனு, இல்லேயா என்பது எனக்கே இன்னும் தெளிவாகவில்லை. ஆகவே, எனக்கென்று ஓர் அம்மா உண்டு என்றல் அது இந்த அம்மாதான். நீ யாரை அம்மா என்று கூப்பிடுகிருயோ அதுவேதான் என் அம்மா. இதற்கு மேல் என்னிடம் ஒன்றும் சொல்லாதே'' என்றாள் அடைத்த குரலில்.

வாயடைத்துப் போன நச்சி சிறிது நேரம் பேசாதிருந்து விட்டு, ''அது சரி; என் தோஸ்து சபேசன் இங்கே வந்தானு?'' என்று மெல்ல விசாரித்தான்.

வேதா வெடுக்கென்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். பதில் ஏதும் சொல்லவில்லை.



ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

"நான்கூட அவனிடம் பேசி ரொம்ப நாளாயிடுச்சு. ஏன் பேசறதில்லேன்னு அவன் இப்ப கொஞ்சம் நல்ல நிலைமையிலே இருக்கிறான். அப்படி இருக்கிறவனைப் போய்ப் பார்க்கிறது.... அது எனக்குப் பிடிக்கலே. ஆனாலும் அவனைப் பத்தி மத்தவங்ககிட்ட விசாரிச்சுக்கிறேன். எப்பவாச்சும் வழியிலே கண்டுக்கிறதுதான். கண்டுக்கிட்டாலும், நேரில் நின்னு பேசறதில்லே. தலைமறைஞ்சு டபாய்ஞ்சுடுவேன். அதெல்லாம் இருக்கட்டும். அவன் ஏன் இங்கேகூட வரலே?"

"என்னைக் கேட்டால்...? எனக்குத் தெரியாது!" என்று ஒருவித ஆத்திரத்துடன் முணுமுணுத்தாள் வேதா.

"இல்லே; வந்திருப்பாளேன்னுதான் கேட்டேன்..."

"அவர் ஏன் இங்கே வரவேண்டும்?" என்று மீண்டும் அதே குமுறலுடன் பதில் வந்தது வேதாவிடமிருந்து.

இதைக் கேட்டு ஒரு கோணல் சிரிப்புச் சிரித்துக்கொண்ட நச்சி, "அப்படீன்னா, அவனை நானே போய்ப் பார்க்க வேண்டியதுதான்" என்றான்.

வேதா தரையை நகத்தால் கீறிக்கொண்டு மௌனமாயிருந்தாள்.

"எதுக்கு அவனைப் பார்க்கப் போறேன்னு உனக்குத் தெரியுமா தங்கச்சி?"

"எனக்கென்ன தெரியும்?"

"தெரிஞ்சு இருக்கணுமே!"

"தெரியாது."

"இப்பத் தெரிஞ்சுக்கிறயா?"

சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள் வேதா.

"சரி; நாளைக்கோ, மக்கா நாளோ அதை வந்து சொல்றேன்."

வெளுத்துக் கிடந்த அவள் முகம் கொஞ்சமாக மலர்ந்தது.

"ஆமாம்; அதுக்கப்புறம் வேணும், கிணு மின்னு மக்கார் பண்ண மாட்டாயே?"

கலகலவென்று சிரித்துவிட்ட வேதா, "நீ என்ன அண்ணு சொல்றே?" என்றாள் நாணக் குரலில் கொஞ்சலாக.

"அதையெல்லாம் உன் அம்மாக்கிட்டயே கேட்டுக்க. எனக்குத் தூக்கம் வருது" என்றவாறு படுப்பதற்குத் தலையணையைத் தட்டினான் நச்சி.

"இன்னடா, பையா! மணி இன்னா ஆவுது. இப்படிப் பேசிக்கினே இருந்தா நான் தூங்கக் கிங்க வேணுமா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்த கன்னியம்மாள், "காலம்பற எய்ந்திருச்சு வாடிக்கை ஊடுங்களுக்குப் பால் கறந்துட்டு, அந்தக் கையோட வேப்பேரிக்கு வேறபோவணும், நான் போவாக்காட்டி அந்த மினி பொண்ணு அல்லாடிப் போயிடுமே!" என்றபடி அலுப்புடன் படுத்தாள்.

சட்டென்று திரும்பிய நச்சி தன் தாயை ஓரக் கண்ணால் பார்த்துவிட்டுப் புன்சிரிப்போடு படுக்கையில் மெல்லச் சாய்ந்தான்.

ஒரு நிமிடமும் முன்பின்னின்றி, நேற்று குறிப்பிட்டுச் சொன்னபடியே சரியாக இரவு எட்டு மணிக்கு அறைக்குள் எட்டிப் பார்த்த சந்தியாவைக் கண்டு வியப்படைந்து போன சபேசன், தன் குறிப்பு நோட்டில் அன்றைய ஜல்லி வியாபாரக் கணக்குகள் எழுதிக்கொண்டிருந்ததை அப்படியே போட்டுவிட்டு உற்சாகத்துடன் துள்ளி எழுந்து, "வா, சந்தியா!" என்று அன்பு கனிய வரவேற்றான்.

சபேசனைப் பார்த்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தவிர வேறு உற்சாகம் ஏதும் தென்படாதவளாய் ஒரு வறண்ட சிரிப்புடன் உள்ளே வந்த சந்தியா, அந்தச் சிறிய —ஆனால் துப்புரவாகவும், அழகாகவும் விளங்கிய — அறையைச் சுற்றித் தன் பார்வையை ஓட்டினாள்.

"இதுதான் இந்த ஏழையின் இருப்பிடம். இங்கே உட்காருவதற்கு ஒரு நாற்காலிகூட இல்லே" என்று நாணம் தேங்கிய புன்முறுவலுடன் சொன்னான் சபேசன்.

இதைக் காதில் வாங்காதவள்போல் வெகு சகஜமாக வந்து அவனுடைய டிரங்க் பெட்டியின் மேல் அமர்ந்தாள் சந்தியா.

சபேசனின் மனம் குதூகலமடைந்தது. "நான் சொன்ன விலாசப்படி சரியாக வந்துவிட்டாயே? இடம் தெரியாமல் எங்கேனும் அலைவாயோ என்று மிகவும் கவலையாக இருந்தேன்!" — இவ்வாறு சொல்லிக்கொண்டே அவளுக்குப் பக்கவாட்டில் கோணிப் பைகளை உயரமாக மடித்துப் போட்டு உட்கார்ந்தான்.

அவனையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்த சந்தியாவின் முகம், காலைப் பனி மூட்டத்தில் மெல்ல மெல்ல இதழ் பிரியும் ரோஜாப் பூப்போல் ஒரு வேதனை அழகுடன் மலர்ந்தது. "நான் இங்கே இப்போது எதற்காக வந்திருக்கிறேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா?" என்று வினவினாள் இங்கிதமாகச் சிரித்துக்கொண்டே.

"நேற்று உன்னிடம் ஏதோ கேட்டேன். அதற்குப் பதில் சொல்ல இன்று இங்கு வருவதாகச் சொன்னாய். ஆனால் எனக்கு இப்போது அதெல்லாம் முக்கியமாகப் படவில்லை..."

"ஏன் அப்படி?"

"என்னை நீ பார்ப்பதற்காக வந்திருக்கிறாயே, அது ஒன்றே போதும்போல் இருக்கிறது!"

"இல்லே; நீங்கள் அதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்."

"ஏன் அப்படி?" என்று அவன் முன்பு கேட்ட மாதிரியே முகத்தை வைத்துக்கொண்டு குறும்பாகக் கேட்டான் சபேசன்.

"அப்போதுதான் என்னை உங்களால் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும்."

குறும்புச் சிரிப்பு மறைந்து அவளைக் குறுகுறுவெனப் பார்த்தான் அவன்.

"என் தந்தையின் நண்பரான அந்த அகதி வாலிபரைப் பற்றித்தானே நேற்று என்னிடம் கேட்டீர்கள்?"

★ ★ ★ ★

பெருந்தகைய 'நோபல்' பரிசைப் பெற்று இந்தியாவின் பெருமையினை உயர்த்திய கவி ரவீந்திரநாத் தாகூரும் சர் சி. வி. ராமனும் அப்பரிசினை அடைந்தது இலக்கியத்திலும் விஞ்ஞானத்திலும் பல அற்புதங்களையும் செய்தமைக்காக. வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அவ்விருவரும் அப்பரிசுத் தொகையைக் 'கோட்டை' விடுவதில் மட்டும் ஒற்றுமை காட்டியிருக்கிறார்கள்.

இந்த அதிசய மனிதர்கள் நோபல் பரிசுடன் அளிக்கப்படும் தொகையைப் பாங்குகளில் முதலீடு செய்ய, அவை இரண்டும் திவாலாகி விட்டன!

''திவாலான நோபல் பரிசுகள்''



பெங்களூரில் கோபால் ராவ் என்பவர் நிர்வகித்த பாங்கில் முதலீடு செய்த ராமன் அவர்கள் அது திவாலானபோது நகைச்சுவையாக குறிப்பிட்டது: ''எனது நோபல் பரிசைக் கோபால் ராவ் தட்டிக்கொண்டு போய் விட்டார்.'' —மல்லையான்

★ ★ ★ ★ ★ ★

''ஆமாம்...''

''அவர் உண்மையில் ஓர் அகதி அல்ல!''

திடுக்குற்றுப் போன சபேசன், ''என்ன?'' என்று அவசரமாக நிமிர்ந்தான்.

''அந்த வாலிபரின் பெயரையும் கேட்டீர்கள் அல்லவா? பிமல் குமார்! ஆனால் அது அவருடைய உண்மைப் பெயரல்ல...''

மேலும் அதிர்ச்சியுற்ற சபேசன் அவளைப் பரபரப்புடன் பார்த்தான்.

''பாகிஸ்தானில் வாழ்விழந்து வளமிழந்து, அல்லல் பல பட்டு, ஆறாத் துயரத்தோடு குடிபெயர்ந்த ஆயிரமாயிரம் அகதிகள் இந்தியாவுக்குத் தினம் தினம் வந்துகொண்டே இருந்தார்கள் அல்லவா? அப்படி வந்தவர்கள் அவ்வளவு பேரும் முழுக்க முழுக்க அகதிகள் என்று சொல்ல முடியாது. அகதிகள் அல்லாத சில விஷமிகளும் அவர்களோடு கலந்து வந்தார்கள். விஷமிகள் என்றால், இராணுவ ரீதியில் திட்டமிட்டுப் பயிற்சி அளித்து அனுப்பி வைக்கப்படும் ஒற்றர்கள், ஊடுருவல்காரர்கள் என்று அர்த்தம். உண்ணும் அரிசியில் வேண்டுமென்றே கலக்கப்படும் வெள்ளைக் கற்களைப்போல் அகதிகளோடு அகதிகளாக அவர்களும் கலந்து வந்தார்கள். அவர்களை இனம் கண்டுபிடிப்பது மிக மிகக் கடினம்....''

பீதியால் பேயறையப்பட்டவன் போல் ஆன சபேசன், ''அவர்கள் இங்கே வந்து என்ன செய்கிறார்கள்?'' என்று துடிப்புடன் கேட்டான்.

சிறுபிள்ளைத்தனமான இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல விரும்பாதவன்போல் சற்று நேரம் பேசாதிருந்த சந்தியா வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு சொன்னாள்: ''நீங்கள் கண்ணாலும் கண்டிருப்பீர்கள், காதாலும் கேட்டிருப்பீர்களே! இந்திய சர்க்காரும், இந்திய மக்களும் தங்களை அலட்சியமாகவும், ஓர வஞ்சனையுடனும் நடத்துவது போன்ற அதிருப்தி எண்ணத்தை அகதிகளின் மனத்தில் ஏற்படுத்துவது; அதைக் கொண்டு அதிகமான, நியாய வரம்புக்கு மீறிய சௌகரியங்களை அவர்கள் கோரச் செய்து, அவை அளிக்கப்படவில்லையானால் உடனே கலவரங்களில் இறங்கத் தூண்டிவிடுவது; இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளை வைத்துக்கொண்டு அகதிகளுக்குள்ளேயே வெறுப்பையும் விரோத குரோதங்களையும் வளர்ப்பது. வாழ்க்கை சீரழிந்துபோன நிலையிலும், இனியாவது வாழ வேண்டும் என்ற பேராசையுடன் வந்திருக்கும் அகதிகளின் பலவீனமான மனத்தை இத்தகைய திசைகளில் திருப்பி விடுவது எளிதான காரியம் அல்லவா? இவை தவிர அந்தப் போலி அகதிகள் இன்னும் சில நாசகரமான காரியங்களிலும் ஈடுபடுவது உண்டு. அதாவது, இந்தியப் பிரஜைகளாகவே - இருக்கும் சில தேச விரோத சக்திகளுடன் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்பு கொள்வார்கள்; அவர்களைக் கொண்டு பெரிய பெரிய தொழிற்சாலைகளில் போட்டிச் சங்கங்களை ஏற்படுத்துவது. அதனால் தொழிலாளர்களுக்கிடையே பிளவு உண்டுபண்ணுவது. பிறகு தொழிலாளி–முதலாளிகளுக்கிடையில் பூசலைத் தூண்டிவிடுவது. வேலை நிறுத்தங்களில் ஈடுபட வைப்பது. இதனால் இந்தியாவின் உற்பத்தித் திறனைக் குறைப்பது, பொருளாதாரச் சிக்கலை உண்டு பண்ணுவது, அமைதியைக் குலைப்பது, ஜனநாயக ரீதியில் எங்கேனும் ஒரு கிளர்ச்சியோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டமோ நடந்தால் அதைப் பலாத்கார வழியில் திருப்பி விட்டு, சட்ட ஒழுங்கை மீறி, உயிருக்கும் உடைமைக்கும் சேதம் உண்டாக்குவது — இப்படிப் பல!...''

''இம்மாதிரியான நாச வேலைகளில் ஈடுபடும் விஷமிகளில் அந்தப் போலி அகதி வாலிபனும் ஒருவன்; அப்படித்தானே?'' என்று தன் ஆத்திரத்தைப் பொறுக்க மாட்டாமல் குறுக்கிட்டுக் கேட்டான் சபேசன்.


''ஆமாம்.''

''அவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவனை அடிக்கடி வந்து பார்க்கும் அந்த மலையாளிப் பேர்வழி?''

''அவர் இங்கே இருக்கும் ஓர் அரசியல் கட்சியின் இடதுசாரிப் பிரிவைச் சேர்ந்தவர்!''

''இந்த நாட்டில் இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளிலும்தான் வலதுசாரிகள், இடதுசாரிகள் என்று இருக்கிறார்கள். இவர் எந்தக் கட்சியின் இடதுசாரி?''

விஷயம் புரியாத ஓர் அப்பாவியைப் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்த சந்தியா, ''அது எனக்குத் தெரியாது!'' என்றாள். (தொடரும்)





விருந்தாளிகள்!

மாலைப் பொழுது நீண்டுகொண்டே வந்தது. சுவர்க் கடிகாரம் ராகம் போட்டுப் பாடி நான்கு அடித்து ஓய்ந்தது. சமையற்கார ராமன் ஓவல் கரைத்துக் கொண்டு வைத்தவன், "இரவுச் சாப்பாட்டுக்கு...." என்று தலையைச் சொறிந்தவாறு கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம் போ. அண்ணாவோ ஊரில் இல்லை. சூடாக ஒரு டம்ளர் பால் கொடு, போதும். உனக்குத் தேவையானால் சமைத்துக் கொள்" என்றேன்.

இதே சமயம் போன் மணி அடித்தது. யாராக இருக்கும்? கௌசல்யாவாக இருக்குமோ? இரண்டு மூன்று நாட்களாக அவள் என்னிடம் பேசவேயில்லையே! ரிசீவரை எடுத்துக் குரல் கொடுத்தேன்.

"ஹலோ..."

"ஹலோ! நான்தான் பாஸ்கர் பேசுகிறேன். நானும் கௌசல்யாவும் உங்களுடன் முக்கியமான விஷயம் பற்றிப் பேச இரவு ஏழரை மணிக்கு வருகிறோம்..."

"அவளுக்குப் பேச ஒழிவில்லையாக்கும்?"

"அதெல்லாம் இல்லை. அதுதான் நேரவே வருகிறோமே!"

'டொக்'கென்ற சத்தத்துடன் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இரவு ஏழரை மணிக்கு வந்தால் கௌசல்யா சாப்பிட்டு விட்டுத்தான் போவாள். எந்த நேரத்தில் வந்தாலும் அவளுக்கு அடுப்பங்கரை ஆராய்ச்சிதான். ஆவக்காய் ஊறுகாய்ச் சாதமும், வடகமும் பொரித்துப் போட்டாக வேண்டும். பெரிய சாப்பாட்டுராமி அவள்!

வாசல் தாழ்வாரத்தில் ராமனின் தலை தெரிந்தது.

"ராமா!" என்று அழைத்தேன்.

பவ்யமான தோற்றத்துடன் இடுப்பில் வரிந்து கட்டிய துண்டோடு ராமன் எதிரில் வந்து நின்றான்.

"ராமா! கௌசல்யாவும், பாஸ்கரும் வருகிறார்கள். உனக்கு வடித்துக் கொள்வதோடு கூடக் கொஞ்சம் சாதம் வடித்துவிடு, போதும்!"

"அதற்கென்னம்மா, சமையல் செய்வதற்கே நேரம் இருக்கிறது. ஒரு சாம்பார் வைத்து, உருளைக் கிழங்கு பொடிமாஸ் செய்தால் ஆயிற்று...:" இப்படிச் சொல்லிக் கொண்டே ராமன் உள்ளே போனான். அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம் சமையலறையிலிருந்து வெங்காய மணம் வீசியது. ராமனுக்கு விருந்தினர் வருகிறார்கள் என்றால் ஒரே உற்சாகம்.

சரியாக ஏழரை மணிக்கு வாசலில் கார் வந்து நின்றது. பாஸ்கரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கௌசல்யா முன்புறம் சரிந்து விழுந்த பின்னலைப் பின்னால் தள்ளியபடி வெளியே வந்தாள். காரின் பின்புறத்திலிருந்து குழந்தைகள் இறங்கினார்கள்.

இறங்கியவர்கள் தங்கள் பெற்றோரைப் பின்தங்க வைத்துவிட்டுப் புல்தரையில் குதித்தோடி வந்து "ஆன்ட்டி" என்று கூவியவாறு என் அருகில் வந்து நின்றார்கள்.

கௌசல்யாவுக்கு மூத்தவன் மகன். குமார் என்று பெயர். என் கழுத்தைச் சுற்றி வளைத்தவாறு என்னை நெருக்கினான். பெண்ணின் பெயர் பத்மா. அவள் என் மடிமீது ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"ஹலோ, சுமித்திரா! உன்னுடைய தனிமையை, சிந்தனைகளை யெல்லாம் கலைக்க நாங்கள் வந்துவிட்டோம். அடடா! இந்த வால்கள் என்ன இப்படித் தலைமேல் ஒன்றும் மடிமேல் ஒன்றுமாக ஏறிக் கொண்டிருக்கின்றன! ஹூம்..." பாஸ்கர் புன்முறுவ

ளுடன் என்னை வணங்கியபடி எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். ராமன்தான் எல்லோருக்கும் தக்காளி ஜூஸ் கொண்டு வந்து வைத்தான்.

குமாரும் பத்மாவும் தக்காளி ஜூஸைக் குடித்துவிட்டுத் தோட்டத்துக்கு விளையாடப் போய் விட்டார்கள்.

குழந்தைகள் வெளியே போய்விட்டார்கள் என்று தெரிந்த தம்பதியர் அர்த்தத்துடன் என் முகத்தைக் கூர்ந்து பார்த்தனர். கௌசல்யாவின் அழகு முகத்தில் துயரத்தின் சாயை படர்ந்திருந்தது. பாஸ்கரனின் நெற்றியில் கவலைக் கோடுகள்.

எனக்கொன்றும் புரியவில்லை. கணவன் மனைவிக்குள் ஏதாவது தகராறு இருக்குமோ? அவர்கள் என் எதிரிலேயே சில்லறைச் சண்டைகள் போட்டுக் கொள்வார்கள். பழம், காய், என்று 'டூ' கூட விடுவதுண்டு. இந்த ஊடலெல்லாம் கணத்தில் மறைந்து கனிப்பில் குழைவதையும் பார்த்திருக்கிறேன்.

நான் ஆவலுடன் அவர்களை நோக்கினேன்.

கௌசல்யாதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

''சுமித்திரா! உன்னிடம் முக்கியமான ஒரு பொறுப்பை ஒப்படைக்க நினைக்கிறோம். இவருக்கு விவசாயத் துறையில் மேலும் ஆராய்ச்சி செய்யப் பண்ணை அமைப்புகளை நேரில் பார்வையிட்டுக் கற்றுக்கொள்ள, இவர் பணி புரியும் ஸ்தாபனம் இவரை அமெரிக்காவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறது. நானும் அப்படியே இவருடன் சென்று கல்வித் துறையில் மேலும் பட்டம் பெற்று வரலாமே என்று எண்ணுகிறேன். குழந்தைகள் இருவரையும் உன் பொறுப்பில் விடலாமென்கிற எண்ணம்...''

''ஓ! விடலாமே! உன் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கிறேன்.''

''அதென்ன, உன் குழந்தை என்றுவிட்டாய்? இருவரின் மனமும் இவ்வாறு ஒட்டிக் கொண்டபோது, உனது எனது என்ற பேதநிலையிலா பேசுவார்கள்? நம் குழந்தைகள் என்று சொல்'' என்றாள் கௌசல்யா உணர்ச்சிப் பெருக்கோடு.

பாஸ்கர் சிரித்தார். பிறகு கௌசல்யா கவலையுடன், ''பத்மாவை விடக் குமாரை நீ எப்படிச் சமாளிக்கப் போகிறாயோ? அவன் ரொம்பவும் விஷமக்காரன். எங்கள் காரையும் இங்கேயே விட்டு விட்டுப் போகிறோம். வேண்டுமானால் வேலைக்காரியை இங்கே வந்துவிடச் சொல்லட்டுமா?'' என்றாள்.

இதற்கு நான் பதில் கூறவில்லை. சாப்பாடு தயார் என்று அறிவிக்க வந்த ராமனே பதில் கூறினான்: ''எதற்கம்மா வேலைக்காரி? நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?'' என்று!

ஏறக் குறைய ஒரு விருந்தே தயார் செய்திருந்தான் ராமன். சாப்பாட்டுக்கு அப்புறம் நேரம் கழித்தே அவர்கள் கிளம்பினார்கள்.

பத்மாவும் குமாரும் 'ஆன்ட்டி'யுடன் இரவைக் கழிப்பதாகக் குதித்தார்கள்.

''இருக்கட்டுமே, பழக வேண்டுமில்லையா?'' என்றார் பாஸ்கர்.

குழந்தைகள் இருவரும் பெற்றோருக்குக் கையசைத்து விடை கொடுத்துவிட்டு உள்ளே வந்து என்னைக் கதை சொல்லும்படி கேட்டார்கள். கதை கேட்டவர்கள், சொன்னவள் எப்போது தூங்கினேனோ தெரியாது.

காலை மலர்ந்து விட்டிருந்தது. ஜன்னலின் திரைச் சீலையை ஒதுக்கிவிட்டு வெளியே பார்த்தபோது எதிரே கருவேல மரத்தில் காக்கைக் கூடு ஒன்று தெரிந்தது. கன்னங்கரிய குஞ்சுகள் நான்கு வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு உட்கார்ந்திருந்தன.. மேலே கரும் புள்ளியாக ஏதோ தெரிந்தது. அது சிறிது சிறிதாக உருவம் பெற்றபோது தாய்ப் பறவை என்று புரிந்தது. அது தன் அலகில் எதையோ கொண்டு வந்தது. கூட்டை நோக்கிப் பறந்து வந்து கனிவுடன் குஞ்சுகளின் வாயில் உணவூட்டியது.

உள்புறம் என் பார்வை திரும்பியபோது குழந்தைகள் இருவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். தாயின் அரவணைப்பில் தூங்குவதாக அவர்கள் எண்ணம். அவர்களுக்குச் செவிலித் தாயாக இருக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்திருக்கிறது



இப்போது. மகத்தான பொறுப்பல்லவா அது? உள்ளங்களின் உறவாடல் மட்டும் அல்ல. சதையின் சதையாக, ரத்தத்தின் ரத்தமாக... அது எப்படி முடியும்?

ராமன் கதவைத் திறந்துகொண்டு வெந்நீர்ச் செம்புடன் உள்ளே வந்தான். குழந்தைகளை உற்றுப் பார்த்துவிட்டு வெளியே போய் விட்டான். அதிகாலையில் வெந்நீரால் தொண்டையைச் சுத்தம் செய்தால்தான் வலி குறைவாக இருக்கிறது. கழுத்தில் சுற்றியிருந்த மப்ளரைக் கழற்றி வைத்து விட்டுப் பல் துலக்கி வாய் கொப்பளித்தேன். குழந்தைகளும் எழுந்தார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளிக்கு விடுமுறை. ஆகவே, அவர்கள் வீடு செல்வது பற்றியோ, வேறு எதைப் பற்றியுமோ நினையாமல் விளையாட்டில் மூழ்கியிருந்தார்கள்.

கௌசல்யா போன் செய்தாள்.

"ஹலோ, சுமித்திரா! குழந்தைகள் உன்னைப் பாடாய்ப்படுத்திப் பம்பரமாய்ச் சுழல வைத்திருப்பார்களே... மச் டிரபிள்சம்... இல்லையா?"

"சே... சே...அதெல்லாம் இல்லே.... அவர்கள் 'டிரேட்' ஆட்டம் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். உன் பிள்ளை இருக்கிறானே பெரிய பிஸினஸ் புள்ளியாக வருவாண்டி...."

கௌசல்யா கலீரென்று சிரித்தாள். "சரி, நாங்கள் இன்று அங்கே வரவில்லே. 'ஷாப்பிங்' போகிறோம். கம்பளி உடை வேறு தைக்க வேண்டும். அடுத்த வாரம் கிளம்ப வேண்டுமே!" என்றாள்.

கௌசல்யாவும் பாஸ்கரும் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டார்கள். 'ஆன்டி'யிடம் சமர்த்தாக இருப்பதாகச் சொல்லிக் குழந்தைகள் பதவிசாக நடந்து கொண்டது எனக்கு வியப்பாக இருந்தது. விண்ணில் விமானம் பறந்து செல்லச் செல்ல மண்ணில் நின்றிருந்த நான் இதயச் சுமையால் அழுந்தி நின்றேன்.

என் அருகே என்னுடன் துளியும் சம்பந்தப்படாத — உறவற்ற இரண்டு குழந்தைகளின் நலனை ஏற்றிருப்பது முற்றிலும் சரியா தவறா என்பதுதான் அந்தச் சுமைக்குக் காரணம்.

பால் வடியும் முகத்தினளான பத்மாவும் ஆண்மைக்குரிய கம்பீரம் இன்னும் அரும்ப வயதாகாவிட்டாலும், அதற்குரிய முரட்டுத்தனம் நிரம்பிய குமாரும் என் கைகளைப் பற்றி வீட்டுக்கு வரும்படி அழைக்கும்வரை நான் கற்பனையில் மூழ்கியிருந்தேன்.

அவர்களுக்கு எல்லாமே ஓரளவு புரிந்திருந்தது. தங்கள் பெற்றோர் ஏதோ காரணமாக வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருந்தனர்.


எங்காவது ஒரு சிணுங்கல், ஓர் அழுகை, முணு முணுப்பு எதுவுமே இல்லை. குழந்தைகள் குழந்தைகளாக இல்லாமல் ஏதோ பெரியவர்களைப் போல் விட்டேற்றியாக நடந்து கொண்டார்கள்.

சமையற்கார ராமனைக் கூப்பிட்டுக் கேட்டேன். "ராமா! உன்னிடம் அவர்கள் ஏதாவது படுத்தல் கொடுத்தல் செய்கிறார்களா?"

ராமன் வழக்கம் போல் தலையைச் சொறிந்தான். "அதெல்லாம் ஒண்ணும் இல்லையம்மா. போட்டதைச் சாப்பிடறதுகள். நாமதான் என்ன, குறைச்சலாகக் கவனிக்கிறோமா இதுகளே? காலம்பற ஜாம், வெண்ணெய் தடவிய ரொட்டி, பால். மத்தியானம் இரண்டு தினுசு காய்கறியோட சாப்பாடு..... மாலையில் பிஸ்கட், பழம், டீ..... ராத்திரி சப்பாத்தி கூட்டு, பால்..... கௌசல்யா அம்மா இருந்தால்கூட இவ்வளவு அக்கறையா கவனிக்க மாட்டார்கள். குறைப்பட்டுக் கொள்ள என்ன இருக்கு?"

ராமனோடு பேசுவதில் அர்த்தமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சாப்பாடு, தூக்கம் இவை மட்டும்தானா குழந்தைகளின் உலகம்? அவை தம் பெற்றோரிடம் நடந்து கொள்ளும் விதம் எப்படி எப்படியோ இருக்குமே!

கௌசல்யா குழந்தைகளின் நலனை விசாரித்துக் கடிதம் போட்டிருந்தாள். குழந்தைகளுக்கே கடிதம் எழுதியிருந்தாள். குழந்தைகள் ஏதாவது தங்கள் குறைகளைப் பற்றி அவளுக்கு எழுதட்டும் என்று நான் அவர்களிடம் தபால் கவரைக் கொடுத்து அவர்களே கடிதம் எழுதிப் போட்டு ஒட்டி ராமனிடம் கொடுத்து 'போஸ்ட்' செய்யும்படி கூறினேன்.



இன்று கேஸல்ஸ்
விற்பனைக்கு விடுவோர் :
எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

பத்மாவும், குமாரும் கடிதம் எழுதி முடித்ததும் என் அறைக்குள் ஓடி வந்தார்கள்.

''ஆன்ட்டி! கடிதாக படிக்கட்டுமா? கேட்கிறீங்களா?'' என்று கேட்டாள் பத்மா.

''நான் படிப்பேன்....'' என்றான் குமார்.


''நான் படிப்பேன்....'' என்றவாறு பத்மா கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

''அன்புள்ள அம்மா,

இங்கே ஆன்டியும், நானும், தம்பியும் சுகம்....'' என்று ஆரம்பித்தது கடிதம். அப்புறம் 'ஆன்ட்டி' அவர்களிடம் அன்பாக இருப்பது. ராமன் அவர்களைக் கவனித்துக் கொள்வது. இவைதாம் கடிதம் முழுதும்.

இவை யெல்லாம் உண்மையா? இதற்கும் மேலாக, மன அந்தரங்கத்தில் என்னைப் பற்றி ஏதாவது குறை இருக்காதா? குழந்தைகளுக்குக்கூட ரகசியங்களை வைத்துப் பூட்டி வைக்கத் தெரியுமோ?

'குறை சொல்லும்படியாக நாம் நடந்து கொள்ளாததால் இப்படி இருக்கிறதுகள் போல இருக்கு' என்று நினைத்துச் சற்றுக் கடுமையாகவே அவர்களிடம் நடந்துகொள்ள ஆரம்பித்தேன்.



"உங்கள் நிழலில் தங்க அனுமதி கொடுத்ததற்கு என் நன்றி சார்!"

''பத்மா! குமார்!'' என்று அதட்டும் குரலில் கூப்பிட்டுப் பள்ளிப் பாடங்களைப் பற்றி விசாரித்தேன். கணக்கிலும், ஆங்கிலத்திலும் அவர்கள் தவறு செய்திருப்பதைச் சுட்டிக்காட்டிக் கோபித்துக் கொண்டேன்.

குழந்தைகள் தலை குனிந்து என் கோபத்தை வரவேற்றார்கள். 'எக்ஸ்கியூஸ் மீ ஆன்ட்டி' என்று பத்மா குழைவுடன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். குமார் வெட்கத்தோடு பென்சிலைக் கடித்தபடி நின்றிருந்தான். அவர்களைப் படிக்கப் போகும்படி சொல்லிவிட்டு, இரவு சாப்பாட்டின் போது அவர்கள் கோபத்துடன் இருக்கிறார்களா என்று கவனித்தேன்.

வழக்கம்போல் ராமனுடன் பேசியவாறு சாப்பிட்டார்கள். படுக்கப் போகுமுன் என்னைக் கதை சொல்லச் சொல்லிக் கேட்டனர்.

இந்தக் குழந்தைகளின் மனத்தைப் பற்றி அறிய நான் என்ன முயன்றும் முடியவில்லையே! கொஞ்சமும் அவர்களின் உள் சுபாவம் வெளிப்படவில்லை. 'சமர்த்துக் குழந்தைகள்' என்று ராமனும், என் அண்ணாவும் வாயாரப் புகழ்ந்தார்கள்.

காலம் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. கௌசல்யாவும், பாஸ்கரும் ஊர் திரும்பினார்கள். அவர்கள் ஊர் திரும்பும் தகவலைத் தாங்கி வந்த கடிதத்தைக் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டினேன். வெகு சாதாரணமாக அதை அவர்கள் கேட்டுக் கொண்டு விளையாடப் போய் விட்டார்கள்!

கௌசல்யாவும் பாஸ்கரும் எனக்குத் தங்கள் நன்றியை வண்டி வண்டியாகச் சமர்ப்பித்துவிட்டுக் குழந்தைகளைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போனார்கள்.

அங்கே அன்றிரவு எனக்கு விருந்து வேறு. இரண்டு வருஷங்களாக என்னுடன் ஒன்றிவிட்ட குழந்தைகள் இல்லாமல் அந்த வீடே என்னவோ போல் இருந்தது. ராமனுக்கும் வேலை ஓடவில்லை. சீக்கிரமே அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். அயல் நாடுகளிலிருந்து வாங்கி வந்த கலைப் பொருள்கள், மற்றும் சமையலறைக்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் காட்டினாள் கௌசல்யா. பிறகு என்னை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, விருந்து தயாரிப்பைப் பார்வையிடச் சென்று விட்டாள். எனக்கு நேரம் போகவில்லை. தோட்டத்தைச் சுற்றி வரக் கிளம்பினேன். கௌசல்யாவின் வீட்டுத் தோட்டம் மிகவும் அழகானது. வகை வகையாக அங்கே செடிகள், கொடிகள் உண்டு. அவற்றைப் பராமரிக்கப் பல ஆட்களும் இருந்தார்கள்.

திராட்சைப் பந்தலின் கீழ் பத்மாவும், குமாரும் உட்கார்ந்து சுவாரசியமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நான் மறைந்திருந்து அவர்கள் பேச்சைக் கேட்டேன்.

''ஏன்டா, குமார்! அப்பா உன்னைக் கோபிச்சுண்டு அடிச்சாளேன்னு வருத்தமா இருக்கியா?'' என்றாள் பத்மா.

''சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லே. பின்னே அடிக்க மாட்டாளா? அமெரிக்காவிலேயிருந்து வாங்கிண்டு வந்த ரயில் பொம்மையைச் சாவி கொடுக்கத் தெரியாம உடைச்சால் நன்னுத்தான் அடிப்பா..... உன்னைக்கூடத்தான் அம்மா கன்னத்தைப் பிடிச்சு நிமிண்டினாளே.....!''

''ஆமா.... 'ஆன்ட்டி' நம்மை அடிச்சதே இல்லேடா. அவா வீட்டுப் புத்தர் பொம்மையை உடைச்சப்போக்கூடப் போனாப் போறதுன்னுட்டா, இல்லையா? தப்பு செஞ்சா அம்மா அப்பாதான் கண்டிப்பா. நமக்கும் பயம் இருக்கும்.....''

''உனக்கு இங்கே பிடிச்சிருக்கா.... 'ஆன்ட்டி' வீடு பிடிச்சிருக்கா, பத்மா?''

''சந்தேகமென்ன? இங்கேதான். அங்கே விருந்தாளி மாதிரிதானே நாம இருந்தோம்?''

''அம்மாகூட அப்படித்தான் சொல்றா. அந்தத் தேசத்துலே எல்லாம் எத்தனை சௌகரியம் இருந்தாலும், இங்கே வந்தப் புறம்தான் மனசு நிம்மதியா யிருக்காம்.''

நான் இதுவரை புரிந்து கொள்ளாமல் இருந்த விஷயத்துக்கு விடை கிடைத்ததும் என் மனம் நிறைந்தது. குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கத் தாயின் அதட்டலும், தந்தையின் கண்டிப்பும் தேவைதான்.

அவர்கள் விருந்தாளிகளாகவே என்னிடம் இருந்தார்கள்.

வட்ட மேஜை

★ பழமையும் புதுமையும்
★ கிண்கிணிமொழி
★ எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மறு வேண்டுகோள்

அமிர்தம்போன்ற நம் கர்நாடக சங்கீதத்தில் 'புதுமை, புதுமை' என்று மரபுக்கு ஒவ்வாத சில புதுப் பாணிகளையும் ராகங்களையும் சிலர் புகுத்தத் தொடங்கியுள்ளனர். இந்தப் புதிய முறை கர்நாடக சங்கீத ரசிகர்கள் பலரைக் குழப்பத்தில் ஆழ்த்தி வருகிறது. இந்தக் குழப்பத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும், ஓரளவு தங்களை விடுவித்துக்கொள்ள முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களின் 'இந்தப் புதுமை'யைப் பற்றிய இனிய கருத்துக்களை 'கல்கி' 13–3–66 இதழில் வெளியிட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பழமைக்கும், மரபுக்கும், கர்நாடக சங்கீதத் துறையின் ஒரு தொல்காப்பியரான ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரின் கருத்துக்களை வெளியிட்டதுபோல் புதுமைக்காக வாதாடும் ஒரு பாரதியின் கருத்துக்களைக் 'கல்கி' வெளியிட்டால் பொதுமக்கள் இரு சாராரின் கருத்துக்களையும் சரியாகப் புரிந்துகொள்ள இயலுமே!

சென்னை-17
11–3–66 கங்கா சாம்பமூர்த்தி

'கிண்கிணி மொழி'த் துணுக்குகளைப் படித்துவிட்டு எங்கள் வீட்டில் பாட்டி முதல் பேத்திவரை, தாத்தாமுதல் பேரன்வரை அனைவரும் ரசித்து மகிழ்ந்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் சில நாட்களுக்கு முன் என் அக்காள் வீட்டில் நடந்த நிகழ்ச்சியை எண்ணியதும் எங்களுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

குழந்தை ராஜினியைப் பார்த்து என் அக்கா, 'அதெல்லாம் முடியாது. உன்னிடம் பீரோ சாவியைக் கொடுத்தால் நீ தொலைத்து விடுவாய்; தரமுடியாது' என்று கோபாவேசமாகக் கூறிக்கொண்டிருந்தாள். அசமயம் ஏதோ வேலையாக வந்த என்னிடம், என் அக்கா, "ஏய், கோகிலா, நீ இன்று கடிகாரத்துக்குச் சாவி கொடுக்க மறந்துவிட்டாயா? மணிதெரியாமல் எனக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை" என்று கூறினள். "சரி, அக்கா!" என்று நான் கடிகாரத்தைக் கையில் எடுத்தபோது ராஜினி பெரிதாக அழுது கொண்டே, "நான் கேட்டா மட்டும் சாவி தரமாட்டேன்னியே. இப்போ அந்தக் கடிகாரத்துக்கு மட்டும் தரச் சொல்றியே. எனக்கும் தந்துதான் ஆகணும்" என்றாள்!

சென்னை–59
11–3–66 கே. கோகிலா

தமிழில் விஞ்ஞானப் படங்கள் வெளி வர வேண்டும், அதற்கு நம் பிரபல நடிகர்கள் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்து வரவேற்கத் தக்கது. நக்ஷத்திர நடிகர்கள் அம் மாதிரி படங்கள் தயாரிக்க உதவி செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல் விஞ்ஞானப் படங்களில் தாங்களே பங்கு பெறவும் வேண்டும்.

உதாரணமாக எம். ஜி. ஆர். பல்லி சுவரிலிருந்து கீழே விழாமல் எப்படிப் பிடித்துக் கொள்கிறது என்ற கருத்தை – விஞ்ஞான விளக்கத்தை, தாமே ஆசிரியர் மாதிரி படத்தில் தோன்றிப் பலகையில் விளக்கம் எழுதி, கையில் குச்சியை ஆட்டியபடி பேசி நடித்தால் கைதட்டல் ஒலி பிளப்பதோடு, காட்சியின் கருத்தும் படம் பார்ப்பவர்களின் – குறிப்பாக மாணவர்களின் மனத்தில் நிலைத்துவிடும்.

திருவிடைமருதூர்
11–3–66 கே. ரகுபதி

அரசாங்கத் தொடர்புடைய படத்துறை நிறுவனங்களுக்கோ, பிலிம் இன்ஸ்டிட்யூட்களுக்கோ, பிலிம் டிவிஷனுக்கோ 'குட்டி கிருஷ்ணன்' அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கலாம். மக்கள் திலகத்தின் பெயரை வேண்டுமென்றே இந்தப் 'பெரிய விஷயத்தில்' இழுத்திருக்க வேண்டாம் என்றே தோன்றுகிறது.

சென்னை–5
10–3–66 அமுத சங்கர்

திரு குட்டிகிருஷ்ணனின் யோசனைக் கட்டுரையை மனதார வரவேற்றுப் போற்றுகிறேன்.

திரு எம். ஜி. ஆர். அவர்களும், சிவாஜி அவர்களும் இந்த விஞ்ஞானத் துணுக்குப் படத் தயாரிப்பில் முழு மனத்துடன் ஈடுபட்டு நம் தெய்வத் தமிழ்நாட்டின் இளம் சந்ததியினர் மேதைகளாக மலர வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரம்பூர்,
10–3–66 ஜடாதரன்

ரேடியோ நாடக விழா கட்டுரையை ஆவலோடு படித்தேன். பெரிதும் ஏமாற்றமடைந்தேன். சென்னை நிலையத்திலிருந்து நான்கு நாடகங்களும், திருச்சி நிலையத்திலிருந்து நான்கு நாடகங்களும் ஒலிபரப்பாயின என்று குறிப்பிட்டுவிட்டு, சென்னையின் நான்கு நாடகங்களைப் பற்றி மட்டும் படம் போட்டு விமரிசனம் செய்யப்பட்டுள்ளது.

திருச்சி நிலையத்தைக் கல்கி புறக்கணித்ததன் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லையே?

சலகண்டபுரம்
10-3-66 ப. கண்ணன்


Edited printed & published by T Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



உங்கள் அழகுக்கு புதுப் பொலிவை அளியுங்கள்!

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் முகம் சோபையுடன் வழவழப்பாகத் தோற்றமளிக்கும்

உங்கள் முகத்திற்கு வசீகரிக்கும் பொலிவை அளியுங்கள். நல்ல அழகியாகத் தோற்றமளிக்க விரும்பும் எந்தப் பெண்மணியும் முதலில் செய்ய வேண்டியது அதுதான். எண்ணெய்ப் பசையில்லாத சௌம்யமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்தால் உங்கள் சருமத்திற்கு மிருதுத் தன்மையும் பாதுகாப்பும் கிடைக்கும். அது சருமத்திலுள்ள பெரிய துவாரங்களை மூடி முகத்தில் 'எண்ணெய் வடியும் தோற்றம்' உண்டாகாமல் தடுக்கிறது... முகத்தில் கருப்புப் புள்ளிகள் உண்டாவதிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாக உபயோகித்தால் உங்கள் வதனம் இயற்கைப் பொலிவுடன் விளங்கும். இந்தக் க்ரீமைத் தடவி அதன்மீது பவுடர் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரேசீராகப் படிந்து மணிக்கணக்கில் கலையாமல் இருக்கும்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகித்து
உங்கள் அழகுக்கு மெருகூட்டுங்கள்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது)

JWT-P-3237


யரிய பண்போடு உபயோகிக்கவும் உதவவும் உகந்தது பனமா
பனமா
இழுக்க இழுக்க
இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
CTC